## உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | அற்புதங்கள் ஆயிரம் | 5 |
| 2 | மநோ சக்தியின் மாயம் | 19 |
| 3. | எட்டு மகா சித்திகள் | 35 |
| 4. | பிரக்ருதியின் பெரிய சட்டங்கள் | 51 |
| 5. | இயற்கையின் திருநடனம் | 66 |


# சித்தி விளையாடல்கள்

## 1. அற்புதங்கள் ஆயிரம்

'சித்தி' என்றால் வெற்றி என்று பொருள். யோகத்தில் வெற்றி; எடுத்த காரியத்தில், நினைத்ததில் வெற்றி எனலாம். மனத்தையடக்குவதில் வெற்றி; மனோசக்தியைச் சேமிப்பதில் வெற்றி; மனத்தை ஒருமுகப்படுத்துவதில் வெற்றி; மனோ சக்தியால் அற்புதம் புரிவதில் வெற்றி என்றெல்லாமும் கூறலாம்.

'சித்து' என்றால், அசாதாரணச் செயல், கண்கட்டு வேலை, பிறரால் ஆகாததை எப்படி என்று புரியாமல் ஒன்றைச் செய்தல் என்றும் பொருள். அதீதக்காரியம் முடியாததை நிறைவேற்றல்.

யோகிகள், துறவிகள், தவசிகள், பக்தர்கள் இப்படி சித்து விளையாடி யுள்ளனர். அதாவது அவர்கள் விரும்பிச் செய்ததுடன், விரும்பாமலேயே கூட அவர்களிடமிருந்து அவை வெளிப்படும் என்பதை 'விளையாடல்' என்று கூறுவர். பெரியவர்கள் குழந்தைகளிடம் விளையாடுவதைப் போல, தீவிரமின்றி, பெரு முயற்சியின்றி எளிதாகப் பிறர் மகிழ்ந்து வியக்கும்படி சித்துகள் புரிவதைச் சித்திவிளையாடல் என்பது வழக்கம்.

இம்முறையில் செய்யப்படுவதெல்லாம் அற்புதம் ஆகும். புலன்களுக்கு அப்பாற்பட்டுப் புரியப்படுபவை. காலம் இடம் இரு கட்டுப்பாடுமின்றிச் செய்யப்படுகின்றவை.

அதாவது கண்களால் காணமுடியாததைக் கண்டு கூறுவது. காதுகளால் கேட்க முடியாததைக் கேட்டல், ஆதாரநிலமின்றி நிற்றல், நடத்தல், தொடாமல் எடுத்தல், இழுத்தல், நகர்த்துதல், அசாதாரணமாகச் சுவை, மணம் அறிதல் ஆகியவை அதிசயங்களாகும்.

RangaRakes

tamilnavarasam.com

மனநிலையை மாற்றுதல், மானசிகமாகப் பேசுதல், எண்ணங்களை அனுப்பிச் செய்தி தெரிவித்தல், திடீரெனத் தோற்றம் காட்டுதல், தோன்றாமல் மறைதல், நினைத்ததைச் செய்து முடித்தல், பிறர் மனத்தை வசியப்படுத்தி வேலையில் ஏவுதல், பிறர் உடலில் புகுதல், அனைத்தையும் ஆட்டிவைத்து அனுபவித்தல் எல்லாம் அற்புதங்களாகும்.

**இதெல்லாம் சாத்தியமா?**

அற்புதங்கள் ஆயிரம் எனும்படி உலகில் செய்யப் பட்டிருப்பவை, செய்யக்கூடியவை எண்ணற்றவை. இதெல்லாம் சாத்தியமா? சத்தியமா? என்றும் கேட்கப்படுகின்றன. செய்து காட்டியவர்களுக்குச் சாத்தியம். செய்து காட்டப் பட்டிருப்பதால் சத்தியம்.

சித்துகள் அதிசயமாக இருப்பதால் இப்படிக் கேட்பர். அடிக்கடி நிகழ்ந்தால், நேரடியாகக் கண்டால், செய்து பழகி விட்டால், அதாவது சாதாரணமாகி விட்டால், சகஜவாழ்வாகி விட்டால் யாரும் இதைக்கண்டு வியக்கவோ, சந்தேகப்படவோ மாட்டார்கள்.

வெள்ளையாக ஓர் அட்டையைக் கழுத்தில் கட்டிக் கொண்டு போகிறார்கள். கம்பெனிக் கதவு திறக்கிறது. அது இல்லையெனில் கதவு திறப்பதில்லை. இதன் ரகசியம் அந்த அடிப்படையில் சூட்சுமமாக உரியவர் படம் இருக்கிறதாம். வெறும் கண்ணால் காணும் நமக்கு அப்படம் தெரிவதில்லை, கதவிலுள்ள பூட்டிற்குத் தெரிகிறது. வெறும் கையை விரித்து வைத்தால் கதவு திறந்து வழிவிடும். வேறு ஆள் கையை வைத்தால் திறக்காது. இதெல்லாம் நமக்குப் புரியாத தொழில் நுணுக்கம், இதன் தர்க்கமுறையை நாமறியோம். ஆனால் இருக்கிறது.

'ரிமோட் கன்ட்ரோல்' டி.வி.யை இயக்குகிறது. கதவுகளைத் திறக்கிறது. காரைக் கிளப்பி ஓட்டுகிறது.

காட்சியை, நிகழ்ச்சியைத் தூர இடங்களுக்கும் அனுப்புகின்றனர். ஒரே நேரத்திலேயே நாம் பேசுவதை நீண்ட தொலைவில் உள்ளோரும் கேட்கின்றனர். எல்லாம் 2-ஜி தலைமையில் 3ஜி அலையால் சாத்தியமாகின்றது. முன்பு



ஒலியின் கலை ஒளியலையாக மாற்றப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது. இப்போது அதைவிட அதிவிரைவான அலைகளில் அனுப்பப்பட்டுக் கொண்டுள்ளன. இப்படிச் செய்திகளும் பொழுது போக்குகளும் ஷாம்பூ, முகக் களிம்புகளின் விளம்பரங்களும் உலகம் பூராவும் பரவிக் கொண்டு நம் கவனத்தைக் கவர்ந்து வருகின்றன. இதெல்லாம் எப்படி? நாமறியாத ஏதோ ஒரு நுணுக்க வேலைப்பாடு விளைவிக்கும் நிகழ்வு. நாமறியாத ஒன்று என்பதால் இது நமக்கு வியப்புதருமதிசயம். கம்ப்யூட்டரின் சில வேலைகளே நமக்கு மலைப்பாக உள்ளன. இவை போலவே மனோசக்தியுள்ள பெரியவர்களிடம் விளையாடும் சித்துகள் நமக்கு சித்துகளாக வியக்கச் செய்கின்றன. யாரிடம் அவை விளையாடுகின்றனவோ அவருக்கு அவை சாதாரணமே. அவற்றைச் செய்து அவர் விளையாடுகிறார் என்று நாம் கூறினாலும் அவரறிவார், அது இயற்கையின் விளையாடல்கள் என்று. இது எப்படி என்றா வியப்புறுகிறீர்கள்?

தினசரி வேலைகளே நம்மால் செய்யப்படுவதில்லை என்பதை உணர்ந்தால் இது புரியும். அதாவது நாம் நினைக்கிறோம், உடல் வேலை செய்கிறது என்போம். இதுவும் தப்பு. நினைப்பதும் பிரக்ருதியே; அதாவது இயற்கையே. உண்மையில் ஆத்மாவான ஜீவரான நாம் யாரும் எதுவும் செய்வதில்லை. நமக்காக நடத்துவது இயற்கையே. ஜடப்பொருளாயினும் இறைவனின் சங்கல்பப்படி நடக்கிறது. இதுவே பெரியவர்களிடம் அவர்களை மகிழ்வுபடுத்த இயற்கையே தன்னில் மாறுதல்களைச் செய்து விளையாடுவதே சித்துகள். அவர்கள் சும்மா பார்த்தபடி இருக்கிறார்கள்.

சிலர் சங்கதியில் மட்டும் இயற்கை அப்படி சித்துகளை உண்டாக்கி விளையாடுவதேன்?

அது இறைவன் சங்கல்பம்; அதாவது தீர்மானம். இயற்கையின் பிடிப்பிலிருந்து விடுபட முயன்று விடுபடும், அதாவது இயற்கையை வெல்லும் கட்டத்திலிருக்கிறார். அவரை விடாமல் தன்கட்டுப்பாட்டில் இயற்கை வைத்துக்கொள்ள இறைவன் தீர்மானிக்கிறார். ஆகச் சிலருக்குத் தம் மனத்தைச் சக்திமிக்கதாக ஆக்கிக் கொண்டவருக்கு இயற்கையால் சித்துவிளையாடும்

RangaRakes

tamilnavarasam.com

நிலை இறைவனால் உண்டாகிறது. இது விடுதலைக்கு இறைவனைச் சேர முயலும் ஜீவருக்கு இறைவன் வைக்கும் ஒரு பரிசோதனையாகவுமுள்ளது. சித்து விளையாட்டுகளால் ஜீவர் மீண்டும் இயற்கையின் பிடியில் மாட்டுகிறாரா? அல்லது சித்து விளையாடல்கள் இயற்கையின் திருநடனம் என்று சுயநலமின்றி, அவை தன் திறமை என்று பெருமையின்றிச் சும்மா சாட்சியாக மட்டும் இருக்கிறாரா என்று இறைவன் கண்காணிக்கிறான் என்றும் கூறலாம்.

அற்புத வேலைகளெனும் அதிசய சித்துகள் **சமாதி, பிறவி, மருந்து, மந்திரம், தவம், மணி** முதலியவற்றினால் மனிதருக்கு அமைவதாக இருக்கின்றன. ஒரு செல் உயிராக உடல் கொண்டு பிறவிக் கடலில் விழுந்த ஜீவன்கள் தனக்குள்ள ஞானவிரிவடைய, பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக உயர் பிறவிகளில் உடல் பெறவருகின்றன. நதிகள் எல்லாம் கடலை நோக்கிச் சேரச் செல்லுவது போன்ற இந்தப் பண்பு வளர்ச்சி பெறும் நிகழ்ச்சியில் ஒவ்வொரு ஜீவரும் இந்த அற்புதச் சித்துபுரியும் திறமையைப் பெறுவோம் என்பது நிச்சய உண்மை. அதாவது பிறவியில் கர்மபந்தம் முன்வினைத்தளைத் திரைவிலக ஜீவர் பெறும் ஆயிரக் கணக்கான அற்புத சக்திகள் பெரும் சித்திகளுள் அடங்குவதாகும்.

அவை **அணிமா, மஹிமா, கரிமா, இலஹிமா, பிராப்தி, வசித்துவம், பிராகாமியம், ஈசத்துவம்.**

பாரத நாட்டு முனிவர்கள் பண்பிலே உயர்ந்தவர்கள், தந்நலமறியாத தவயோகிகள் மஹான்கள் அற்புத ஆற்றல்களைப் பற்றிக் கூறியுள்ளனர். செய்து காட்டியுமுள்ளனர். அவர்களுக்குப் பொய் கூறத் தெரியாது. அதற்கான தேவையற்றவர்கள். உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்த பெரியார்களும் இப்படி அற்புதம் செய்த செய்திகளும் உள்ளன. இவை பங்கு கொண்ட காவியங்களும், பெரியோர் பேச்சும் உண்டு. இவை பற்றிய தர்க்க முறைச் சிந்தனையும் கூட இவற்றை ஏற்க இடமளிப்பதாகும்.

கற்காலந்தொட்டு இக்காலம்வரை உலகில் உண்டான மனித வாழ்க்கை முன்னேற்றம்,. உலகில் ஏற்பட்டுள்ள நாகரிகம், பண்பு வளர்ச்சி, சாத்திரங்கள், விஞ்ஞான வசதிகள் அனைத்துமே எங்கிருந்தோ மனித மண்டையில் முளைத்த அதிசயமே.



வேத சாத்திரம், அதன் விரிவான இதிஹாசங்கள், புராணங்கள்சாதாரணமானவர்களால் இயற்ற முடியாத அற்புதங்கள் தானே? புத்தகங்களே, கற்பிப்பவர்களே இல்லாத காலத்தில் இதிஹாசங்களும் அதாவது ராமாயணமும் மஹாபாரதமும் சாதாரண மனிதர்களால் படைக்கப்பட்டிருக்க முடியுமா? அப்போதைய மனிதர்களான அவற்றின் ஆசிரியர்களான வால்மீகியும், வியாசரும் செய்த அற்புதங்கள் தானே அவை? அவற்றில் அடங்கிய ஞானம், பண்பு அவர்களுள் இறங்கியது அதிசயமில்லையா? அவர்களின் வாக்கு மக்களிடம் செல்லுபடியானதும் இன்றுவரை நீட்டித்து விளங்கி ஒப்பற்ற புகழுடன் விளங்குவதும் அற்புதமில்லையா? ஓர் இதிஹாசமான ராமாயணத்திற்கு அடுத்து அதே போல ஆனால் வேறுபட்ட இன்னோர் அற்புதமாக இரண்டாம் இதிஹாசமாக மஹாபாரதம் எழுதப்பட்டது எப்படி அற்புதமாகாமல் போகும்? ஆயிரக்கணக்கான ஆண்டுகளான பிறகும் அவை போன்ற இன்னோர் இதிஹாசம் யாராலாவது படைக்கப்பட முடிந்திருக்கிறதா?

இன்றைக்குப் பண்பு, தர்மம் பற்றியும் அரசியல் பற்றியும் பேசவும், கடைப்பிடிக்கவும், அவை காரணமில்லையென முடியுமா? இன்றைக்கு வந்துவிட்ட நீதி நூல்களுக்கும் காவிய, கதை, கட்டுரை நூல்களுக்கும் அவைதானே ஆதாரம்?

அப்படியிருக்க மற்றபிற அற்புதங்களை ஏன் சாத்தியமில்லை என வேண்டும்? சாத்திரம் இதிஹாச புராணச் செய்திகளில், பெரியவர்களின் கூற்றில் அற்புதங்களைப் பற்றி வருவதால் இவற்றைச் சத்தியம் என்றும் ஏற்கலாம். இவற்றை அறியத் துடிப்போர் உள்ளனர் என்பது போல் நம்பாதவரும் உளர்; அவ்வளவே.

### அதிசயம் ஆனால் உண்மை

முன்னேறத் தவிக்கும் மனிதன் எதுவரை முடியுமோ அதுவரை தன் ஆற்றலையும் அதிகரித்துக் கொள்ள வேண்டுகிறான். அப்போது அற்புத ஆற்றல்களை அறிந்து நம்புகிறான். பண்போடு ஆற்றலும் அதிகரித்தால் நலம் என விரும்புகிறான். உடல் சக்தி போல உள்ளச் சக்தியையும் அதிகரித்துக் கொள்ள முயலுகிறான்.

RangaRakes
tamilnavarasam.com

எப்படி அது இயலும் என யோகத்தை நாடுகிறான். பக்தி, வேதாந்தத்தை விட யோகமுறை புகழ் பெற்றதற்கான காரணமே இதில் கூறப்பட்டிருக்கும் சித்திகளே.

மனிதனுக்கு மானசிக ஆற்றல்கள் மேல் அளப்பரிய ஆர்வமுள்ளது. ஆனால் அவற்றின் தர்க்கமுறை சாத்தியக்கூறு தெரியவில்லை. வழிமுறையோகம் என்று மட்டும் கேட்டறிந்து நம்புகிறான்.

உடலியல், மனோவியல் போல யோகவியலும் கல்வி. ஆனால் மேல்படிப்பு ஆராய்ச்சிக்கு உட்படாத மனோவியலாக பாரா சைகாலஜியை யோகம் கொண்டு இருக்கிறது. இதிலேயே சித்திகளெனும் அற்புதத் திறமைகள் கூறப்படுகின்றன. கருவிகளால் இன்று விஞ்ஞான முறையில் சாதிக்கப்படும் எல்லா அற்புதங்களும் கருவிகளின்றி மானசிகமாகச் சாதிககப் படுகிறவையாக யோகத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

**உதாரணங்களுடன் பார்க்கலாம்**

இன்று தொலைபேசி ஒரு அற்புதக் கருவி. இருந்த இடத்திலிருந்தே தொலைவிலிருப்பவருடன் நினைத்தவுடன் பேசிக் கருத்துக்களைத் தெரிவித்து மறு கருத்தை அறிய முடிகிறது. கலந்துரையாட முடிகிறது. இரண்டு மூன்றுபேர் ஒரே நேரத்தில் கலந்து பேசவும் முடிகிறது. இது கான்ஃபரன்ஸ்கால் என்கின்றனர்.

இப்படி செல்போன் துணையின்றியே மானசிகமாகப் பேச முடிவது, அதாவது கருத்தைத் தெரிவிப்பதும், தெரிந்து கொள்ளுவதும் மானச தந்தி (Telepathy) எனும் அற்புதமாக (Miracle) இருக்கிறது.

இன்று ஒரு நிகழ்ச்சி எல்லாருடைய வீட்டிலும் தொலைக் காட்சிப் பெட்டி மூலம் ஒளிபரப்பப்படத் தெரிகிறது. இனிமேல் 3-ஜி அலைமூலம் முகத்தைக் காட்டியபடியே ஒருவருடன் மிகத் தொலைவிலிருந்தே பேசவியலும். இதற்கு இருமுனையிலும் 3-ஜி போன் இருக்க வேண்டும்.

தொலைக்காட்சி ஏற்பாடும் கருவியுமின்றியே தூரக்காட்சி (clairvoyance) ஞான திருஷ்டியாக மானசிகமாகக் காணல் யோகத்திறனால் அமையும் அற்புதமாகும். ஒருவர் தம் தோற்றத்தையே மானசிகமாக அனுப்பியும் காணச்



செய்யமுடியும். இதுவே தோற்றம் காட்டல் (Apparition) எனப்படும்.

வள்ளலார், சிதம்ப நடராஜ தரிசனத்தைக் காண விரும்பியவருக்கு திருவிழா நடக்கும் போது வடலூரில் இருந்து கொண்டே ஒரு சுவரில் சினிமா போலத் தம் யோக மகிமையால் அப்படியே காட்டினாராம். இது சினிமா தயாரிக்கும் சாதனம், காட்டும் கருவி எதுவும் இன்றி வள்ளலார் மானசிகமாகச் செய்தது. பக்தரின் கனவிலும், நேரிலும் பகவான் இப்படித் தோன்றுவார். யோகிகளும் குருக்களும் கூடத் தம் சீடர் முன் இப்படித் தோற்றம் காட்டியிருக்கின்றனர். உடம்பு முடியாமலிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர், பக்தருடைய பூஜையைச் சின்ன வடிவில் சென்றிருந்து தோற்றம் காட்டிக் கண்டாராம். மந்த்ராலயாவில் ராகவேந்திர ஸ்வாமிகள் இவ்வாறு சமாதியிலிருந்து வெளிப்பட்டுத் தோற்றம் காட்டுவதாகத் தகவல் உண்டு.

இப்படி இருநிலைகளில் உலகக் காரியங்களை அதாவது செயல்களைப் புரிய முடியும் எனத் தெரிகிறது. ஒன்று புலன்களின் உதவியால், அவை இயக்கும் கருவிகளால் செயல்படுவது. மற்றொன்று புலன்கள், கருவிகள் இல்லாமல் மானசிகமாகச் செயல்படுவது. இந்த இரண்டாம் வகையே அற்புதம் எனப்படுகிறது. ஆனாலும் உண்மை.

**சூட்சும விஞ்ஞானம்**

விஞ்ஞான அற்புத முன்னேற்றம் என்பதைச் சிறிது விளக்கமாகப் பார்ப்போம். சித்திகள் என்பன பிரக்ருதி எனும் இயற்கைக்குட்பட்டவையே என்று பார்த்துள்ளோம். ஆகவே சூட்சும இயற்கையான மானசிகமாகவும், பௌதிகக் கருவிகளாலும் செய்யப்படுகிறவையாக இருக்கின்றன.

மனப் பின்னணியில் இயற்கை ஆராயப்படுகையில் ஸ்தூல பௌதிக விஞ்ஞானம் முன்னேற்றமடைகிறது. மனித உடல் வசதிக்கான ஸ்தூலகருவிகள் கண்டறியப்படுகின்றன. ஃபோன், ஃபேன், ஃப்ரிட்ஜ், ஏர்கண்டிஷன், ரிமோட் கன்ட்ரோல், விளக்கு, லிஃப்ட், பஸ், ரயில், கார், விமானம், ராக்கெட், விளக்கு, கப்பல், நீர் மூழ்கிக் கப்பல், ரேடியோ, ராடார், எலெக்ட்ரிக், எலெக்ட்ரானிக் கருவிகள் கண்டறியப்பட்டுக் கையாளப்

RangaRakes
tamilnavarasam.com

படுகின்றன. சிலிகான் சில்லுப் புரட்சியால், கைபேசிகளும், கணினிகளும் வந்து விட்டன. அனலும், அணுவும் அளப்பரிய மின்சக்தியையும் அளிக்கின்றன. இதனால் இடமும், காலமும், படிப்படியாக வெல்லப்பட்டு வருகின்றன. 'சிம்கார்ட்' எனும் சிறிய சில்லில் எத்தனை விவகாரம் சாத்தியமாகின்றன! மெமரிகார்டில் எத்தனை நூறு பாடல்கள், படங்கள் பதிவாகி மகிழ்விக்கின்றன! இடம் என்பது எவ்வளவு சுருங்கி விட்டது! அதைவிடப் புள்ளி அளவு எனக் கூடச் சொல்ல முடியாத மனித மனத்தில் எவ்வளவு சமாசாரங்கள்! வெளியே விரித்து வைத்தால் இந்த ஆகாயம் கொள்ளுமா? பென்ட்ரைவில் ஆயிரக் கணக்கான பக்கங்களடங்கும் புத்தகங்களே அடங்கும் என்றால் இடம் என்பது ஒரு மாயை என்பது விளங்குகிறதே! ஆரம்ப மனிதனிலிருந்து இதுவரை வந்த இனிவரப் போகும் கடைசி மனிதனுடைய விவரம் முழுதும் விந்து இழையில் (sperm spiral) இருக்கிறது எனும் விஞ்ஞான விவரம் 'இடம்' பற்றிய நமது கணிப்பை உடைக்கிறதன்றோ! அணு அளவு ஜீவனுடன் ஆகாயமளாவிய மனம் இருக்கிறதை ஏற்கத்தானே வேண்டும்? இதயத்துள்ளிருக்கும் சிறிய வெளி (ஆகாயம், space) நமக்கு வெளியே பரந்து காணப்படும் ஆகாயம் போன்றதே (அதே ஆகாயமே, பரவெளியே) எனும் பிருஹதாரணிய உபநிடத உண்மையை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்? இப்படி ஸ்தூல பௌதிக விஞ்ஞானமே நம்மை வியக்க வைப்பதாக இருக்கிறது. சூட்சும பௌதிக மானசிக விஞ்ஞானம் சித்திகளாக பாராசைகாலஜி சமாசாரமாக ஆராய்ச்சிக்கு அகப்படாததாக இருக்கிறது.

**சமயமும் சித்தியும்**

பதஞ்சலி யோக சூத்ரம், பொருள்களில் சம்யமம் செய்வதால் இம்மாதிரி அற்புதம் செய்யும் திறமை அமையும் என்கிறது. விஞ்ஞான வெற்றிக்கும் இந்த சம்யமமே காரணமாகிறது. அணுவிலும், கிருமியிலும் வேறு எப்பொருளிலும் மைக்ரோஸ்கோப், டெலஸ்கோப் மூலம் கண்டு மனம் செலுத்தி ஒருமுகப்படுத்தி ஆராய்தலில் யோகம் கூறும் சம்யமமே நடக்கிறது. இப்படியே ரத்தம், சளி, மலம் மூத்ரம் முதல் வானிலுள்ள கோள்களும் ஆராயப்படுகின்றன. அப்படியும் காண முடியாதவை எக்ஸ்-ரே, ஸ்கேனிங் மூலம் படமெடுத்து



ஆராயப்படுகின்றன. இப்படியே விஞ்ஞானம் வளர்ந்து உள்ளது. ஆகவே சம்யமம் இல்லாமல் ஸ்தூல விஞ்ஞானமோ, சூட்சும சித்திகளோ சாத்தியமில்லை.

மனத்துள் சம்யமம் தன்மாத்திரைகள், அகங்காரம் ஆனந்தம், ஞானம் என்று உணர்வுகள், எண்ணங்கள், வாசனை, வண்ணம், உடலுறுப்புகள், அமைப்பு, உபயோகம், பயன்கள், அனுபவம் மேலெல்லாம் சம்யமம் நடக்கும் போது அந்தந்த அறிவும், அதீதப் புலனாற்றலும் உண்டாகின்றன.

தூரப்பார்வை, தூரக்கேட்டல், தொடாமல் திடப் பொருளை நகர்த்துதல், ஒன்றைத் தொட்டதுமே அதைப் பயன் படுத்தியவரைப் பற்றிக் கூறுதல், மனவசியம், பூமிக்கு மேலே எழும்புதல், உடலுக்கு வெளியே உலாவல், ஒன்றை முன்கூட்டியறிதல், ஒருவரை மாற்றியமைத்தல் போன்ற பற்பல அற்புதங்கள் மனிதரால் செய்து காட்டப்பட்டுள்ளன.

இவை எவ்வளவு ஆயிரம் அற்புதங்களாயினும் ஓர் எட்டிற்குள் அடங்கி விடுகின்றன. அஷ்டமா சித்திகள் என்றே பழங்காலத்திலிருந்தே கூறப்பட்டு வருகின்றன.

இவை யெல்லாம் சினிமாக்களில் மந்திரவாதிகளும் யோகிகளும் கையசைவாலேயே, மானசிகமாகச் செய்து காட்டுவது போலத்தான். சித்திகளாக விளையாட வேண்டுமென்பது கட்டாயமில்லை. உபகரணங்களாலோ, மானசிகமாகவோ, தியானம் போன்ற நிலையில் சம்யமம் செய்தோ சாதித்துக் காட்டலாம். யோகம் விஞ்ஞானத்தையும் அடக்கியதே!

'சர் ஐசக் நியூட்டன்' ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அது ஆப்பிள் மரத்தடி. மேலே இருந்து ஆப்பிள் கீழே விழுந்தது. உடனே அதையெடுத்து அவர் சாப்பிடவில்லை. 'இது ஏன் மேலிருந்து கீழே பூமியில் விழுந்தது?' என்று யோசித்தார். 'ஏன் மேலே போகவில்லை; அல்லது அங்கேயே நிற்கவில்லை?' என்று மனத்தைச் செலுத்தினார். அதில் அவரின் மனம் குவிந்தது. தாரணையாயிற்று. மற்ற சமாசாரங்களை மறந்தது பிரத்யாஹாரம் (புலன்களை மீட்டல்) ஆயிற்று. ஆப்பிள் விழுந்த சங்கதியில் மட்டும் மனம் குவிந்த நிலை நீட்டித்து இருந்தது தியானம் ஆயிற்று. அதன் விளைவாகப் பூமிக்கு இழுப்பாற்றல்

RangaRakes

tamilnavarasam.com

உண்டு சமாதியில் தோன்றிய அறிவாயிற்று. இவ்வாறு தாரணை, தியானம், சமாதி ஒரே சமாசாரத்தில் உண்டானால் அது சம்யமம் என்று யோக சூத்ரம் குறிப்பிடுகிறது. இது சம்யமம் என்ற யோக நுணுக்கம் என்றறியாமலேயே நியூட்டன் செய்து பூமிக்கு ஈர்ப்பு சக்தி உள்ளது எனும் உண்மையை ஞானமாகக் கண்டுபிடித்தார்.

ஜேம்ஸ் வாட் கெட்டில் மூடியைத் தூக்கித் தள்ளிய நீராவியின் மேல் ஏற்பட்ட சம்யமத்தால் நீராவிக்குச் சக்தி உண்டு எனக் கண்டார்.

ஸ்டீவன்ஸன் நீராவிச் சக்தியால் ரயில் என்ஜினை ஓட்டலாம் என்றறிந்தார்.

தான் மூழ்கியதும் வெளியேறிய தொட்டித் தண்ணீரில் சம்யமம் செய்து தன் எடை எவ்வளவோ, அவ்வளவு தண்ணீரே வெளியேறியது என ஆர்க்கிமிடீஸ் அறிந்தார். இதனால், பூமியின் ஈர்ப்பிசையைச் சமாளித்தால் விமானம் பறக்கும்; விழாது என அறியப்பட்டது. தண்ணீரில் மூழ்காமல் கப்பலோடும் என உணரப்பட்டது. நீராவியால் கப்பலும் ஓடும் என அறியப்பட்டது.

காற்றை அறிந்து காற்றாலையால் மின்சாரம் எடுக்கப்பட்டது. ஃப்ரிட்ஜ் உண்டாக்கப்பட்டது. ஏர்கண்டிஷன் பெட்டி செய்யப்பட்டது.

ஒலியை அறிந்து வானொலிப் பெட்டி உற்பத்தியானது. ஒலி ஒளியலையாக மாற்றப்பட்டு வானொலியும், டிவி-யும் வந்தன. ஒரே சக்தியே பலப்பல சக்திகளாக உலகில் மாறும் என அறியப்பட செல்போனும் உண்டானது. கம்பி மூலம் சென்ற செய்தி கம்பியின்றியும் போகும் என்றறிந்தனர். எதற்கும் சம்யமமே உதவியாகும்.

**நாத்திகர் நம்பார்**

நாம் பார்த்துப் பட்டு அறிந்த வரையில் நம் உடல் திறமைகளும் பலமும் அளவுபட்டது. நாமறிந்த நம் மன எல்லையும் மிகக் கிட்ட உள்ளதே. புத்தியும் அப்படியே அளவிற்கு உட்பட்டதே. ஆகவே காலம், இடம் இரண்டிற்கும் கட்டுப்பட்டே நம்மால் காரியம் செய்ய முடிகிறது. இதனால் சித்திகளை நம்பாதவரும், நம்பினாலும் வியந்து பேசுபவருமே



உள்ளனர். கடும் பயிற்சியாலும், கற்றதாலும் நம்மில் சிலருக்கு அதிசயமாகக் கொஞ்சம் அளவை மீறிய திறமை அமைந்து வித்தை காட்டுபவராகப் பார்க்கப்படுகின்றனர்.

**பயாலாஜி** (உடலியல்) சித்தி விளையாடல்களைப் புரிய ஏற்றதாக இருப்பதாக நம்பவில்லை.

**சைகாலஜி** (மனவியல்) நரம்புகளை மூளையை உணர்வுகளை அதீத நடத்தைகளை ஆராயும் கல்வியும் சித்தி விளையாடல்களை ஒப்புக் கொண்டு விடவில்லை.

நம்ப முடியாதவை பற்றி நிறையக் கேள்விப்படுகிறோம். அவை பற்றி அடித்துப் பேசுபவருமிருக்கின்றனர். நம்பாதவரை நாத்திகராகவும் பாவிகளாக எண்ணுபவர்களும் உள்ளனர்.

ஓர் ஆள் என்றால் உடலும் மனமும் ஒரு சேர உள்ளவரே என எல்லாரும் அறிவர். அதற்கு மேல் ஜீவாத்மா, பரமாத்மாவை ஏற்பவர் வேதாந்திகள்; மதவாதிகள். இவர்களிடையேதான் சித்திகள் பற்றிய பேச்சு உள்ளது.

**மூளை பற்றி**

மூளையை ஆராயும் விஞ்ஞானம் என்ன கூறுகிறது? இன்றைய மனித மூளைக்கு சித்திகள் விளையாடும் திறமை - அதீத ஆற்றல் இல்லை என்றே கூறுகிறது. அதீதப் புலனாற்றல்களான தூரக்கேட்டல், தூரப்பார்த்தல், மானச தந்தி, திடப் பொருளைத் தொடாமல் அசைத்தல் பற்றிய சங்கதிகளில் மனித மூளையின் நடவடிக்கை வெளிச்சத்திற்கு வரவில்லை என்பதே உண்மை.

ஆனால் மனச்சக்தியால் உடல் ஆளப்படுவது உண்டு. ஒருவர் மனம் பிறர் மனத்தின் மேல் ஆட்சி செய்வதும் ஹிப்நாடிசத்தால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் அறிவையே புலன்களையே மறக்கடித்து, பிறர்மனம் அவரை ஏவி நடத்துவதும் ஹிப்நாடிச உண்மையாகும். இதற்குக் கட்டளை மொழி (suggestion) ஒலி உதவுகிறது. எனவே ஒரு மனம் பிறர் மனத்தில் ஏதாவது விளைவை உண்டாக்குவதை ஏற்போம். இனி மனம் இயங்கக் கருவியாக இருக்கும் மூளை பற்றிக் காணுவோம்.

டெலிபதி போன்ற சித்தியில் 'ஒரு மூளையிலிருந்து மற்றொரு மூளைக்குச் செய்தியைக் கடத்த எங்கும் பரவிய ஏதோ

RangaRakes

tamilnavarasam.com

ஒன்றுடன் தொடர்பு வேண்டும். ஆனால் நடைமுறையில் மூளையின் மின் இயக்க முறை அதற்கு ஏற்றதாக இல்லை' என்கிறார், 'தி லிவிங் ப்ரெய்ன்' நூலாசிரியரான டபிள்யூ க்ரே வால்டர்.

மூளையின் மின் பாதிப்பு மிகக் குறைந்தது. மூன்று வால்ட் எனலாம். இது ஒரு சிறிய ட்ரான்சிஸ்டரையே இயங்க வைக்க முடியும். வானொலியை விடக் குறைந்த அலைநீளமே உடையது. ஒரு வினாடிக்கு 10 சைகிள்கள் ஆல்ஃபா அதிர்வே உடையது. முப்பது மில்லியன் மீட்டர்கள் அலைநீளமின்றி மின்காந்தக் குறிப்புகள் ஆகாயம் மூலம் பரவச் செய்தலாகாது.

**உள்மனம் மூலம்**

ஆனாலும் டெலிபதி முதலிய சித்திகள் எப்படி நடக்கலாம் என்பதை பாராசைகாலஜி இப்படி விளக்கும். இது மூளைக்கும் மூளைக்கும் நடப்பதானால் ஸ்தூலமான ஆகாயத்தில் பரப்ப வேண்டிய அவசியமிருக்கும். ட்ரான்ஸ்மீட்டர், ட்ரான்ஸ் பாண்டர் மிகப் பெரியதாக, மிகச் சக்தி வாய்ந்ததாக ரீசீவருடன் மூளைக்குள் இருக்க வேண்டிய தேவை உண்டு.

அப்படியின்றி, மனத்திலிருந்து இன்னொரு மனத்திற்கு அனுப்பப்பட்டு அந்த மனம் அதனுடன் இணைந்த மூளைக்கு அச்செய்தியைக் கூறுவதால் சாத்தியம் வேறுவிதத்தில் உண்டு. இதற்கு மனம் ஒரு முகப்படுவதே சக்தியைத் தருகிறது. ஒரு முகப்பட்ட மனமுடையவரின் மூளையை இ.சி.ஜி. மூலம் சோதிக்கலாம். மின் ஓட்டம் மிகைப்படுவதை அறியலாம். சாதாரணமாக மூளையின் மிகப் பெரிய அதிர்வு நீளம் ஓசையளவை விடக் குறைந்தது. தலையைச் சுற்றிச் சிலமில்லி மீட்டர் வரையே இருப்பதானாலும், நுட்ப நிலையில் வேறு எங்கும் பரவியிருக்கும் எதனுடனாவது இணைந்து பரவுவதாக இருக்கலாம். இம்மாதிரி ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட சமாசாரங்களை பாராசைகாலஜி என்பர். இதை பயாலஜியோ, சைகாலஜியோ அறிவதில்லை.

ஸ்தூல உலகில் ஆகாயமே எங்கும் பரந்த ஒன்று. இதில் எதையாவது பரவச் செய்யக் கருவிகள் வேண்டும். எனவே எந்த சித்திக்கும் சூட்சும சமாசாரமே வேலை செய்கின்றது. அது **உள்மனமே.** இது எங்கும் பரவியது.



தூக்கமும் பலவித மனநிலைகளும், திடீர் திடீர் என மேல்மனத்தில் வந்து விழும் அரிய கருத்துக்களும் மாபெரும் உண்மைகளும், பிரச்சினைகளின் தீர்வுகளும் நாம் அறிந்த மேல் மனத்தைத் தாண்டி ஓர் அகண்ட உள்மனம் இருப்பதை உணர்த்துகின்றன.

இந்த ஸ்தூல ஆகாய அலைகளிலேயே ஒலியலை ஒரு வேகத்திலும், ஒளியலை ஒரு வேகத்திலும் பயணிக்கிறதாக உள்ளன. இவற்றை விடப் பலப் மடங்கு, மூன்று மில்லியன் கிலோமீட்டர் வினாடிக்குப் பயணிக்கும் அலைகளில் இப்போது செய்திகள் அனுப்பப்படுகின்றன. இவையும் இடம், காலத்திற்கு உட்பட்டனவே. மிகவும் நுட்பமான மனோ வேகம் மிக மிக அதிகம். ஏனெனில் இது இடம் காலம் இரண்டையும் கடந்தது.

சம்யமம் மூலம் உள்மனத் தொடர்பு ஏற்படுவதால், எவ்வளவு தொலைவிலுள்ளவருடனும், அவர் உள்மனம் அனுப்பப்படும் செய்தியைப் பிடிக்கச் செய்து, அவருடைய மேல்மனம் உணரச் செய்வது எளிதாகிறது.

பரவிய உள்மனம் அனைவருடனும் அனைவரின் மேல் மனத்துடனும் தொடர்பு கொண்டதாக இருப்பதே இதைச் சாத்தியமாக்குகிறது.

**ஒரு முகப்பட்ட மனத்தினால் ஒருவர் சங்கல்பிப்பது (resolve) சூட்சும பூத அணுக்களைப் பாதித்து ஸ்தூலத்தில் ஓர் அற்புதமாக நிகழ்கிறது.**

இதுவே மநோசக்தியால் ஒருவர் அற்புதம் புரிவதில் இருக்கும் விஞ்ஞானமாகும். ஸ்தூலமாக சூட்சுமமாக இரு நிலைகளிலும் இருப்பது இயற்கையே. ஸ்தூலமாகச் செயல்படக் கருவி வேண்டும். சூட்சுமமாகச் செயல்படக் கருவிகளின் உதவி வேண்டாம். மிகவும் வலிமைப்பட்ட மனம் தீர்மானிப்பதால் ஸ்தூலத்திலும் அற்புதஞ் செய்ய முடியும்.

சௌபரி முனிவர் நூறு இராஜகுமாரிகளை மணந்து கொண்டார். நூறு உடல்களை எடுத்துக் கொண்டு அவர்களுடன் குடும்பம் நடத்தினார்.

பௌத்த துறவி சூலபந்தகா ஆயிரம் உடல்களை எடுத்துக் கொண்டு நின்றாராம். இன்னொரு துறவி தம் கையை நீட்டி மிக

RangaRakes

tamilnavarasam.com

உயரத்திலிருந்து தங்கப் பிட்சைப் பாத்திரத்தை எடுத்தாராம். வடிவங் காட்டுதலை விட உடல்கள் பலவற்றை எடுப்பது வேறுபடும்.

இதெல்லாம் ஸ்தூலத்திலேயே செய்யப்பட்ட சித்திகள். உடம்பைப் புவியீர்ப்பிலிருந்து விலக்கி, ஆகாயத்தில், காற்றில் பறப்பதும் பயணிப்பதும் ஸ்தூலமாகும். தம் உடலின் அணுக்களைப் பிரித்து வேறிடத்தில் மீண்டும் கூட்டி உடலுடன் நிற்பது, ஓரிடத்தில் மறைந்து வேறோரிடத்தில் தோன்றும் சித்தி. இது சூட்சுமமாகும்.

**சம்ஸ்காரம்**

உள்மனம் பரந்தது; நுட்பமானது; ஸ்தூலப் பொருளுக்கு உள்ள தடைகள் இல்லாதது. உடலை அதை ஆளும் மேல்மனத்தை உண்டாக்கக் கூடியது. அடுத்தடுத்துப் பல பிறவிகளுக்கான உடல்களை வடிவமைப்பது. 'ஜாதி இன்பதுன்பம், ஆயுள்' என்பனவற்றை ஒவ்வொரு பிறவியிலும் நிர்ணயிப்பது. ஜாதி என்பது ஆணா, பெண்ணா, எந்த உயிரினம் என்பதை நிச்சயித்து உடலைத் தருவது. பிறவி முதல் இறப்பு வரை உள்ள காலமே ஆயுள். இன்பதுன்பமே போகமெனும் அனுபவம். இந்த அனுபவமே உள்ளத்தில் பதிவாகி வினைத்தளையை உருவாக்கி மீண்டும் மீண்டும் பிறவி தரும் வினைப்பதிவாகிறது. சம்ஸ்காரம் என்ற அடிமனம் ஆகும்.

இதுவே வாழ்வின் அடிப்படை. நமக்குச் சித்திகளை விளையாட இத்தடை கூடாது. வினைப்பதிவு வாசனை குறையக் குறைய நினைத்ததைச் செய்யும் சக்தி வரும். நினைத்ததை எத்தடையுமின்றிச் செய்வதே சித்திகள். ஒரு விதமான ஆளாக உருவாக சம்ஸ்காரம் இருக்க வேண்டும்.

**ஐவகையில்**

**பிறவியிலேயே** சித்திகள் விளையாட இயற்கையுடன் கலந்தவராக பிரக்ருதிலயர் ஆக இருக்க வேண்டும். இப்படி இயற்கையை வெல்ல முடியாமல் அதனுடன் ஒன்றிய நிலையை யோகம் தரும் போது இப்படிப் பிறவியே சித்தி விளையாடுவதாகச் சிறு வயதிலிருந்தே இப்படி அற்புத ஆற்றல்களுடன் இறைவனைப் போலப் பூமியில் உடலுடன் அற்புத ஆற்றலுடன் அதீதச் செயல் புரிந்து வாழ்வர்.



**மணியால்** சித்திகள் சிலவோ, பலவோ அமைந்து விடலாம். ரசமணி என்று பாதரஸத்தைக் கட்டிவைத்திருப்பவர் நினைத்தது நடக்கும். நவபாஷாணம், மருந்தால் சித்தி தரும். நோயின்றி வாழ இளமை மாறாமலிருக்க வைக்கும் ஐம்பொன், நவமணிகள் சில காரியசித்தி தரும். **அஞ்சனம்** என மை வித்தை சில அற்புத சித்தி தருவது. மறைவதும், நினைத்த இடம்போக, பாதசித்தியும் தரும். போகசித்தி, காயகல்பநிலை, ஆயுள்வரை செய்யும் மருந்து உண்டு. **மந்திர** சித்தி அற்புத ஆற்றலைத் தரும். பேய், பிசாசை விரட்ட, நோய் நீங்க, செல்வமுண்டாக நினைத்த வடிவமெடுக்க, ஆபத்தில் தப்ப, எதிரிகளை வெல்ல உதவும். மாரணம், உச்சாதனம், வசீகரணம், (கொல்ல, ஓட்ட, வசியம், செய்ய) ரத்தம் வற்றச் செய்ய, பிரமித்து நிற்கச் செய்ய நோய்களை ஓட்டல் (சாந்தி) என்று ஆறுவகை சித்திகள் அமையும் என்கிறது அதர்வவேதம். **தவத்தாலும், சமாதி** அடைவதாலும் என்று மணி, மருந்து, பிறவி, மந்திரம், தவம், சமாதி எனும் ஆறு வகையிலும் சித்திகளமைகின்றன.

# 2. மனோசக்தியின் மாயம்

**மனோசக்தி**

மன உறுதிதான் மனோசக்தி. தீர்மானம் இன்றி ஊசலாடாமல் ஒரு கருத்தில் நிற்பது. பற்றினால் சறுக்காமல் வைராக்யமாக இருப்பது. சங்கதிகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு நிச்சய அறிவைப் பெறுவது. நினைவுப் பலம் கொண்டிருப்பது. நினைத்ததை முடிப்பது ஒன்றைத் தொடங்கினால் பாதியில் விட்டு விடாமல் முடிக்கும்வரை தெம்புடன் இருப்பது. இதற்காக எல்லாம் தூங்காமல், சோம்பலில்லாமல், சோர்வில்லாமல், பசி கூடத் தெரியாமல் செயல்படுவதும் முயற்சியில் தளராமையுமே மனோசக்தி. மறதியின்மை, சிரத்தை, துணிவு, தேவையான அறிவு, சமயோசித புத்தி எல்லாம் எந்த மனத்திற்கு உண்டோ அதை ஆற்றல் உள்ள மனம் எனலாம். அதாவது சிதறித் தெறிக்காத ஒருமுகப்பட்ட மனம். நிதானமான மனம், அசராதமனம், ஏமாந்து விடாத மனம் சக்தி மிக்கதாகிறது; வெற்றியைக் கொண்டுவருவது.

RangaRakes

tamilnavarasam.com

**சுருக்கமாக உற்சாகமும் ஊக்கமும் உள்ளத்தின் சக்தி எனலாம்.**

இன்னொரு வழியில் பார்த்தால் 'நினைவே' (எண்ணமே) மனம், உறுதியான நினைவே, நினைவின் பலமே மனோ சக்தியாகும். நம் மனம் நமக்குத் தெரிவதே ஒரு நினைவு மூலம் தான். சந்தேகிப்பதும், குழம்புவதும் உணர்ச்சி வசப்படுவதும் **மனம்** ஆகும். இது நினைவுகளாலே (thoughts) தான் புத்திக்குத் தெரியவருகிறது. புலன் உணர்வுகளை அறிவதும் மனம் தான். ஆனால் இவற்றைச் சிந்தனையால் நிச்சயித்து அறிவு பெறுவது புத்தி. இதன் தெளிவே மனத்தைச் சக்தி உடையதாக ஆக்குகிறது.

'இதைச் செய்வேன்', 'இதை நன்கு முடிப்பேன்' என்ற நிச்சயமான நினைவே தீர்மானம் அல்லது சங்கல்பம். இந்த நினைவே நம் வாழ்க்கையைத் தொடங்கும் அடிப்படை; ஆதாரம். இதன் மேலேயே நம் வாழ்க்கை கட்டப்படுகிறது. நம் நினைவுகளால் நாம் அடைவதே நம் வாழ்க்கை. ஆகவே நம் நினைவுப் பலத்தாலேயே செயல்களும் செய்யப்பட்டு வாழ்க்கை நினைவுப் பலமான மனோசக்திப்படி நல்லதாக, உயர்ந்ததாக, கெட்டதாக, தாழ்ந்ததாக அமைகிறது. இதுவே எண்ணம் போல வாழ்வு எனப்படுவது. வினைப்பயனே வாழ்க்கை எனும் போது நினைவுப் பயனே வினை என்றறியலாம். 'இது தான் தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதும், மனம்போல மாங்கல்யம் என்பதும், மனோசக்தி போல சித்தி விளையாடல்களும் என்பதும் ஆகும்.

**மனோசக்தியும், சித்திகளும்**

இது ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டு அமைந்திருப்பது. சிலர் பேச்சிற்கு எல்லாரும் கட்டுப்படுகின்றனர். சிலருக்குச் சொந்த மனைவி மக்களே அடங்குவதில்லை. ஈடுபட்ட துறையில், தொழிலில் வெற்றி பெறுபவர் சிலரே. கலைகளில் ஈடுபட்டோரிலும் ஒரு சிலரே முதன்மை பெற்றுப் புகழோடு விளங்குகின்றனர். அரசியல் தலைவர்களிலும் ஓரிருவர் மட்டுமே மிக நிறைந்த மக்கள் செல்வாக்கு மிக்கவராக இருக்கின்றனர். ஆன்மிகத்திலும் வெகு சிலரே பெரிய மஹான்களாகப் பிரபலமாகத் திகழ்கின்றனர். இப்படி மனிதர் தத்தம் புகழில் பெரிய சின்னவராக இருப்பதற்கு ஒரே துறையில் இருப்பவரிடையே கூட பிரபலத்தில், புகழில் பலபடித்தரங்கள் இருப்பதற்கு அவரவர் மனச்சக்தி மிகுந்தும் குறைந்தும்



அமைந்திருப்பதே காரணம். இதெல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலை, ஆதரவு, செல்வ நிலைக்கு ஏற்ப ஏற்றத்தாழ்வுடனிருப்பதாகும் எனச் சிலர் கூறலாம். அவை அமையவும் அவரவர் மநோசக்தியே காரணமாகும். அதாவது முன் வினைப்படியே ஒருவரின் உருவம் சூழ்நிலை முயற்சி திறமை வாய்ப்பு எல்லாமும். மனித ஆதரவும் செல்வமும், அவருடைய இச்சையும் கூட அமைகின்றன. இவற்றைப் பொறுத்தே சித்தி விளையாடல்களும் உண்டாகும். மிகப் பெரிய நிலையை ஒருவர் யோகத்தில் அடைந்திருந்தாலும் சித்திகள் விளையாடாமல் இருக்கலாம். அவர் இச்சைப் படாததும் காரணமாகலாம். அவருக்கு சித்தி விளையாட முன் வினைப்படி அமைப்பும் அமையாதிருக்கலாம். சித்தி விளையாடல்களை வைத்து ஒருவருக்கு மநோசக்தி இல்லை என முடிவு செய்ய முடியாது. சித்துகள் விளையாடுகிறார் என்பதால் யாரையும் மிகப் பெரிய மஹான் என்றும் கருதிவிட இயலாது.

ஏனெனில், ராவணன், இரணியன், வாதாபி, இல்வலன் இந்திரஜித், மாரீசன், தாடகை, சூர்ப்பனகை, கடோத்கஜன் முதலிய அரக்கர்களும் சித்துகளைச் செய்துள்ளனர். இப்படிப்பட்ட சிவன், பிரும்மா முதலியவர்களிடமும் தேவர், முனிவர்களிடமும் வரம்பெற்ற சித்துகள் செய்யும் வலிமை பெற்றிருந்த அரக்கர்களில் நல்லாரும் உண்டு, தீயவரும் உண்டு.

சித்தி விளையாடல் அமைந்தவர் அசாதாரணமான ஆற்றலுடையவராயினும் எல்லாவகையிலும் தம் மனத்தை அடக்கியவரல்லர். பஞ்சபூதங்களையும், நவகிரகங்களையும் அடக்கி வைத்திருந்த ராவணன் தன் பெண்ணாசையை அடக்காதவனாக இருந்தான். இரணியன் தன் ஆணவத்தை அடக்க முடியாதவனாக இருந்தான். இப்படி காமத்தை கோபத்தை அடக்காதவரும் சித்திகளைச் செய்து இயற்கைக்கு உட்பட்டே இருப்பர்.

**நல்ல கெட்ட முறைகளில்**

தம் பேச்சு மூலம் ஓரின மக்களை இன்னொரு உரிமைக்காக எதிராகக் கிளப்பி விட்டு இனப்படுகொலைக்குக் காரணமாகி விடும் தலைவரை உலகில் கண்டிருக்கிறோம். அடிமைத் தனத்திலிருந்து மக்களை விடுதலை யடையச் செய்த

RangaRakes tamilnavarasam.com

மஹாத்மாக்களையும் கண்டுள்ளோம். இது அவர்களின் மனோசக்தி. ஆறுதலை அளிப்பவரும் கொலை வெறியைக் குறிப்பிட்ட இனத்தின் மீது உண்டாக்குபவரும் தத்தம் மனச் சக்தியைப் பிறர் மேல் நல்ல முறையிலும் தீயமுறையிலும் ஏவி விடுபவரும் உண்டு.

காட்டுமிராண்டிகளாக இருந்த மக்களை நல்லது கெட்டது விளக்கி நாகரிகமாக வாழ, பண்பை அதற்கான நடத்தையை அறிவாக்கித் தந்து உலகில் வாழ்க்கை முறையை ஒழுங்காக ஆக்கியளித்த, சாத்திரங்களைத் தந்த முனிவர்களின் மனோ சக்தியை நாம் நல்லதாகக் கருதிப் பாராட்ட வேண்டும்.

தந்நலத்தால் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று, தின்று குடித்து, கலவிபுரிந்து மிருகம் போல வாழவே தம்மனோ சக்தியைப் பயனாக்குபவரைத் தீய சக்தியாக அரக்கராகக் கருதி விலக வேண்டும்.

பேச்சினாலும், எழுத்தினாலும் மிருக இச்சையையும் மிருக நடத்தையையும் மக்களிடம் கிளப்பிவிட்டுத் தம் சுயநலம் நிறைவேற மனோசக்தியை உபயோகிப்பவர், வன்முறைக்குக் காரணமாவோர், உலக வாழ்வின் அமைதியைக் கெடுப்போர் அசுர சக்தியேயாவர்.

ஹிட்லரையும் பார்த்துள்ளோம்.. மஹாத்மாவையும் அறிந்துள்ளோம். மார்டின் லூதர் கிங்கையும் அன்னை தெரசாவையும் கண்டு உள்ளோம்.

இப்படிப் பலவிதங்களில் மனித மநோசக்தி வேலை செய்கின்றது. கோபம், பொறாமை, ஆத்திரம், பொறுமை யின்மை போன்ற, கொடூர உணர்வுகள் தீயதன்மை கொண்ட மனோசக்திகள். கருணை, உற்சாகம், சகிப்புத் தன்மை, மகிழ்வு அன்பு, அமைதி, நட்பு எல்லாம் சாத்வீகமான நன்மை தரும் உணர்வுகளான மனோசக்திகளாம்.

பரந்த மனப்பான்மை கொண்ட பெருந்தன்மையாளர் எப்போதும் உலக நன்மைக்கே தங்கள் மன ஆற்றலைப் பயன்படுத்துவர். இதுவே இயற்கைக்கு உடன்பாடானது. சுயநலத்திற்கும் உலகத் தீமைக்கும் மனச் சக்தியை உபயோகிப்பதை இயற்கை ஏற்பதில்லை. ஆகவேதான் பில்லி,



சூநிய ஏவல், அபிசாரிக வேலைகளைப் பிறரை அழிக்கச் செய்கிறவர் கீழான நிலையைப் பெறுகிறார்.

**இ.எஸ்.பி.**

மனச்சக்தி எனும் செல்வமிருந்தால் எதுவும் கிடைக்கும். திட்டமிடலும் ஏதைச் செயலாக்குவதும் மனச் சக்தியே. அதைக் கண்களால் காட்டலாம். இசையாக வெளிப்படுத்தலாம். நடனமாக்கி உடலை நடத்தலாம். சிக்கலான நேரத்தில் போரிடப் பயனாக்கலாம் உழைப்பாக்கிச் செல்வ மீட்டலாம். ஞானமடையச் செலவிடலாம். கண்களால் மனச்சக்தி காதலாக வெளிப்படுகையில் காதலி கிடைக்கிறாள். கைகளால் மனச்சக்தி பலமாக வலிமையோடு வெளிப்படுகிறது. நாக்கில் சிறந்த பேச்சாகிப் பிறரை வசப்படுத்துகிறது.

ஐம்புலன்களால் உலகம் அறியப்படுகிறது; ஆனாலும் உலகை முழுவதும் அப்பட்டமாகத் தெரிந்து கொள்ள அவை உதவவில்லை. மனோசக்தி மிக்கவர் அதன் அளவிற்குத் தெளிவாகத் தெரிந்து கொண்டு அறிவு பெறுகின்றனர். ஏனெனில், மனோசக்தியின் மிகுதிக்கு ஏற்ப புலன்களின் ஆற்றலும் அதிகப்படுவதால். இந்த ஆற்றல் மிகுமானால் அதீதப் புலன்கள் (Extra Sensary Power) ஏற்படுகின்றன.

**வினையும் சித்தியும்**

கௌதமபுத்தர் பார்த்தவுடன் ஒரு வண்டியிலுள்ள அத்தனை மூட்டைகளிலிருக்கும் அரிசிகள் எத்தனை என்று சரியாகக் கூறிவிடுவாராம். அதை யார் எண்ணிச் சரியா என்று பார்த்தனர் என்று மட்டும் கேட்காதீர். அவரிடமிருந்த பிற அற்புத ஆற்றல்களைக் கண்டு இதையும் உண்மை என்று ஏற்றனர். அவரின் கட்புலன் திறமை அப்படி. அவருடைய சீடர் அனைவருக்கும் தூர சிரவணம் (திப்ப சுரோத்ரம்) வாய்த்திருப்பதை அறிந்து ஒரு சீடர், "குருதேவரே, எனக்கு அந்த ஆற்றல் வரவில்லையே?" என்று கேட்டார். அதற்குப் புத்தர், "நீ முற்பிறவியில் ஒரு சாதுவைக் கன்னத்திலறைந்து காதைச் செவிடாக்கி விட்டாய். அதனாலேயே அந்த சித்தி உனக்கு வரவில்லை!" என்றார். அவரும் முன் வினை மனித வாழ்வின் காரணமாக இப்பிறவியிலும் இருக்கிறது என்ற நம் கொள்கையை ஆதரிப்பவர் என்று அறிவோம். முன்

RangaRakes

tamilnavarasam.com

வினைக்கேற்பவே சித்திகளமைவதற்கான மன ஆற்றலும் உண்டாகிறது என்பது உண்மை.

கிறைஸ்டும் "தினை விதைப்பவன் தினையையே அறுப்பான்" என்று, 'நீ என்ன செய்கிறாயோ அதுவே உனக்கும்' என்று உணர்த்தினார். மேலும் அற்புத சக்தி பெற "பிரார்த்தனை செய்யுங்கள்!" என்றார். முன்வினை இல்லாத போது பிரேயர் எப்படி உதவும்? ஒரு காட்சி நமக்குத் தெரியாத போது மறைக்கும் திரையை நீக்கினால் மட்டும் போதுமில்லையா? திரையை நீக்குவது போலவே பிரார்த்தனை செய்வது அதாவது வல்ல இறைவனை வேண்டினால் தடுக்கும் முன்வினை குறையும்.

**மநோசக்தியும் பக்தியும்**

புத்தர் சீடராக வருபவரின் ஜாதகத்தைப் பார்த்த பின்பே சேர்த்துக் கொள்வாராம். இந்து மதம் மூடநம்பிக்கை கொண்டது என்று பௌத்தத்தில் சேர்ந்த நம் அறிவு ஜீவிகளுக்கு இதெல்லாம் தெரியுமோ, தெரியாதோ? இந்திரலோகத்தில் இந்திரனுடன் புத்தர் உரையாடியதைப் பூலோகமான இங்கே இருந்தே அவருடைய சீடர் கேட்டனராம். இங்கே நின்றபடி நீண்ட புத்தரின் திருஉருவம் இந்திரலோகத்தில் மார்பிற்கு மேல்பகுதி தெரியும்படி இருந்ததாம். இதை நினைவுபடுத்துவது போலத்தான் வானளாவிய புத்தரின் நின்ற கோலச் சிலைகளைச் செய்தனரோ?

ஒரு தடவை ஓடத்தில் நதியைக் கடக்கையில் காசில்லாத ஒரு புத்தபிட்சு, பறந்து சென்று அக்கரையை அடைந்தாராம். இதைக் கண்ட அரச சேவகர் அவரிடம் சொல்ல, அரசன், 'புத்த பிட்சுகள் படகில் செல்லக் கட்டணம் வாங்கக் கூடாது!' என்று அறிவித்தானாம். மனோசக்தியினால் உடலை உயர்த்தி ஆகாயத்தில் செலுத்துவதே இது. ஆகாயம், காற்று, பூமி மூன்றும் உதவினாலேயே அல்லது இந்த மூன்றின் மேல் ஆளுமை இருந்தாலே இது இயலும். இந்த மூன்றும், நீர், நெருப்பு இரண்டும் சேர்ந்து பஞ்ச பூத சூட்சுமங்களே மனம் என்பதாகையால் மனோசக்தியால் சித்திகளைச் செய்ய முடிகிறது.

தொண்டை மண்டலத் தொட்டையாச்சாரியார் என்பவர் பெரிய பக்தர். வயது முதிர்ந்தவர். அவருக்குக் காஞ்சிபுரப்



பெருமாளின் வைகாசியில் நடக்கும் கருடசேவை காண ஆசைமிகுந்திருந்தது. ஆனால் சோளிங்கரில் இருந்த அவரால் காஞ்சிக்குப் போக முடியவில்லை. அங்கிருந்த அவருக்குக் காஞ்சியில் நடந்த திருவிழாவைப் பெருமாள் இங்கிருந்தபடியே காட்டக் கண்டு ஆநந்தித்தாராம். பக்தியால் முற்றிய அவருடைய மனோசக்தியால் கண்டார் என்று கூறலாம். பகவானே மனோசக்தியளித்து அதனால் காணச் செய்தார் என்றும் கூறலாம். ஏனெனில் பகவானே காட்சியளித்தாலும் அதைக் காண அவருடைய கண்களுக்கும் மனத்திற்கும் சக்திவேண்டுமே. கீதையில் அர்ஜுனனுக்கு திவ்ய கண்களை அருளிய பின்னரே தன் விஸ்வரூபதரிசனத்தைக் கண்ணன் காட்டினான் என்பதே உண்மையல்லவா?

பக்தியென்பது மனோசக்தியை மிகச் செய்து வள்ளலார் மூலம் நடராஜர் விழாவைக் காட்டியதையும், தொட்டையாச் சாரியார் மூலம் நாராயணனைக் கருடவாகனத் திருவிழாவில் காட்டியதையும் கண்டோம். பக்தி வழியில் இது கடவுட் சக்தி என்றே ஏற்கப்படும். தனிமனித மனோ சக்தியாகக் கருதப்படாது.

**இறைவனும் சித்திகளும்**

இதிஹாச புராணங்களிலும் வேதக் கதைகளிலும் இறைவன் எவ்வளவோ சித்திவிளையாடல்களை விளையாடியிருக்கிறார். கடவுள் சங்கல்பித்தவுடன் உலகமே உண்டாகி விட்டிருக்கிறது. உலகில் ஒன்று வருவதும் மாறுவதும் மறைவதும் இறைவனுடைய தீர்மானத்தின் படியே.

இறைவன் **சத்ய சங்கல்பன்**. அதாவது நினைப்பது உண்மையாகி விடும்படி நினைப்பவன். ஆகவே, இறைவனே நினைத்ததை முடிப்பவனாக இருக்கிறான். நாமெல்லாரும் நிறைய நினைக்கிறோம். ஆனால் எல்லாம் நிறைவேறுவதில்லை. ஒரு சிலவே, ஓரளவே நிறைவேறுகிறது. எனவே நாமெல்லாரும் சத்யசங்கல்பரில்லை. இறைவனுடைய உலகிற்குப் போனால் அங்கே அப்படியாகலாம். அதுவும், படைப்பு, காப்பு, கலைப்பு மூன்றும் இறைவனால் மட்டுமே சங்கல்பிக்க கூடியவையாக இருப்பன. இதனாலேயே முக்தரான ஜீவரும், நித்ய சூரிகளாக இருப்பவரும் கூட இறைவனுடைய முத்தொழிலைச் செய்ய முடியாது எனப்படும். ஆகவே இறைவனாக ஜீவர் ஆவதில்லை; வேறாகவே இருக்கிறார் என்பதும் நிரூபிக்கப்படும்.

RangaRakes
tamilnavarasam.com

இறைவனால் சங்கல்பிக்கப்பட்ட பிரபஞ்சத்தில் அவனுடைய சரீரமாக வாழுகிற நாம் அவனருளுகிறபடி மனோசக்தியால் சித்து விளையாட்டைப் புரிபவராகவும், ஆகலாம். இறைவனுடைய கருவியாக இருந்தே அதைச் செய்வதாகவும் உணர்ந்திருக்க வேண்டும். தம் சங்கல்பத்தின் மூலம் இயற்கையை சித்து விளைய வைப்பவரும் அவரே!

மனிதர் கற்று, பயிற்சிசெய்து, இறைவனருள, குருவின் ஆசி பெற்று சித்துவிளையாடுவதாகக் காணப்படுகிறோம். எண்ணிக் கொள்ளுகிறோம்.

இறைவன் அப்படி இல்லை. இயல்பாகவே சித்தி விளையாடுபவர் அவர். அவர் கற்றோ, ஒரு போது இல்லாதிருந்து அப்புறம் சித்தி விளையாடும் சக்தியைப் பெற்றவராகவோ இல்லை. ஞானமும் ஆற்றலும் அவரைப் போல அவரிடம் என்றும் உள்ளவையாகும். தம் சரீரமான இயற்கையை (பிரக்ருதி) அவர், இச்சைப்படி ஏவி வேலை வாங்கி ஆட்சி செய்கிறார். ஜீவர் தத்தம் உடலை வேலை வாங்குதல் போல என்கலாம். ஆனால் நம் உடல் பரிபூரணமாக நாம் சொல்கிறதைக் கேட்டு நடப்பதில்லை. கீதையில், "என் உடலான உரிமைப் பொருளான பிரக்ருதி(இயற்கை)யைக் கையாண்டு உலகில் அவதரிக்கிறேன்!" என்றார். ஆக இயற்கையை உபயோகித்து உலகில் சித்தி விளையாடுவது மிகவும் இயற்கை. ஆகவே அவரிடம் பக்தி செய்து வேண்டி வினைத்தடையை விலக்கி மனோசக்தியை அதிகம் பெற்று சித்திவிளையாடும் பக்தர்கள் உலகில் அநேகர் உளர். ஸ்ரீகிருஷ்ணர் முதலிய அவதாரங்களின் விளையாட்டு விநோதங்களைக் கவனித்தால் இது விளங்கும்.

**போலிச் சித்தர்கள்**

மனோ சக்தியே இல்லாமல் சித்திகள் செய்பவராகக் காட்டிக் கொண்டு பெரிய யோகி மாபெரும் துறவி, மடாதிபதி பீடாதிபதி எனப் பலர் இக்காலத்தில் தோன்றித்திரிகின்றனர். சாதாரண வேத சாத்திர, தத்துவ அறிவும் புலனடக்க ஒழுக்கமும் கூட இல்லாத போலிகள் அவர்கள். ஆகமப்படி அமையாத நடைபாதைக் கோயில்கள் போல அவர்களாலும் புண்ணியமில்லை. இதெல்லாம் ஆன்மிக வளர்ச்சியும் இல்லை. ஆகமப்படி கட்டப்பட்ட கோயில் போல, மனோசக்தியுள்ள மகான்களே பயன்படுவது. சில சர்க்கஸ் வித்தைகளைப் போன்றவற்றைப் பழகி, ஹதயோக முறை நுணுக்கங்களைக் கற்று, அவற்றையும் தந்திரங்களால் சிலவற்றையும், மனோசக்தியால் விளையாடும் சித்திகளைப் போலக் காட்டித் தங்களைப் பெரிய யோக சித்தர்களாகப் பெருமை பேசச் செய்து விளம்பரப்படுத்திக் கொண்டு ஓர் அமைப்பை உண்டாக்கிக் கிளைகளை வேறு தொடங்கி ஒரு தொழிலாகச் செய்து பணம் பண்ணும் போலிகளே இப்போது அதிகம்.



ஆசனங்களையும் சில பிராணாயாமங்களையும் மட்டும் தெரிந்து கொண்டு தியானத்திலிருப்பது போல கண்களை மூடி அமர மட்டும் அறிந்து ஏதோ பூஜை செய்யும் பக்தராகவும் காட்டிக் கொண்டு, புரோகிதர்களைக் கொண்டு யாகம் செய்து ஹோமம் செய்து பரம ஆன்மிகவாதிகளாகத் தோற்றம் ஏற்படுத்திப் பிழைப்போரே அதிகம் உளர். இவர்களுக்கு வசூலே முக்கியம்.

ஆசனமும், சித்த வைத்தியமும் அறிந்து சித்தர் என்று மருந்துகளைச் செய்து கொள்ளை விலைக்கு விற்று ஆயிரம் கோடி ரூபாய் கணக்கில் சொத்து சேர்த்து அறக்கட்டளைகளில் பதுக்கி வாழ்வோர் மக்களுக்காகப் போராடுவதாக அரசியலும் செய்ய வந்து விட்டனர். இவர்களுக்குப் பிரபலமும் புகழுமே தேவை. பணமும் பாதுகாப்பாக இருந்தாக வேண்டும்.

இன்னும் சிலர் எதுவுமே தெரியாவிட்டாலும், 'நான்தான் கடவுள்' என்று அவதாரமாக ஆகிவிடுகிறார்கள். 'வீட்டிற்கு வந்து வாழ்த்தினால் பத்து லட்சம், இருக்குமிடத்திற்கு வந்து வாழ்த்துப் பெற்றால் ஒரு லட்சம்' என்று வாங்குகிறார்கள். இவர்கள் தொடங்கிய அமைப்பு பல நாடுகளில் கிளைகளுடன் இருக்கும். குறுகிய காலத்தில் நூறு, ஆயிரம் கோடிக் கணக்கில் சொத்துக்கள் குவிந்துவிடும். இவர்கள் பித்தலாட்டம் வெளியே அம்பலம் ஆனாலும், போலீஸ் பிடித்தாலும் பணபலத்தால் மீண்டும் மக்களை இம்சிக்க வந்துவிடுவர்.

**பின்பலம் பணம்**

வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டு வேண்டும் போது அந்தக் கைக்கு அடக்கமான பொருளை வெளியே எடுத்து சித்தியால் வரவழைத்தது போலக் கொடுப்பார். அவர்

RangaRakes

tamilnavarasam.com

உண்மையில் பொருளை வரவழைத்துத் தரும் சித்தி உடையவரானால் லிங்கம், வாட்ச், மோதிரம் போன்றவற்றை வாயிலிருந்து எடுத்து எச்சில் பொருளாகத்தான் தர வேண்டுமா? அல்லது கல்லுரலை, கடப்பாரையை வரவழைத்துத் தரலாகாதா? ஒரு துறவி, (காவி தந்த குருயாரோ?) பின்னால் சிறைக்கும் சென்று 'இப்படிச் செய்து வயிறு கெட்டுப் போனது' என்று கூறிச் செத்தும் போனார்.

பின்னால் கருந்திரை இருக்க, அதன் பின்னிருந்து வீசி மேலே போட்ட செயின் அது போன்ற பொருளை லாகவமாகப் பிடித்து சித்தியால் வரவழைத்துத் தருவது போலக் கொடுப்பார். லிங்கம், வாட்ச், மோதிரம் போன்றவற்றை வாயிலிருந்தும் எடுத்துத் தருவார். பூ வரச் செய்து தருவது, விபூதியை வெறுங் கையால் தருவது செய்து கொண்டிருந்தார். இவற்றையெல்லாம் மேஜிக் செய்யக் கூடியவரும் தந்திரங்களால் செய்துகாட்டி விட்டனர். இவர் பற்றிய பலர் கூறிய பற்பல சித்திகளை அடக்கிய நூல்களும் உண்டு. இவர் இறந்ததும் இவரது அறையில் கிலோ கணக்கில் தங்கம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதும் செய்தியாயிற்று.

பிறரைக் குறை கூறுவது நம் நோக்கமில்லை. மக்களைப் போலிகள் பற்றிக் கூறி எச்சரிப்பதே நம் நோக்கம். நாம் கூறியவை செய்தியாக வெளிப்பட்டவையே.

இவர்களை உடனுக்குடன் நேரே யாரும் கேள்வி கேட்காமைக்கும் வாதிட்டு மடக்காமைக்கும் அவர்களுக்குப் பின்பலமாக இருந்த பணமே, புகழே தடை. அறியாமையும் அச்சமும் கொண்ட மக்கள் போலிகளைத் தோலுரிக்க முடியாமல் தோற்றுப் போகிறார்கள். கண்டுபிடிக்கப்பட்ட ஓரிரு சமயங்களிலும் பணமும் அதிகார வர்க்கமும் அவர்களுக்குத் துணை செய்கின்றன.

ஓரிருவர் மாட்டிக் கொண்டு கம்பி எண்ணுகின்றனர். ஆனாலும் இப்படிப்பட்டவர் புதிது புதிதாக இன்னும் தோன்றிக் கொண்டுதானுள்ளனர்.

ஒருவர் நெருப்பில் இறங்கி எழுந்து வருகிறாராம். இன்னொருவர் மக்களைப் பறக்க வைப்பதாகச் சவால் விட்டு எதுவும் முடியாமல் திட்டு வாங்கினார். இவர்களுக்கு



உண்மையாகவே இப்படிப்பட்ட சித்திகள் விளையாட முடிந்தாலும் கூட அதை வெளிக்காட்டிப் பயன் என்ன? முடியாதவர்தானே 'முடியும்' என்று வெறும் தம்பட்டம் அடித்துக் கொள்ளுவர்!

நெருப்பில் இறங்குபவர் எங்காவது தீவிபத்து ஏற்பட்டால் உள்சென்று உயிர்களைக் காப்பாற்றப் பயன்படுத்தினால் அப்போது மக்களறிந்து கொள்வதோடு மெச்சவும் செய்வர்.

சித்திகளைக் காட்டிப் பாமர மக்கள் தம்மைப் பாராட்ட விரும்புகிறவர், பாமர மக்களின் கைதட்டலை வேண்டுபவர், அவர்களை விடச் சின்னவர்தானே?

மேலும் அந்த சித்திகளை ஆத்மா செய்யவில்லை. பிரக்ருதி தான் செய்கிறது என்ற அறிவற்றவர்தானே 'நான் பறப்பேன்', 'நான் உங்களைப் பறக்க வைப்பேன்!' என்று கூறுவர்? செய்வது இறைவன்தான். உடலில்லை. ஆத்மன்' என்ற அறிவற்றவர் எப்படி மேலானவர் ஆவார்?

கார்கள், பங்களா, பெரிய ஆசிரமம், வெளிநாட்டுப் போக்குவரத்து. கூட்டம் எல்லாம் கண்டு மக்களும் ஏமாந்து போய்க் கூடுகின்றனர்.

**மெடீரியலைசேஷன் (உருவாக்கல்)**

பொருள்களை வரவழைத்துத் தருவதை இப்படிச் சொல்வர். ஒழுக்கம், தாரணை, தியானம், சமாதிகளால் மனம் சக்தியை இழக்காமல் சேமித்த யோகிக்கு மனோ சக்தி கூடும். அதனால் யோகி பஞ்சபூத இயற்கையில் மாறுதல் செய்து, எங்கும் உள்ள பஞ்சபூத அணுக்களைக் கூட்டி, தாம் சங்கல்பித்த பொருளை உண்டாக்கி அளிக்க முடியும். ஆனால் முழு இயற்கையையும் பிரபஞ்சமாகப் படைக்க யோகியரால் இயலாது.

இது சிறிய பெரிய பொருள்களை உருவாக்கித் தர அப் பொருளின் வடிவம், தன்மை, பயன் யோகிக்குத் தெரிந்திருப்பது அவசியம். அப்போதுதான் அப்பொருளை மொத்தமாக நினைத்து உருவாக்க முடியும். நினைத்தது நிஜத்தில் வர, அந்த நினைவிற்குப் பலம் வேண்டும். இல்லாவிட்டால் நினைத்தது வெறும் கற்பனையாகவே கரைந்து விடும், ஆனால் இப்படி கற்பனையாகி விடும் நினைவும், சாதாரணமாக நினைப்பதும்


tamilnavarasam.com

கூடப் பிறகு அந்தக் கற்பனையின், நினைவின் வலிமைக்கு ஏற்ப வாழ்வில் கிட்டுவதாக உண்மையாகும். இப்படி வந்ததே நம் எல்லாருடைய வாழ்வும், வாழ்வில் சொந்தமானவையும் இன்ப துன்ப அனுபவமும். என்ன நினைத்தோமோ அதுவே நமக்கு நடந்தது. எதையெதை விரும்பினோமோ அதையே நாம் அனுபவிக்கிறதாக நம் வாழ்வு உள்ளது. இதனாலேயே நினைப்பதை நிறுத்த, விருப்பு வெறுப்பை விட யோகம் வலியுறுத்துகிறது. இயற்கையை நேசித்து அதைச் சேர்ந்த நமக்கு அதை விட்டு விலக அதன் மேலுள்ள ஆசையை விட வேண்டியவராக இருக்கின்றோம்.

இந்த பஞ்சபூத இயற்கை பகவானுடைய சங்கல்பத்தினால் பிரபஞ்சமாகப் படைக்கப்பட்டதே. ஜீவர்களான நம் ஆசைகள் நிறைவேறித் தீர்ந்து அவரை யடையவே!

சின்ன இறைவனைப் போல, ராஜா திரிசங்குவின் ஆசைப்படி அவனைச் சொர்க்கத்தில், உடலோடு சேர்ப்பிக்க இன்னொரு பிரபஞ்சத்தையே வேறொரு சொர்க்கத்துடன் படைக்க மகாமுனிவர் விஸ்வாமித்திரர் தொடங்கிவிட்டார். காரணம், இந்தப் பிரபஞ்ச சொர்க்காதிபதி இந்திரன் திரிசங்குவை உடலுடன் தன்னுலகில் அனுமதிக்காமல் கீழே தள்ளியது தான். ஒரு முனிவரின் மனோசக்தி செய்தமாயம் எவ்வளவு மகத்தானது பாருங்கள். இந்த அளவு மன ஆற்றலால் மாயம் புரிந்த மஹரிஷி வேறு எவரும் இல்லை.

### சங்கல்பம் (Resolve)

பரிணாமம் என்பது மாற்றம். இது மேல் நோக்கியும் போகும். கீழ் நோக்கியும் தாழும். அதாவது ஒரு பூனை மேல் நோக்கிய பரிணாமமாக யானையாகப் பிறக்கலாம். ஒரு யானை அதே போல கீழிறங்கிய மாற்றமாகப் பூனையாகவும் பிறக்கலாம். இது காலம் பிடித்து நடக்கும். இடமும் வேறாக மாறிவிடும். ஆனால் கால இடங்களை மீறி இப்போதே இங்கேயே இருக்கும் ஒரு யானையைப் பூனையாகவோ, ஒரு பூனையை யானையாகவோ ஒருவர் மாற்றிக் காட்டினால் அது சித்தி விளையாடல். மனோசக்தியை வைத்து நினைத்த மாத்திரத்தில் செய்வது சங்கல்பத்தால் சாதித்ததாகும்.





### இதற்கு எப்படி சங்கல்பிப்பது?

'முதலில் மனச்சக்தியைக் கூட்ட வேண்டும். பிறகு யானையை எண்ணி 'அது பூனையாக வேண்டும்' என்றும் ஆழ்ந்து நினைத்து, பூனையையும் உருவகித்து எண்ண வேண்டும். யானை, பூனை இயல்புடன் உருவுகளுடன் நினைவில் இருக்க வேண்டும். எது எதாக வேண்டும் என்பதும் எண்ணத்தில் இடம் பெற வேண்டும். அப்போது யானையின் அணுக்கள் கலைந்து பூனையைப் போலக் கூடியமையும். இப்போது யானை பூனை வடிவிலாகி யிருக்கும்.'

இப்படி சங்கல்பத்தில் மனம் ஒரு முகப்படுவது முக்கியம் என்பது போல, பிரஞ்ஞையை இழந்து கரைந்து போய் சாமதியடைந்து விடக் கூடாது என்பதும் முக்கியம்.'

சித்தி விளையாடலென்பது சமாதி நிலைக்கு முந்தியதாக ஓரெண்ணம் வலுப்பட்ட நிலையில் அந்த ஓரெண்ணமே சங்கல்பமாக அமைய நிகழ்வதாகும்.

### சித்த சக்தி

நம் தினசரி வாழ்க்கையே நம் உள்மனத்தை ஆதாரமாகக் கொண்டு நடப்பது. நம் உள்ளுடல் நடவடிக்கைகளை நடத்துவதே நம்மையறியாமல் நம் உள்மனம்தான். இதுவே உள்மனமிருப்பதை உணர்த்தும். இந்த உள்மன உதவியால்தான் சித்திகளும் செய்யப்படுகின்றன. காலம், இடம் இரண்டின் கட்டுப்பாட்டைத் தாண்டி உள்மனம் செய்யும் செப்பிடு வித்தைகளே சித்திகள். இதைக் கால இட எல்லைக்கு உட்பட்ட மேல்மனம் அறிந்து விளக்குதல் ஆகாதது. மனத்தின் ஆழமும், பரப்பும் இன்னும் விஞ்ஞானத்தாலறியப் படவில்லை. மனம் நினைக்கும் ஓர் அரைத்தூக்க ஆல்ஃபா நிலைக்குப் போவோம்; நினைத்தது நிகழ்ந்திருக்கும். இதுவே சித்தி விளையாடல்.

சித்த (உள்மன) சக்தியால் எதையும் சாதிக்கலாம் என்பது உண்மையே. இவ்வுலகத்தில் நீங்கள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு உங்களை விழிக்கச் செய்வது சித்தமே. தூங்கச் செய்தால் உலகம் தெரியாமல் போகும்.

ஐந்து புலன்களறிவும் அவற்றையறியும் மனமும் அளவு பட்ட சக்தியுடையன. மனத்தை உள்ளே இறக்குவதன் மூலம்

குவிப்பதன் மூலம் சித்தத்தைத் தொடர்பு கொண்டு காலம், இடம் என்று இருக்கும் தடுப்புச் சுவர்களை உடைத்தால், அளவுபட்ட புலன்களும் மனமும் அளவைக் கடந்து பரந்து விடும். நம் செயல்கள் சித்துவிளையாடல்களாகிவிடும். இதுவே சித்த சக்தி மகிமை.

மனத்திற்கு அபார சக்தி உள்ளது. அது அற்புதங்களை நடத்த வல்லது.

காற்றின் வேகம் அளவைக் கடந்தால் புயல். எரிமலை கக்கினால் அக்கினி. வாயு வேகம் மனோவேகம் எனப்படுகிறது. ஒளி, வெப்பம், மின்சாரம், காந்தம், அணுசக்தி எல்லாமே அலைகளாகப் பரவுகின்றன. இவையனைத்தும் ஒரே சக்தியின் மாறுபாடுகளே. ஒளி அலை நீளத்திற்கு ஏற்பப் பலநிறங்களைக் காட்டுகின்றது. அப்படியே எச்சக்தியும் வேகம் வரிசைக்கு ஏற்றபடி வெளிப்படுகின்றது.

**'சமுத்ரதார் வததி ஸம்வத்ஸரோ அஜாயதே'** என்பது வேதம். 'உலகமும் அலைகளினால் சுற்றிக் கொண்டுள்ளது.' அதாவது விண்ணிலுள்ள சக்தியின் அலைகளாலேயே கோள்கள் எண்ணிறந்தனவும் சுற்றிக் கொண்டு உள்ளன என வேதம் அறிவிக்கிறது. பிரபஞ்ச சக்தியின் அலைகளைப் போலவே மனமும் நினைவலைகளைக் கொண்டுள்ளது. அதிவேக அலைகளாக நினைவுகளைக் கொண்ட மனம் ஆழ்ந்து எண்ணும் போது நினைவலைகளால் பிரபஞ்ச சக்தி அலைகளில் மாறுதலைச் செய்து வேகத்தைச் கூட்டியும் குறைத்தும் அடக்கி ஆளுகிறது. சக்தி மிக்க மனம் அதிவேக அலைகளைப் பரப்புகிறது. வேகம் வரிசைக் கேற்ப பல சக்திகளாக வேலை செய்யும். பிரபஞ்ச சக்திகளே நம் உடலிலும் மனத்திலும் இருந்து வருகின்றன. பிரபஞ்சத்தில் போல உடலில் ஸ்தூல அலைகள், மனத்தில் சூட்சும அலைகள். இந்த சூட்சுமமே ஸ்தூலத்தை ஆட்டிப் படைக்கும் 'ப்ரோடோ டைப்' பிரபஞ்சம். இதன் மையத்தைத் தியானத்தால் தொடும் போது ஸ்தூல பிரபஞ்ச மையமும் தொடப்படும். இதனால்தான் மையமனத்தைப் பார்த்தவனால் பிறர் மனமும் அறியப்படுகிறது சூட்சுமமான ஆகாயமே கோடிக் கணக்கான கோள்களை, சூரியனை விடப் பல மடங்கு பெரிய பெரிய கோள்களைத் தாங்கித் தரிக்கிறது. இந்த முழுப் பிரபஞ்சமும் நம் சித்தத்தினுள்ளும் உண்டு.



இப்பேர்ப்பட்ட சித்த சக்தியைச் சிதற விடாமல் சேர்த்துப் பலம் மிக்க எண்ணமாகச் செலுத்தினால், அது ஒரு பலம் மிக்க மனத்தால் அனுப்பப்படுவதாகும். மிக விரைந்து ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் செல்லும் அது பிரபஞ்சத்தில் அதிக அளவு சக்தியை அள்ளிச் சென்று தன் வேலையை முடித்து விடும். எண்ணியவருக்கு வெற்றிகிட்டும். இதையே திருவள்ளுவர், தம் குறளில்,

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்"**

என்றிருக்கிறார். அதிர்வும் வேகமும் உடைய நினைவே நம் மனோ சக்தியாகும். எண்ணியவர் உறுதியுடையவராக வேண்டும்.

நினைப்பது, பேசுவது, செய்வது இந்த மூன்று காரியங்களைச் செய்வதே நம்சக்தி. இந்த வலிமைக் கேற்பவே எதையும் சரியாக நம்மால் செய்ய முடியும்.

இப்படிச் செயல் படுவதன் பலன் அல்லது விளைவு இரண்டு வகையில் இருக்கிறது. ஒன்று உடனே நிகழ்வு. இன்னொன்று பிறகு எப்போதாவது நடப்பது. இப்படி நம் ஒவ்வொரு நினைவும் பேச்சும், செயலும், நமக்குப் பலன்களைத் தருவதே பலபிறவிகளில் நடக்கிறது. நம் நினைவு காரியம் உடனே நிகழ வேண்டுமெனில், உடனடிப் பலனைத் தருவதாக ஆக வேண்டுமானால் போதிய வலிமையுடன், நினைக்க பேச செயல்பட வேண்டும். அது கைவந்து விட்டால், நாம் செய்வதெல்லாம் சித்திவிளையாடல் தான். நமக்கு வரவேண்டிய பயன்கள் மிஞ்சியிராத நிலைமையும் வந்துவிடும். எனவே நமக்கு வேண்டியதெல்லாம் மனோசக்தியே. சித்த சக்தியை ஒரு நினைவுப் பாதையில் விசையுடன் செலுத்துவதே மனோ சக்தியாகி நினைத்ததை உடனே காலம் இடம் எதுவும் பாதிக்காமல் நிகழச் செய்கின்றது.

### மனோசக்தியின் மாயம்

மனத்தின் முழு அமைப்பும் நமக்குத் தெரியாததோடு மனோ சக்தியின் மாய வேலைகளைப் பற்றியும் நாமறியோம். விண்ணை நிமிர்ந்து நோக்கினால் அது போய்க் கொண்டே

RangaRakes
tamilnavarasam.com

இருப்பதாகப்படுகிறது. இதுவே அண்டகடாகம் எனப்படும். அதே போல பூமியின் பிற மூன்று புறங்களிலும் இருந்தாக வேண்டும். இதே போல 'நான்' என்ற உணர்வின் நாலாபுறங்களிலும் மனம் பரந்து விரிந்து கிடப்பதாகப்படுகிறது. இதில் நாமறிந்தது மிகக் கொஞ்சமே. புறத்திலும் அகத்திலும் நாம் மிகமிகச் சிறிய துளியாகவே இருக்கிறோம். இருப்பதெல்லாம், அதாவது பூமியைச் சுற்றி உள்ள ஆகாயமான எல்லையற்ற இடத்தில் உள்ளதெல்லாம், உடலுள் இருப்பதாகத் தோன்றும். எல்லையில்லாத உள்ளத்தில் உள்ளதெல்லாம் நம் பிரஞ்ஞைக்குள் வரவே இல்லை.

மனம் விழிப்பு நிலையில் சிலவற்றைக் காட்டுகிறது. கற்பனையில் என்னென்னவோ; கனவில் எது எதுவோ, ஒன்றுமறியா உறக்கத்தில் எதையோ கொண்டு வருகிறது. இன்னும் பல்வேறு மன நிலைகளையும் அநுபவிக்கிறோம். ஆனால் முழு விளக்கம் அறிவாகவில்லை. ஆனால் எல்லாம் மனம் செய்யும் மாயமெனத் தெரிகிறது. மனம் செய்யும் இது போலத்தான் சித்திவிளையாடல்களும் மாயம் எனத் தெரிகிறது; ஆனால் புரியவில்லை. இருந்தாலும் ஒன்று.

'மேலே அடுக்கடுக்காகப் பல அண்டங்கள்' இருப்பதாகச் சொல்லுகின்றனர். பூலோகத்தில் புவிஈர்ப்பு விசையால் பல காரியங்கள் நடக்கின்றன; சில நடக்காது. ஆதாரமின்றி எதுவும் இருக்காது, மேலிருந்து கீழே திடப்பொருள்கள் எடைக்கு ஏற்பவிழும். ஆனால் மேலே விண்ணில் அதுமாறி வேறு சட்டம் நடக்கும். நாமெல்லாரும் தலைகீழாகி விடுவோம். எரிபொருளின்றி அங்கு ஏவப்பட்டவை சுற்றும். இதே போல மேலே போகப் போகப் புதுப்புது விதிகளிருக்கலாம். அதாவது இங்கே முடியாததெல்லாம் அங்கே முடியலாம். நம்ப முடியாததும் நடக்கலாம். மாறாத இளமை உண்டாகலாம்.

அதே போல, உள்ளத்துள் பிரக்ஞையை இறக்கிப் போகப் போக மனத்தின் சட்டம் மாறி ஞானம் அதிகமாகலாம். மனிதருடைய உடல் ஆயுள் கூடலாம். எடை மாறலாம். மனம் இயற்கையில் இடம், கால விஞ்ஞானத்தைத் தாண்டி அளவற்ற ஆற்றலை அடையலாம். சாதாரண மன நிலையில் முடியாததை எல்லாம் சாதிக்க முடியலாம். அதாவது சித்தி



விளையாடல்களைச் செய்துகாட்டக் கூடத்திறமை வரலாம். மனச் சட்டங்கள் மாறிச் சொர்க்கத்தில் சொல்லப்பட்டவை போல நாம் மாறியமையலாம். அல்லது மோட்சத்தில் கூறப்பட்டது போல பௌதிகத்தைத் தாண்டிய உடலும் மனமில்லா ஞான ஆனந்தமும் பிறப்பை இறப்பை வென்ற நிலையும் அமையலாம். அதெல்லாம் நடக்காது என யார் மறுக்க முடியும்? இப்படி அனுபவத்தில் கண்டே சாத்திரத்தில் மஹான்கள் கூறியிருக்கலாமே! குண்டலினி யோகம் கூறும் ஏழு சக்ரங்கள் போலப் பல படித்தர நிலைகளும் சக்திகளும் உணர்வுகளும் அமையலாமே! எல்லாம் மனச் சக்தியின் மாயம் என இருக்கலாம்.

# 3. எட்டு மகா சித்திகள்

**எண் பேராற்றல்கள்**

உலகில் பெரியோர் செய்து காட்டியிருக்கும் சித்திகள் சாத்திரம் கூறும் மாபெரும் அற்புதங்கள் அனைத்தும் சேர்ந்து இந்த எட்டில் அடங்குமாறு இவை கூறப்படுகின்றன. நாம் முன்பு ஓரிடத்தில் கூறியது போல, ஸ்தூலத்தில் கருவிகளால் நிகழ்த்தப்படும் விஞ்ஞான அற்புதங்களாகவும், சூட்சுமத்தில் கருவிகளின்றி மானசிகமாக மனோசக்தியால் நடத்தப்படும் சித்திகளாகவும் இங்கு பார்க்கலாம்.

**ததோ அணிமாதிப் ப்ராதுர்பாவ: காயஸம்பத்**
**தத்தர்மான பிகா: தஸ்ச்ச!!** (III - *சூத்;* 45)

'பஞ்சபூத இயற்கை மேல் வெற்றிகிட்டுவதால் அணிமா, காயசம்பத் எனும் உடல் ஆயுள் ஆரோக்கியத்துடன் அழியாத நிலை முதலிய பேராற்றல்கள் கிட்டும்' எனப் பொருள்.

இந்த எட்டு ஆற்றல்களை வேதாந்தமும் நாட்டுப்புறச் சமயங்களும் அப்படியே ஏற்கின்றன. அணிமா போல மற்ற ஏழும் கூடப் பிரபலமானவையே.

*அவை:* **1) அணிமா, 2) மஹிமா, 3) இலஹிமா, 4) கரிமா 5) பிராப்தி 6) வசித்வம் 7) பிராகாமியம் அல்லது பரகாயபிரவேசம் 8) ஈசத்வம்.**

RangaRakes
tamilnavarasam.com

புராண இதிஹாச வேதங்களில் இறைவனும் அவதாரங்களும், ரிஷி, முனிவர், தவயோகிகளும் இவற்றைச் செய்து காட்டியுள்ளனர். வெளிநாடுகளிலும், இங்கேயே பல்வேறுபட்ட மதங்களிலும் பற்பல பெரியவர்கள் எல்லாக் காலங்களிலும் செய்து உள்ள சித்தி விளையாடல்களே இவை.

**1) அணிமா:** அணுப் போலச் சிறிய வடிவமெடுப்பது என்பது யோக வேதாந்தத்தில். கண்ணால் காண முடியாதபடி மிகச் சின்னது அணு. அதுபோல தவயோக சக்தியால் ஒருவர் தம் வடிவைச் சுருக்கிக் கொள்ளலாம் எனப்படும்.

இதை அணுக்களின் மேல் ஆளுமையால் செய்ய முடியும் எனப்படும். பஞ்ச பூத அணுக்களின் விகிதாசாரப்படியான கூட்டமைப்பைக் கலைத்து விட்டு மீண்டும் வேறொரு அளவில் கட்டமைப்பது எனலாம். இல்லையேல் உள்ள கட்டமைப்பை அப்படியே சுருக்கிக் கொண்டு விடுவது எனலாம். இப்படி சூட்சுமமாக வடிவெடுப்பதால் திடப் பொருள் தடையாக இராமல் எங்கும் போகலாம், வரலாம்.

சுவர், கதவு போன்ற திடப்பொருள் தடுக்காத நிலையில் எதிலும் ஊடுருவி உலவலாம். பூமிக்குள் புதைந்தாலும் வெளியே வந்துவிடலாம். அறையில் பூட்டி வைக்க முடியாது. காற்றில் பறக்கலாம்; கனமில்லாததால், நீருள் மூழ்கமாட்டோம். நீரை விட நுட்பமாகையால் பூமியும் கீழே இழுக்காது. எடையற்றுப் போவதால் பிறர் காணாமல் எவ்வளவு சிறிய இடத்துள்ளும் புகமுடியும். திடப்பொருளைச் சூட்சுமப் பொருள் உட்புகும் என்பதால் இது சாத்தியமாகும். அணுக்களுக்குத் தடையில்லையென்பதால் உடலைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இது சுற்றுப் புறத்திலிருந்து பஞ்சபூத அணுக்களை மாற்றிக் கொள்ள முடியுமாதலால் இயலும். இங்கே வேண்டாமெனில் கலைத்துக் கொண்டு வேண்டிய இடத்தில் கூட்டிக் கொள்ளலாம். பிற உடல்களிலும், வேறு பொருளெதிலும் நுழைந்து காரியமாற்றலாம்.

இப்படி அணு வடிவாகப் போய்த்தான் ஸ்ரீகிருஷ்ணர் உத்தரையின் கருப்பையுள் தாக்கவந்த பிரும்மாஸ்திரத்தைத் தடுத்து சீசு பரீட்சித்தைக் கொல்லாமல் காத்தார். பாண்டவர் வாரிசாக அபிமன்யுவின் ஒரே பிள்ளை பிழைத்தான்.



**2) மஹிமா (பெரியதாதல்) :** சின்ன வடிவெடுப்பது போலப் பெரிய வடிவெடுத்தல், அணுப்போலச் சின்னதாகச் சுருங்குவது போல இது மலை போல் பெருத்தல் ஆகும். மலை கூட அணு எனும்படி 'மஹத்' போல பிரபஞ்ச அளவையும் தாண்டிப் பெரிய வடிவெடுத்தல். விச்வரூபம் காட்டக் கண்ணபிரான் எடுத்தது. கௌரவர் சபையில் கிருஷ்ணர் இப்படி பிரும்மாண்டமாக நின்றார். கடலைத் தாண்ட அனுமார் பெரிய வடிவம் கொண்டார். சூரியனின் முன் இருந்து பின்னோக்கி நடந்து பாடம் கேட்டபோது அனுமன் எவ்வளவு பெரிய வடிவிலிருந்திருப்பான்! கோபர் மலைக்கு உணவு படைத்த போது அந்த கோவர்த்தனமாக உட்கார்ந்து உண்ட கிருஷ்ணர் பெரிய வடிவிலிருந்தார். உள்ளே உள்ள அணுக்களைக் கூட்டி அல்லது விரித்துப் பெரிதாக்கி உடலின் அகல நீளமாக உள்ள ஆகாயத்தை விரித்துப் பெரியதாக நிற்றல். ஆகாயமே இடம் என்பதால் அதைப் பெரிதாக்கிப் பிற அணுக்களையும் நிறைத்து பெரிய வடிவுகாட்டல்.

இறைவனுடைய விஸ்வரூபம் இயற்கையானது. அவருடைய உடலே பிரக்ருதியான இயற்கை முழுவதுமாகும்.

அனுமன், பிறமுனிவர், அசுரர் எடுத்துக்காட்டுவது வர பலத்தாலும் தவ யோகங்களாலுமாகும். இப்படிப் பெரிய வடிவை எடுக்க எவ்வளவு தேவையோ அவ்வளவு பஞ்ச பூத அணுக்களைச் சூழ்நிலையிலிருந்து எடுத்து அடுக்குவர்.

**3) இலஹிமா --இது இலேசாதல் :** நடைப் பயிற்சி உடல் பயிற்சி செய்து டயட் இருந்து உடலை இளைக்க வைத்தல் இல்லை. தன் இயற்கையான எடையை மிக இலேசானதாக்கிவிடல். அதுவும் உடனடியாகச் செய்து விடல். இதனால் நீர் மேல் மூழ்கிவிடாமல் நடக்கலாம். ஆகாய கமனம் அதாவது அந்தரத்தில் பயணம் செய்யலாம். காற்றில் பயணிக்கலாம். பூமியின் இழுப்பாற்றலுக்கு உட்படாமல் மேலே எழும்பி நிற்கலாம். வாயு வெற்றியாலும், மனோ ஜெயத்தாலும் வரும் சித்தி.

சிலயோகிகள் இலை நுனியில் நிற்பர். ஆணிகள் நிறைந்த கட்டையில் படுப்பர். முட்களில் நடப்பர். எப்படியெனில் உடல் கனம் முள்ளில் ஆணிகளில் உடலை அழுத்தா தென்பதால் ஆபத்து இல்லை. சில வாயு நிறைக்கப் பட்ட பலூன்கள் மேலேயே பறந்து போகும். இப்படி அனுமார் பறந்தார்.

RangaRakes

tamilnavarasam.com

பறவைகள் பறப்பது போல, கப்பல் எடை அதனடியில் இருக்கும் தண்ணீரை வெளியேற்றாமல், மூழ்காமல் செல்வது போல, விமானம் அடியிலுள்ள காற்றின் எடையால் தாங்கப்பட்டு, பூமியின் ஈர்ப்பில் சிக்காமல் செல்வது போல இலஹிமாவால் மனிதர் இயற்கையை மீறலாம்.

உடல்தடை மரணத்தில் நீங்கியபின் ஜீவன், மனம் பஞ்ச பிராணன்களுடன் ஆவியுடலாகி இலஹிமா சித்திவர எங்கும் ஆகாயத்தில் அலைகிறதெனப்படும். காற்றுப் போல கைக்குத் தட்டுப்படாமல் இருக்கும். இப்படி இலேசாக இருப்பதாலேயே எளிதில் முறிந்து விழக்கூடிய முருங்கை மரத்தில் தொங்குவதாக ஆவிகள் கூறப்படுகின்றனவோ?

ஆவி உடல் பயணத்தில் (Astral Traveling) உயிரோடிருக்கும் யோகிகளும் உடலுக்கு வெளியே உலாவுவர்.

**4) கரிமா :** இது கடினமாக ஆதல். இலஹிமாவின் நேர் எதிரான சித்தி. உடலை மிகக் கனமாக கடினமாக ஆக்கிக் கொள்ளுதல், இதனால் யாராலும் தூக்கிக் கொண்டு போக முடியாது. இப்படி எடையதிகமாக உள்ளதாலேயே யானை கரி எனப் பெயர் பெற்றது. இறந்த பின் உடல் இப்படிக் கனமாகிவிடும். ஆனால் 'அபான' வாயுவால் இதுபோல உடலை எடைகூடச் செய்து வேண்டும் போது கனமாகலாம். இருபது பேராலும் தள்ளிவிட முடியாதபடி நிற்பதும் பலர் சேர்ந்து தூக்கமுடியாமல் இருப்பதும் கராதே பயிற்சியில் உண்டு. குழந்தைக் கண்ணனைப் புயலரக்கன் தூக்கிச் சென்றபோது இப்படிக் கனமாகத் தன்னை ஆக்கிக் கொண்டே புயலரக்கனால் விடப்பட்டான். அங்கதன் ராவணன் முன் தன் காலை வைத்து இதை அசை, பார்க்கலாம் என்று சவால் விட்டது கரிமாசித்தியால். இப்படித் தான் சஞ்சீவினி மலையை அனுமன் தூக்கி வந்ததும், கோவர்த்தன மலை கிருஷ்ணனால் குடை பிடிக்கப்பட்டதும் கூட நடந்தது.

**5) பிராப்தி :** ஆண்டு அனுபவிக்கும்படி அனைத்துப் பொருளும் வந்து உடைமையாதல். இச்சைப்படி தேவைப் பொருட்கள் கிட்டுதல். கொடுத்து வைத்தவர் என்று பிறர் போற்றும்படி எல்லாம் பொருந்தி வந்தமைதல், அனைத்தையும் நன்கு அனுபவித்து சுகிக்க கொடுப்பினை அதாவது பிராப்தம் உள்ளமை. முன்வினை நல்வினையா யிருப்போருக்கு இறைவனுடைய அருளும் கிட்டிய போது இப்படி அதிருஷ்டம் இருக்கும். இப்படி எல்லாம் கிட்டி அனைத்தும் அனுபவித்த நிறைவைப் 'போதும்' என்ற மனம் உடையவரும் அடைவதால் ஏக்கம், குறையற்ற மனமும் 'பிரஸ்தி' எனப்படலாம். வேண்டுதல் வேண்டாமை, விருப்பு வெறுப்பு இரட்டைகள் அற்றவர் நிலையும் இதுவே.



**6) வசித்வம் :** எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் வசப்பட்டு இருத்தல், எதிராக பகையாக ஒவ்வாதவையாக இராமை. கருதியது கைகூடிய நிலை. செல்வாக்கான நிலை. எல்லாரையும் எல்லாவற்றையும் கவர்ந்து இழுத்து வைத்திருத்தல். அல்லது வேண்டும் போது வசியப்படுத்திக் கொள்ளும் திறமை நம்மை விரும்பி அன்போடு இருக்கும் நிலை. கவர்ச்சி, மதிப்பு, உயர்வாகிச் செல்வாக்கோடு இருத்தல்.

**7) பிராகாமியம் :** இந்த ஒருடலில் இருந்தாலும் சுற்றியிருப்பவற்றையும் இயக்கி அவற்றிலும் வேலை செய்தல். இந்த உடலிலிருந்து வேறு ஓர் உடலிலும் நுழைந்து இயங்குதல் பரகாயப் பிரவேசம் என்று வேற்று உடல் எதிலும், பிற ஜடப் பொருட்களிலும், புகுந்து வேலை புரியும் சித்தி. பல உடல்களைப் படைத்து மிச்சமுள்ள கர்மாக்களையும் அனுபவித்துத் தீர்க்க இப்படிப் பலஉடல்களையும் படைத்துக் கொள்ளல். ஆனாலும் மூல உடலிலிருந்தே இயக்குவர். நினைவுப் பலத்தால் தன்னுடையதைப் போலவே பல உடல்களைப் படைத்து இயங்குதல் அல்லது வேறு வேறு வடிவிலும், பல உடலைப் படைத்துக் கொண்டு ஒரே மனம் உடலுக்குப் பிராகாரமாக அவற்றைக் கொண்டு நடத்துதல்.

கிருஷ்ணர் மாடு கன்றுகளைப் பிரும்மா மலைக் குகையில் ஒளித்து வைத்துவிட்ட ஓராண்டு முழுக்க அத்தனை மாடுகள்கன்றுகளாகவும் அவரே வடிவு எடுத்துக் கொண்டு கோகுலத்தில் இயங்கினார்.

ராஸ லீலையின் போது ஒவ்வொரு கோபிகைக்கும் ஒரு கண்ணனாக உருவெடுத்துக் கிருஷ்ணர் நடனமிட்டார். ஏற்கெனவே 'ஆலபந்தகா' என்ற பௌத்த பிட்சு இப்படிப் பல்லுடல் எடுத்ததைப் பார்த்தோம். விக்கிரமாதித்தன்

RangaRakes
tamilnavarasam.com

கூடு விட்டுக் கூடு பாய்ந்து கிளி உடலில் ஆட்டு உடலில் இயங்கியதைக் கண்டோம். ஆதி சங்கராசாரியாரும் ஓர் அரசன் உடலுள் நுழைந்து இயங்கினார் என்பர்.

கோளாறான மனநிலையில் ஒருபெண் தன்னையறியாமல் சுற்றுப்புறப் பொருட்களை இயக்கி மானசிக இயக்கம் புரிவது கண்டறியப்பட்டது. இது தெரிந்து செய்தால் பிராகாமியம் ஆகும்.

**8) ஈசத்வம் :** இது இறைத்தன்மையாகும். நினைத்ததைச் செய்து முடித்து இன்பமாக வாழுதலாகும். இதுவரை பார்த்த ஏழு சித்திகளே ஒருவரை இறைவனாக வாழச் செய்துவிடும். எல்லாம் வல்லதன்மை படைப்பு, காப்பு, கலைப்பு தவிர எல்லாம் செய்ய முடிவது.

பிறர் உதவியின்றித் தன் சக்தியினாலேயே யாரும் அவமதிக்க முடியாத பெருமையுடன், தனிப் பெரும் பலத்துடன், எல்லாமறிந்த ஞானமுடன், எல்லாம் செய்ய முடியும் சாமர்த்தியத்துடன் அனைத்துக்கும் மேலானவனாக, தான் தன்னில் நிறைவு பெற்றவனாக உலகம் மெச்ச வாழ்வது ஈசத்துவம்.

இறைவனைத் தவிர எவரும் இப்படி இல்லை. இறைவனைத் தவிர யாராவது ரிஷிகள் இறைவனுக்குட்பட்டு இறைவனுடைய உடைமையாக, முத்தொழில் புரியாமல் வேறெல்லாத் திறமையுடன் வாழலாம்.

முக்தரும் நித்ய சூரிகளும் இப்படி இறைவனுலகில் இறைவனுக்குச் சமமான ஞானமும் ஆநந்தமும் பெற்று இருப்பர்.

**எல்லாம் வல்ல இறைவன்**

படைக்கும், காக்கும், கலைக்கும் முத்தொழில் புரியும் வல்லமையுட்பட அனைத்து சித்திகளுடனும் தனக்கு உவமையில்லாத தலைவனாக இறைவன் ஒருவனே இருக்கிறான்.

அணிமா சித்தியின் அடையாளமாக 'அணுவிற்கும் அணுவாகவும், மஹத்திற்கும் 'மஹத்' தாகவும் அதாவது மிகச் சிறிய அணுவை விடவும் மிகச் சிறிய அணுவாகவும், மஹத் எனும்



உவமையில்லாத பெரிய மூலப் பிரக்ருதிக்கும் பெரியவனாக இறைவன் இருக்கிறான் எனும் வேத விளக்கம் அணிமாவுடன் கரிமாவையும் சொல்லுவதாக இருக்கும். அகிலமே தன் திருமேனியாக அந்த அகிலப் பொருள் எல்லாவற்றிலும் உயிராக இருக்கும். தனக்குள் எல்லாம் கொண்ட பெரியவனாகவும் இறைவனுள்ளான்.

**இறைவனும் சித்திகளும்**

இறைவன் இவ்வாறு எல்லா சித்திகளாக இயற்கையிலேயே இருப்பது எப்படி என்ற உண்மையை இங்கே பார்ப்பது உதவியாகும்.

இறைவன் உயிராக அவனுடைய உடலாக ஜீவர்களும், பஞ்சபூதப் பிரக்ருதி எனும் இயற்கை, காலம், முக்குணங்களுடன் இருக்கிறது. எனவே தன் உடைமைப் பொருளான ஜீவர்களை இயற்கையுடனிணைத்துப் பிரபஞ்சத்தைத் தன் சங்கல்ப சக்தியால் படைக்கிறான். இயற்கை எனும் ஜடப்பொருள், அறிவும் உணர்வுமுள்ள ஜீவர்கள், இறைவன் எனும் மூன்று உண்மைகளே உலகம். எனவே இறைவன் தன்னைத் தவிரப் பிற இருபொருள்களைக் கொண்டு எதை வேண்டுமானாலும் உலகில் செய்யக் கூடியவராக இருக்கிறார். இறைவனுக்கு மட்டுமே உரிய சிறப்பான சக்தி (அகடி தகடினா சாமர்த்தியம்) இது.

இதனால், 1) வேறு தேவை எதுவும் (மூலப்பொருள், துணைக்கருவிகள் செய்பவனான) அவனுக்குத் தேவை இல்லாமல் பிரபஞ்சத்தைப் படைக்கிறான்; காக்கிறான்; கலைக்கிறான்.

2) அவனை விடச் சிறந்தவர் 'சாமர்த்தியம், பலம், ஞானம், வீர்யம், சக்தி, ஆனந்தம்' உள்ளவர் யாருமில்லை.

3) அளவிலா மங்கலக் குணங்களுடன் விளையாட்டைத் தவிர வேறு பலனடையாது லீலை புரிகிறான்.

4) யாராலும் செய்ய முடியாத லீலைகளை அரிய பெரிய செயல்களை அவதார காலங்களிலும் செய்கிறான்.

உதாரணம் 'உலகங்களை யெல்லாம் தன் திருவடிகளா லளப்பது, வயிற்றில் உலகங்களைப் பிரளயகாலத்தில் வைத்துக்

RangaRakes

tamilnavarasam.com

காப்பது, தன் வாய்க்குள் ஈரேழு பதினான்கு உலகங்களையும் காட்டுவது, பூமியை வேதங்களைப் பாதாளத்திலிருந்து பிரளய ஜலத்திலிருந்து மீட்பது, வரங்களைப் பெற்ற, பிறரால் அழிக்கமுடியாத பெரிய கொடிய ராட்சசர்களை, வரப்படியே வரங்கொடுத்த சிவன், பிரும்மா, தேவர்கள், முனிவர்கள் வரம் பொய்க்காத வகையில் தந்திரமாக முடிப்பது என்ற பலப்பல செய்து தன்னை அனைவர்க்கும் மேலான ஒரே இறைவன் என்று காட்டுகிறான்.

எல்லாவற்றுள்ளும் மிகச் சிறிய உயிர்களுள்ளும் அணுப்போல பிரவேசம் செய்து அந்தர்யாமியாயிருக்கும் நிலை **அணிமா.** உலகங்களைத் திருமேனியாகக் கொண்ட அனைத்தையும் தன்னுள் கொண்ட **மஹிமா.** எவராலும் அசைக்கக் கூட முடியாத **கரிமா.** அந்தர்யாமியாக, அனைவரும் சுமக்கும் **இலஹிமா.** ஆலிலை மேலே, நீர்மேல் பள்ளி கொண்டதும் இலஹிமா. அனைத்துலகையும் அவற்றில் உள்ள அனைத்தையும் படைத்து ஏவி வேலை வாங்கி ஆண்டு அனுபவிக்கும் இறைவனுக்கு இதுவெல்லாம் **பிராப்தி** சொந்தமாகும்.

அனைத்துப் பொருள்களின் கவரும் சக்தியாகவும் அனைத்திலிருந்து கிடைக்கும் அனுபவ சுகமாகவும் ஒவ்வொன்றின் சிறப்பு அம்சமாகவும் இருக்கும் இறைவனுக்கு எல்லாமும் எல்லாரும் வசப்பட்டவர்களே. இப்படி **வசித்வம்** இறைவனுக்கு மட்டுமே உண்டு.

உலகில் எங்கும் எல்லாவற்றிலும் இருந்து இயங்கும், இயக்கும் சக்தியை **பிராகாமியமாக** உள்ளவன், எவருள்ளும் எதனுள்ளும் நுழைந்தும் வேலை செய்பவன், எதற்கும் எவருக்கும் இறைவனாக, தலைவனாக இருந்து, நினைத்ததை நினைத்தபடி நடத்தி, அனைத்தையும் அனைவரையும் படைத்து, காத்து கலைத்து விளையாடும் லீலாரசமனுபவிக்கும் இறைவனே **ஈசத்வம்** உடையவன்.

இப்படி எட்டு சித்திகளும் முழுமையாக எப்போதும் கொண்டிருக்கும் நிரந்தரமானவன் இறைவனே!



ரிஷி, யோகி, தவசிகளுக்கு அமைவது பயிற்சியால் இறைவனருளால். இறைச் சக்திக்கு இணையில்லாதவை அவர்களின் சித்தி விளையாடல்கள்.

**தவம்**

'மெய் வருத்தம்' எனும் தவ முயற்சியால் சித்திகள் வந்தமைகின்றன.

பணம் வேண்டும் என்றால் அதற்காக மெய் வருத்தம் மேற்கொண்டு வேலை செய்தும் அதே தியானமாக இருந்தும், சிக்கனமாக இருந்தும் பணம் அடையப் பட்டு விடுகிறது. மனப் போராட்டங்களைச் சகித்தும் உறுதியாக இருந்தும் வேண்டியதில் வெற்றி பெறுவதும் உண்டு. சுகம் எல்லாம் இவ்வாறு அடையப்படும்.

| | | |
|---|---|---|
| 1) இச்சை வைப்பது | – | இதுவே சங்கல்பமாகும் |
| 2) ஈடுபடுவது | – | காரியங்களில் இறங்குவது |
| 3) வருத்தங்களைச் சகித்துக் கொள்ளுவது | – | பொறுமை |
| 4) செயல் படுவது | – | செய்ய வேண்டியதைச் செய்வது |
| 5) வெற்றி யடைவது | – | காரியம் கைகூடக் கருதியதில் வெற்றி கிட்டும். |

இதுவே சித்திவிளையாடலிலும் இகலோக லௌகிக வாழ்க்கைப் பயன்களைப் பெற்று இன்பமனுபவிப்பதிலும் உள்ள சமாச்சாரங்களாகும்.

கழுத்தளவு தண்ணீரில் ஒரு காரியம் முடியவேண்டும் என்று அதுவரை நிற்பது ஒரு கையைத் தூக்கியபடி இது நடக்க வேண்டும் என சங்கல்பித்து நிற்றல், முட்படுக்கையில் படுத்துச் சாதனை செய்தல், நாற்புறமும் நெருப்பும் மேலே சூரியனும் காய நடுவிலிருந்து தியானித்தல், வேண்டுதல் நேர்ந்து கொள்ளுதல், நோன்பிருத்தல், விரதமிருத்தல் எல்லாம் தவம். பழைய காலத்தில் இன்னும் கொடிய முறையில் எல்லாம் உடலை வருத்தி உறுப்புகளை வெட்டிப் போட்டு ஓமம் செய்தல், உயிர்ப் பலிகொடுத்து யாகம் செய்தல், தானம், புண்ணியத் தலம் போய்

RangaRakes

tamilnavarasam.com

இறைவனைச் சேவித்தல், தொண்டு புரிதல் எல்லாம் தவமாக இருந்தன.

இதனாலும் கருதியது கைகூடியது. சித்தியாகக் கிடைத்தன. ஆரோக்யம், மகப்பேறு, நோய் தீரல், செல்வம் சிலமாயசக்திகள் எல்லாம் கூட அடைந்துள்ளனர்.

இக்காலத்தில் போராட்டம் என்ற பெயரில் சாலை மறியல், உண்ணாவிரதம், கொடும்பாவி எரித்தல், தீக்குளித்தல் எல்லாம் நடந்தேறுவது போல நோக்கம் நிறைவேற ஏதாவது ஆர்ப்பாட்டம் அடாவடி செய்வதும் தவமாகும்.

கடவுளை வேண்டி நடந்தது எல்லாம் இப்போது அரசை எதிர்த்தும் தனியார் நிறுவனங்களை எதிர்த்தும், பிரச்சினை களைத் தீரச் செய்கின்றனர்.

**ஹடயோகம்**

உடலை வளைத்தும் நீட்டியும் மடக்கியும், யோகாசனம் செய்தல், உடற்பயிற்சி பழகுதல், பிராணாயாமம் நேதி, தோதி, பஸ்தி, த்ராடக், கபாலபாதி, நௌலி முதலிய கிரியைகளால் மண்டை, முகம், கண்கள், மூக்கு, தொண்டை, வயிறு, குடல்கள், நுரையீரல்கள் என்று உடலை நன்கு தூய்மைப்படுத்திக் கொள்ளல், பந்தங்கள் முத்திரை செய்து வாயுக்களை வென்று சித்திகளைச் செய்யம் சக்தி பெறலாம்.

**பிரத்யாஹாரம்**

புலன்களை அவற்றின் பொருள்களிலிருந்து பிரித்து மீட்டு மனத்தில் வைத்து அடக்கும் இந்த நுணுக்கத்திலிருந்து உடலின் உறுப்புகளோடு மூளைக்குப் போகும் தொடர்பைத் தடுத்து காய வலியை உணராமலிருக்கலாம். அறுவைச் சிகிச்சையில் மயக்க மருந்து கொடுக்கப் படாமலேயே செய்து கொள்ளலாம். மனத்தை மற்றவற்றில் திருப்பி வேண்டாததை உணராமலேயே இருக்கலாம்.

மூக்கிலிருந்து மனத்தை மீட்டு நாற்றத்தை உணரா திருக்கலாம். நாக்கிலிருந்து மனத்தை விலக்கி சுவையறியாம லிருக்கலாம். தோலிலிருந்து மனத் தொடர்பை விட்டு வலியை உணராமல் இருக்கலாம். கொடிய ஓசையை உணராமல் செய்து



கொள்ளலாம். கொடுமையை, பிடிக்காததைப் பார்க்காம லிருக்கலாம். வேண்டாத பழக்கத்தை கெட்டதை ஞாபகம் வராமல் மறக்கலாம். சித்திகள் பல அடைய உதவும் தியானம் அதை அடையவும் பொதுவாக உலகை மறந்து தியானம் செய்யவும் உதவியாக பிரத்யாஹாரம் இருக்கும்.

**தாரணை :** இது ஹட யோகப் பயிற்சியால் அடையப்படும். இது மனத்தைக் குவித்து ஒருமுகப்படுத்தியிருப்பது. சித்த சக்தி மூண்டெழ சித்திகள் இந்நிலையில் வரும். எப்படியெனில், இது அடர்ந்த சங்கல்பத்திற்கு அடிப்படை. சம்யம நுணுக்க முதலங்கம், இதெல்லாம் கைவசமாக, 'மனோ உடல்' (Astral body) சரியாக அமைய நரம்புகளாலும், நாளமிலாச் சுரப்பிகளாலும் (Ductless glands) பிராண ஓட்டம், ஹார்மோன்கள் சுரப்பு நன்கு ஏற்பட உடல் தூய்மையும், ஆரோக்கியமும் அமைவதால் சத்துவ குணம் அமைதியாக ஏற்படும். ஆகவே நுட்ப அறிவு ஏற்பட தெளிவான மனத்தால் அதீதப் புலனாற்றல்கள் (இ.எஸ்.பி) உண்டாகும். மனச் சக்தியும் கூடும்.

**ராஜயோகம் : தியானம்** இந்த மனஒருமைப்பட்ட தாரணை (concentration) நிலையே கிட்டத்தட்ட 2 2/5 நிமிடம் இருந்தால் அது தியானம் 12 வினாடிகள் மனம் வேறொன்றையும் எண்ணாமல் ஒரே பொருள் பற்றிய எண்ணமிருந்தால் **தாரணை.** அதுவே நீட்டித்தால் தியானம். அதே நிலை 29 நிமிடம் அப்படியே நீட்டித்தால் சமாதி. தாரணையின் பன்னிரண்டு மடங்கு ஒரு தியானம். இதன் பன்னிரண்டு மடங்கு ஒரு சமாதியாகும். இந்த மூன்றும் ஒரே பொருளில் அமைந்தால் ஒரு **சம்யமம்**. இது ஹட யோகக் கணக்கு.

தியானம் கணக்கின்றியமைந்தாலும் எந்தப் பொருளின் மேல் (object) அமைகிறதோ அதற்கேற்ற பலன்களையோ, சித்திகளையோ தரும்.

**சமாதி** - என்பது மன ஓட்டம் தியானப் பொருளில் நின்று அதன் அறிவை, ஓர் ஆநந்தத்துடன் அடைவது. அப்போது மனம் தன்னை இழந்துவிடுகிறது. இந்நிலையைப் பெறாமல் சம்யமம் வராது. இந்நிலையில் கால ஓட்டமும் இட நினைவும் இராது. எல்லா நினைவுகளின் உணர்வுகளின் பிடிப்பிலிருந்தும் விடுபட்டிருக்கும் நிலை. ஆத்ம தியானம் செய்திருந்தால் ஆத்ம

RangaRakes

tamilnavarasam.com

தரிசனம் கிட்டும். ஞானம் விரியும், நினைத்ததைச் சாதிக்கும் சக்தி அமையும். கடவுளைத் தியானித்து சமாதியடைந்தால் கடவுளில் ஒன்றும் நிலையுண்டாகும்.

**விஞ்ஞான சித்திகள்**

சாத்திரம், தத்துவம், கடவுள் எதையும் அறியாதவர் தாரணை, தியானம், சமாதியடைந்தால் ஹடயோகம் எனவே தகும். ஜடசமாதி எனப்படும்.

இப்படியே கடவுள் இல்லை யென்போர், வேதத்தை நம்பாதோர் மதத்தைத் தூண்டிய நிலையில் சமாதியடையும் உலக ஜடப் பொருள்களை ஆராய்வோர் (விஞ்ஞானிகள்) பௌத்தர், ஜைனர், நாத்திக அறிவாளிகள் புதிய கருத்துக்களை அறிவர். விஞ்ஞானிகள் புதிய ஜடப்பொருள் கண்டுபிடிப்புகளை கருவிகளைக் கண்டுபிடிப்பர். மருத்துவம், பொறியியல், வானியல், போர்முறை எல்லாம் இப்படி வெளிப்பட்டவை எனலாம். இவையும் சித்திகளே, அதிசயங்களே, அற்புத உணர்வை அளிப்பவையே.

யோக சித்திகளும், விஞ்ஞான அற்புதங்களும், இருவகையுமே 'மனம் ஜடப் பொருளை ஆளுகின்றது' என்ற தத்துவ அடிப்படையைக் கொண்டவையே. இரண்டிலும் நினைவும் தீர்மானமுமே மனச்சக்தியைப் பலமாகக் கொண்டு சாதனை செய்யப்படுகிறது. ஏனெனில் பஞ்சபூத அணுக்களின் கூட்டே (Quintuplication) ஸ்தூலத்தில் உலகாகவும் நுட்பத்தில் மனமாகவுமிருக்கிறது.

**1) அணிமா :** ஸ்தூலத்திலும், நுட்பத்திலும் அணுவைப் பற்றி நன்கு அறிந்திருப்பதே இந்த சித்தியின் முக்கியம். அணுக்களைப் பகுக்கவும் இணைக்கவும் அறிந்திருத்தல் வேண்டும். அணுக்களுக்கு அவயவங்களில்லை. அறிவு, உணர்வு கூட இல்லை. நவீன விஞ்ஞானத்தில் படைப்பு பற்றி ஆராய்பவர், **'ஓர் ஒழுங்கிலிருந்து ஒழுங்கற்ற தன்மைக்கு வருவதே படைப்பு'** என்று கண்டுள்ளனர்.

வேதாந்தமோ சத்துவ, ரஜோ, தமோ குணங்களின் சமநிலையிலிருந்து சலன முண்டாகிப் புறப்படுவதே படைப்பு என்கிறது. இது சாங்கியக் கருத்துமாகும். யோகமும் ஏற்றது.



பல்வேறு அணுக்கள் பல்வேறு விகிதாசாரத்தில் (Ratio) கலந்து பிரபஞ்சம் வந்துள்ளது. விஞ்ஞானமும் இதை ஏற்று உள்ளது. இவை பிரிந்தால் உலகில் பொருட்களும் உலகமே கூட இல்லாமல் போகும்.

இவற்றைப் பிரித்தும் இணைத்தும் பொருட்களை இல்லாமல் செய்தும் இருப்பதாகச் செய்தும் காட்டலாம். பிரித்துப் பிறகு வேறு விதமாகச் சேர்த்தால் வேறு வேறு பொருட்களை உண்டாக்கலாம்.

இப்படி 'அணு விஞ்ஞான வெற்றி வல்லமை தரும்' அணுவிலிருந்து ஆற்றல் மிக்க மின்சாரம் தயாரிக்கின்றனர். அணு சக்தியால் பற்பல எந்திரங்களை, கப்பலை, ராக்கெட்டுகளை இயக்குகிறார்கள். அணுகுண்டுகளை, அணு ஆயுதங்களையும் செய்கின்றனர். நைட்ரஜன், ஹைட்ரஜன் குண்டுகளைச் செய்வர். அணுவினுள் இருக்கும் நியூட்ரான், எலெக்ட்ரான்கள், புரோட்டான் பற்றி யறிந்துள்ளனர். அணு உலை, அணுக் கதிர் பற்றிய ஆய்வு நடக்கிறது. இதெல்லாமும் அணிமாவில் அடங்குவதே.

**2) மஹிமா :** பெரிய பிரபஞ்ச ஆய்வில் வரும். கோள்கள் விண்வெளி ஆய்வும், விண்ணிலுள்ள சக்தியலைகளாராய்ச்சி, பலவித ஒளியாராய்ச்சி (Radealogy) ஒலியாய்வு, தகவல்பரிமாற்றம், காஸ்மாலஜி எல்லாம், க்வான்டம் (Quantam) கொள்கை வந்தது. ஆரம்பத்தில் என்ன இருந்தது, எதிலிருந்து எப்படி உள்ளதெல்லாம் வந்தது என்று ஆய்ந்தனர். புள்ளியிலிருந்து பெரிதாகிக் கொண்டே போகும் பிரபஞ்சம், மீண்டும் சுருங்கும் என்பர். இது பிரளயத்தைக் குறிப்பதாக உள்ளது. குளோபல் சுழற்சி வெப்பமதிகரித்தும், எங்கும் துருவங்களிலுள்ள பனிமலைகள் உருகி நீர் நிறைந்தும் உலகம் அழியலாம் என்கின்றனர்.

**3) கரிமா :** கனரகத் தொழில் கண்டுபிடிப்புகள் இதில்வரும் பெரிய பெரிய எடை மிக்க எந்திரங்கள் வந்துவிடக் காரணமாகும். ஆய்வும் கண்டுபிடிப்பும் ராக்கெட்டுகள், தொழில்சாலைகளும் எனலாம்.

**4) இலஹிமா :** ராக்கெட், சாடிலைட் சாதனைகள், ஆகாயப் போக்குவரத்து. கப்பல், விமானம் நீரிலும், விண்ணிலும்

RangaRakes
tamilnavarasam.com

மூழ்காமலும், விழாமலும் பல காரியங்களுக்கும் பயன்படுகின்றன. பெரிய பெரிய சாதனங்களும் காற்றிலும், நீர் மேலும், விண்வெளியிலும் இலேசானவை போலச் செய்கின்றன. கருவிகள் துணை கொண்டு மனிதன் இப்படிப் பறக்கிறான், நீர்மேல் பயணிக்கிறான்.

**5) பிராப்தி :** விஞ்ஞானத்தால் வசதியோடு வாழத் தேவையான கருவிகளையும் கண்டு அனுபவிப்பது பிராப்தி. சூட்டுகாலத்தில் குளிர்பதன வசதி, ஃப்ரிட்ஜ் வசதி, மின் விசிறி முதலியவை. குளிர் காலத்தில் ஹீட்டர், சூடுதரும் துணி வகை, காற்றுப் புகாவீடு முதலியவை. வாகனங்கள், சலிக்காமல் பொழுது போக வானொலி, டி.வி., எம்.பி.3., தொலைபேசிகள், கைபேசிகள், பத்திரிகைகள், திரைப்படம், காமிராக்கள் முதலியவை. சமைக்க கருவிகள், துணி துவைக்க, தரைமெழுக, நீரிறைக்க சாதனங்கள், காலணிகள், குடை, மழைக்கோட்டு, பாதுகாப்பான வீடுகள், விளக்குகள், மின் வசதி, பாதுகாப்பிற்குத் துப்பாக்கி போன்றவை இன்னும் உலக சுகவாழ்வை வசதி மிக்கதாக்கும் விளையாட்டுக் கருவிகளுட்படப் பலப்பல கருவிகள் நமக்கு பிராப்தியாகக் கிடைத்துள்ளன.

**6) வசித்வம் :** இது அணுக்களை ஆய்ந்தறிந்தும், பஞ்சபூத ஆராய்ச்சியாலும், காலம் இடம் வெல்லக் கூடிய கருவிகளை ஜடப் பொருட்களை மனத்தாலும் அறிவாலும் கண்டுபிடித்து உபயோகப்படும்படி செய்து வசப்படுத்தி, உயிர்களையும் தனக்குப் பயன்படும் படியாக வசியப்படுத்தி உலகையே ஆளுபவனாக மனிதனிருப்பது வசித்வமாகும். மனிதனால் இவற்றை வசப்படுத்த முடியாவிட்டால் மனிதனுக்கு உலகில் சுகமிருக்காது. நாற்காலியைச் செய்து உட்கார்ந்தால் கீழே தள்ளிவிட்டு விடும். வளர்க்கும் பசு பால் தராது. காளை உணவு கொடுத்தவனையே முட்டவரும். சிங்கம் ரிங் மாஸ்டரை விழுங்கிவிடும்.

**7) பிராகாமியம் :** சுற்றுப்புறத்திலும், தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் மனிதன் இயங்குகிறான். இன்டர்-நெட் மூலம் உலகுடன் ஒரு நிமிடத்தில் தொடர்பு கொள்ளுகிறான். குரலை, தோற்றத்தை எங்கும் எல்லா வீடுகளுக்கும் அனுப்புகிறான். கணினிகள், ரோபோக்கள், சாடிலைட்களால் பல உடல்கள் கொண்டவன் போல ஒரே சமயத்தில் இயங்குகிறான்.



**8) ஈசத்வம் :** விஞ்ஞான வளர்ச்சி தந்த கருவிகளின் வசதியால் இறைவன் போல உலகில் நன்கு சுகமாக வாழுகிறான். எல்லாத்துறை அறிவும் இருப்பதால் நினைத்ததை முடித்து நிறைவாக வாழ்கிறான். சராசரி பாமரனுக்கும் கூட விஞ்ஞானப் பலன் கிட்ட சுகமனுபவிக்கிறான். ஆடல் பாடல் கலைகளின் அனுபவம் சினிமா, டி.வி.யால் கிட்டுகிறது. இருந்த இடத்திலேயே, உலக முழுவதும் இருக்கும் அழகான அற்புத இடங்களைக் காணுகிறான். பலவற்றைத் தானே படைக்கிறான்.

இப்படி விஞ்ஞானக் கருவிகள் மூலமும் மனிதன் தொலைதூரச் செய்திப் பரிமாற்றம் கொள்கிறான். பார்க்கிறான்; கேட்கிறான்; இப்படி வீட்டிலும் அலுவலகத்திலும் ஒரே சமயத்தில் வேலை செய்கிறான். வீட்டிலிருந்தவாறே ஃபேக்ஸ், டெலிபோன், டி.வி.யை வைத்துக் கொண்டு அலுவலகம் நடத்துகிறான். தன் திறமை, அறிவை நன்கு வெளியே பரப்பி சம்பாதிப்பதுடன் புகழும் அடைய மனிதனுக்கு விஞ்ஞானம் கருவிகள் மூலம் நன்கு உதவுகிறது. இல்லற சுகம் ஆணும், பெண்ணும் ஒருவருக்கு ஒருவரின் தேவையின்றிக் கிடைக்கிறது. குழந்தையும் அப்படியே பிறந்து விடுகிறது.

**இன்னும் பிற சக்திகள்**

புத்தர் வழியிலும், 'அதித்தானா' என்று சங்கல்பங்களினால், 'இத்திவதா' அதாவது சித்திவிளையாடும் வித்தை உண்டாகும் எனப்படுகிறது.

பார்ப்பது, கேட்பது, முகர்வது, தொடுவது, சுவைப்பது என்ற புலன் சக்தி அதீதப்பட்டு இடம் காலம் கடந்து அபாரமாக உண்டானால் அதீதப் புலனாற்றல், கிளையர்வாயன்ஸ், (தூரக்காட்சி) கிளயர் ஆடியன்ஸ் (தூரக்கேட்டல்) மானச தந்தி (டெலிபதி), தொடாமல் திடப் பொருளை அசைத்தல் (டெலிகினியிஸ்). சூழ்நிலையை மானசிகமாகப் புரிதல் அல்லது மானசிகமாக மாற்றுதல் (சைகோ கினிஸிஸ்) சூழ்நிலையில் மானசிகமாக மாற்றுதல். இதை மனத்தை உடலுக்கு வெளியே வேலை செய்யவிடுதல். இது நினைத்தும் தன் வசமின்றியும் சிலர் செய்வர். பிற்கால நிகழ்ச்சிகளை ஞானதிருஷ்டியால் காணுதல்.

RangaRakes

tamilnavarasam.com

முன்கூட்டிப் பலவற்றை உணருதல் (ப்ரீகாக்னிஷன்). பூமிக்கு மேலெழல் (லேவிடேஷன்) பிறர் மனத்தை வசப்படுத்துதல் (ஹிப்நாடிசம்).

பசிதாகம் வென்றிருத்தல், ஆவியுடலுடன் பிரயாணம் (ஆஸ்ட்ரல் ட்ராவலிங்) தன் உடலை (உள், வெளி) காணுதல் (ஆடோஸ்கோபி), சித்தர் தரிசனம், நீரில் நிற்றல், காற்றில் நிற்றல், பிறர் கண்ணைக் கட்டி ஒன்றை இருப்பதாகவோ, இல்லாத தாகவோ காட்டலும், ஒன்றை இன்னொன்றாகக் காட்டுதலும் கூட ஒரு சித்தி.

இதெல்லாம் இன்று பாரா சைகாலஜி என்று தனியே ஆராயப்படுகிறது.

பஞ்ச பூதங்களை வெற்றி கொள்ளுவதால் எல்லா சித்திகளையும் விளையாடலாம். இவற்றைப் போல ஆறு ஆதாரச் சக்கரங்களை இயங்கச் செய்வதாலும் குண்டலினி சக்தியை நெற்றிப் பொட்டிற்குக் கொண்டு வருவதாலும் சித்திகளைப் பெறலாம்.

மனம், அகங்காரம் - இவற்றை வெல்லுவதால் உயர்ந்த ஆற்றல்களை அடையலாம்.

பிரதிபா ஞானம் யோகத்தில் உண்டாகும் போது பெரிய ஆற்றல்களுண்டாகும்.

இறுதியாக புருஷன் பிரக்ருதி ஞானம் நன்கு உண்டானால் எல்லா சைசிக் பவர்களும் ஏற்பட்டுவிடுகிறது. இதற்கும் மேலான இறைவனருள் பெற்ற ஞானியராக உருப்பெற்றால் கிட்டாதது இல்லை; பிறவியே ஒழிந்து நிரந்தரப் பேரின்ப வாழ்வு உண்டாகிறது. இதுவே பெரிய சித்தி.

# 4. பிரக்ருதியின் பெரிய சட்டங்கள்

**விஞ்ஞானம்**

இயற்கையெனும் பிரக்ருதியை இன்னும் முழுமையாக அறிந்து கொண்டு விடவில்லை. சின்னதாக நடந்து கொண்டிருக்கும் புலனுணர்வுகளைக் கொஞ்சம் பெரிதாக, நீள அகலங்களை விரிவு படுத்திச் செய்யத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இதுவே விஞ்ஞானத்தில் சாத்தியமாகி இருக்கிறதாகும். இதன்படி நிகழும் சில வேலைகளே சித்திகள் போல மானசிக மாய வேலை போலப் படுகிறது.

சில வேதாந்தம் கூறும் காரியங்களைக் கூட விஞ்ஞானத்தால் சாதித்துக் கொள்ளலாம் போலவிருக்கிறது. உதாரணமாக உத்தராயணத்தில் உடலை விட்டால் மோட்சம் என்கிறது வேதசாத்திரம். உத்தராயண காலம் வரும்வரை பீஷ்மர் போல யாரும் படுக்கையில் காத்திருக்க வேண்டாம்; எங்கே அக்காலம் நடக்கிறதோ அங்கே விமானம் மூலம் குறிப்பிட்டவரைக் கொண்டு போய் விடலாம். இது இடத்தை வெல்லுதல், புண்ணிய க்ஷேத்திரத்தில் மரிக்க நினைப்பவரும் விமானம், ரயில் மூலம் போய்ச் சேர்ந்துவிடலாம்.

செயற்கை மழை கொட்டவைக்க விஞ்ஞான முறை உண்டு. குழந்தையை நல்ல வேளையில் நல்ல தேதியில் நல்ல இடத்தில் நல்ல ஜாதகம் அமையும்படி கூட தாயைக் கர்ப்பத்துடன் இடம் மாற்றிக் கொண்டு போகும் வாய்ப்பும் உள்ளது. செலவாகும். கவலைப்படக் கூடாது.

வாடகைத் தாய் மூலம் பிள்ளை பெறலாம். விந்து வங்கி மூலமும் பிள்ளை பெறலாம். சோதனைக் குழாயிலேயேகூடக் கருத்தரிக்கச் செய்து பெற்றுக் கொள்ளலாம். வருங்காலத்தில் குளோனிங் மூலம் ஒத்தைப் பிள்ளையை இரட்டையாகச் செய்து கொள்ளலாம். இதெல்லாம் இதிஹாச புராணகாலங்களிலேயே நடந்தாகிவிட்டது.

இதெல்லாமும் இன்னும் பிற விஞ்ஞான சமாச்சாரங்களும் பிரக்ருதியின் சட்ட திட்டங்களை நன்கு அறிந்திருந்த ரிஷி முனிவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

RangaRakes tamilnavarasam.com

ஜைனகாலஜி, ஜெனிட்டிங், இன்ஜினீயரிங் விஷயங்களும் அவர்களுக்கு அத்துபடியாக இருந்திருப்பதாலேயே பாயசத்தால் மகப்பேறும், கேட்டவர்க்குக் கேட்டபடியே பலம், குணம், அறிவோடு பிள்ளைகளும், கேட்ட எண்ணிக்கையில் மகன்களும், அறிவாளியின் விந்து கொண்டு அறிவான பிள்ளைகளும், தந்துள்ளனர். பிறவியினையும், வடிவத்தையும் மாற்றவும் செய்திருக்கின்றனர். உறுப்புகளையும் வெட்டி ஒட்டியுள்ளனர்.

இதெல்லாம், விந்தில் அடங்கிய விவரக் குறிப்புகளை அறிந்திருந்ததும், அதனால் விவரங்களை மாற்றி வேண்டுவது போல அமைக்கத் தெரிந்திருந்ததும் காரணமாகச் செய்யப்பட்டுள்ளது. மார்க்கண்டேயர், சத்தியவான் ஆயுளை நீட்டிக்கச் செய்யப்பட்டுள்ளது, இதைக் கதைகளாகச் சொல்லியிருந்தாலும் அதில் விஞ்ஞான சங்கதி இருந்திருக்கலாமே. இப்போதைய விஞ்ஞான வளர்ச்சியை விட மிக விரிந்ததாக அப்போதைய விஞ்ஞானம் இருந்திருக்கும் சாத்தியம் உண்டு. ஏனெனில், இன்றைய விஞ்ஞானிகளை விட அன்றைய மெய்ஞானிகள் அதிகமாகப் பிரக்ருதியைப் புரிந்து கொண்டிருந்தனர்.

இதனாலே, ஆச்சர்யமான அஸ்திர சஸ்திர போர்க் கருவிகளும், பூகோள அறிவும், ஆடல்பாடல் ஓவிய, போர், ஜோசியம், சிற்பம், கட்டட மருத்துவக் கலைகளிலும், அரசியலிலும் மற்றும் பற்பல தொழில்களிலும் அக்கால மாந்தர் சிறந்திருந்தனர்.

**பஞ்ச பூதம்**

பிரக்ருதி என்ற பெயரில் உள்ள பஞ்சபூதங்கள் பற்றிய அறிவே விஞ்ஞான வெற்றியைத் தந்துள்ளது. அத்துடன் காலம், இடம் பற்றிய கருத்தும், சத்துவம், ராஜசம், தமோ குணங்கள் பற்றியதான அறிவும், சித்தி விளையாடும் திறமையையும் மனோசக்தியால் வெற்றியடையும் ஆற்றலையும் தந்துள்ளது.

இரண்டுவகை செயல்பாட்டு விவரமும் செய்த தகவலும் நம் காலம்வரை இதிஹாச, புராணங்களாலும் நம் கால மஹான்களாலும், நூல்களாலும் கொண்டு வந்து கொடுக்கப் பட்டுள்ளன.



**பிருத்வி :** பூமி எனப்படும். பூதம் மணமுடையது. இதையறிய மூக்கும், கந்தமுடைய குதமும் (மலத்துளையும்) உடலில் இதன் அம்சமாக உள்ளது. இதில்லையேல் உலகில் நறுமணம் துர்மணம் எதுவுமே இருக்காது. உலகப் பொருள் எதற்குமே வாசனை இராது. மேலும் மேலே உள்ள பொருள்கள் கீழே வராது. வாயில் விட்ட காபி கழுத்திலிறங்காது, மழை கீழே பெய்யாது. ஒரு மகிழ்ச்சி பூகம்பம் ஏற்படாது. மரஞ்செடி கொடி மனித மற்ற உயிர்களின் நடமாட்டமிராது. கடலும் வானம் போல அந்தரத்தில் நிற்கும். கடலின் அடிப்பகுதி தெரியும். ஒரு வேளை நாமிருந்தால் தலைகீழாக இருப்போம். நமக்கெல்லாம் கனம் இருக்குமோ இருக்காதோ! உன் தலையில் களிமண் தானுள்ளது என யாரும் திட்ட முடியாது.

இதைப் பூமியை வெற்றி கொண்டவருக்குப் பூமி இருக்குமானால் சில திறமைகளிருக்கும். பூமி தடுக்காமல் அதனடியில் நுழைய முடியும். வேண்டாம் என்றால் அவரைப் பூமியிழுக்காது. எடையில்லாதவர் போலாவார். பர்ஃப்யூம் அடித்துக் கொள்ளாமலேயே எந்த நறுமணமும் வீசும்படி உலாவருவார். விரும்பவில்லையேல் ஓர் நாற்றம் அவரைப் பாதிக்காது; பற்றாது. பூகம்பம் ஏற்பட்டால் தடுக்கலாம். நினைத்தபோது ஔவையார் போல பூமியைப் பிளக்கவைப்பார். வெடி வைக்காமலேயே மலையைப் பிளப்பார். ஆதாரமாகப் பூமி தேவையின்றி நிற்பார்; நடப்பார்; சுவர், தரை அவரைத் தடுக்காது. தடையின்றிப் பார்ப்பார். எந்த மண்ணிலும் எந்தப் பயிரையும் உண்டாக்குவார். மணல்குவாரி, கல் குவாரிகளை நடத்தி எவ்வளவு லாரிகள் வேண்டுமானாலும் மணல், கற்களை உற்பத்தி செய்து அனுப்பி வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கலாம். அரசாங்கம் தடுக்காமலிருந்தால் இதெல்லாம் மானசிக சித்திகளாக அவருக்கு அமையும்.

**நீர் :** நீரின் குணம் சுவை. இதன் அம்சமாக நம் உடலில், வாயும், குறியும் உள்ளது. நீரினால் விளையும் பயிர் காய்கறிகள் சுவையுடனிருக்கின்றன. நீரைப் பொறுத்தே சமைக்கும் உணவும் சுவை பெற்றிருக்கும். நீர் இல்லையேல் உணவு உற்பத்தியிராது. பூமியில் கடலையே காணமுடியாது. மழையும் இருக்காது. மீன்கள் மட்டுமின்றி நாமும் இருக்கமாட்டோம். உணவிருக்காது என்பதால் மட்டுமில்லை, குடிக்கவே நீர் இருக்காதாகையால்

உயிர்கள் வாழா. எப்பொருளிலும், சுவை இருக்காது பஞ்சபூமி பாலைவனமாகிவிடும். உடலில் ரத்தம் ஓடாது உறைந்துவிடும். சூடு சுட்டெரிக்கும். புல் பூண்டு கூட இருக்கவே இருக்காது. பிராணன் கிடைக்காதாகையால் பிரளய கால அக்னியால் உலகம் காய்ந்து போகும்.

**நீரை வென்றவருக்கு**

நம் உடலிலுள்ள நீர்ச்சத்தை நினைவால் நிறுத்திக் கொள்ள முடியும். எங்கும் நினைத்தவுடன் நீரை உண்டாக்கவியலும். நீரைவற்றிப் போகச் செய்யவும் முடியும். இப்படிப்பட்டவரை நீர் மூழ்கடிக்காது; இழுத்துச் செல்லவும் கூடாது. நனைக்காது; விரும்பினால் நனைக்கும். நீர்மேல் நடக்கவும், மிதக்கவும் செய்வார். நீருள் உயிர்வாழ இவரால் முடியும். மழையை வரவழைப்பார். கடும் மழையை நிறுத்துவார். பிரளய ஜலத்திலும் இருப்பார். சுவையை உண்டாக்குவார்; மாற்றுவார்.

கடலலை சுனாமியாக உருவெடுத்து வந்தால் 'ப்பூ' என்று இவர், ஊதினால் பின்னால் ஓடிப் பதுங்கி விடும்.

இப்படிப் பஞ்சபூத வெற்றி உடையவராக இருந்ததாலேயே அகத்தியர் ஏழு கடலை உறிஞ்சினார். காவிரி பெருகக் காரணமானார். மேகங்களுடன் வந்து மழையைப் பெய்வித்துப் பாலைவனமாக இருந்ததை மஹாராட்டிர மாநிலமாக்கினார் எனும் ராமாயணம். மோசஸ் தம்முடன் வந்த மக்களைக் காப்பாற்ற கடலைப் பிளக்க வைத்து வழியுண்டாக்கினார் எனும் பைபிள். நீரை ஜெயித்தவர், இளமையுடன், அமைதியாக இருப்பார். நீர் எல்லாரையும் காப்பாற்றும். ஆகையால் காப்பாற்றும் கடவுள் விஷ்ணு கடலில் பள்ளி கொண்டிருப்பதாகவும், நீர் ப்ரளயம் ஏற்பட்ட போது உலகங்களனைத்தையும் தம் திருவயிற்றில் கொண்டு ஓர் ஆலிலை மேல் கிடந்தார் எனும் சாத்திரம்.

நீரை வென்றவர் பேச்சில் கனிவும் கருணையுமிருக்கும். அனைவரையும் கவர்ந்திழுக்கும் பேச்சும் பார்வையுமிருக்கும். குளிர்ச்சியாக எல்லாரும் விரும்புகிறவராக இருப்பார். பிறரை வாழ வைப்பார். நீரிலிருந்தும் மின்சாரம் எடுப்பர்.

நெருப்பு : எனும் பூதமில்லையேல் உயிர்கள் குளிரில் உறைந்து போகும். எப்பொருளுக்கும் எவருக்கும் உருவம் ஒளியிருக்காது.



நெருப்பின் குணம் ஒளி வடிவம் அக்கினியம்சமாகக் கண்களும் வடிவமும் உள்ளன. தீயின்றிப் பூமி இறந்த கோளாகும். 'இச்சை' - 'நோக்கம்' அக்கினியாலே உண்டாவது. இதுவே முயற்சியைக் கொடுப்பது, இந்த அக்கினியை எழுப்பிக் கொண்டே வாழ்க்கையைச் சாதனை பல செய்து உயர்த்திக் கொள்ளுகின்றனர். அக்கினி அம்சமே சூரியன், சூரியனே ஆரோக்கியம், செல்வம் தருகிறான். இதுவே கோபமாக இருந்து தீயதை அழிக்கும். எதிரியை ஜெயிக்கும், ஆகவே அக்கினி யம்சமாகச் சிவபிரான் அழிப்பவராக, வைத்தீசுவரனாகவும், செல்வம் மகப்பேறளிப்பவராகவும் சொல்லப்படுகிறார். அனல் மூலமும் மின்சாரம் எடுப்பர்.

தீயை வென்றவரை யாரும் வெல்லவியலாது. பெரிதாகத் தீ பரவினால் ஊதியணைத்து விடக்கூடியவராக இருப்பார். தீயை உண்டாக்குபவராகவுமிருப்பார். வியாதியைப் போக்கத் திறமை இருக்கும். நல்ல முயற்சியும், பொன்னுடலும், திறமையும், புகழும், வீரமும் உடையவராக இருப்பார். நன்கு பேசுவார். தம் பேச்சால் பெரிய கூட்டத்தை ஒன்றில் பொங்கி யெழுந்து ஈடுபடச் செய்வார்; எல்லா சுகமும், எல்லா நலமும் உண்டாகும். பிறருக்கும் உண்டாகச் செய்வார். தீ அவரைச் சுடாது.

தீயை வென்றவர், தம் உருவை மறைத்துக் கொள்ளவும், வேண்டியவர் எங்கிருந்தாலும் அவருக்குக் காட்டவும் செய்ய வல்லவர். பேச்சில் தீவிரமிருக்கும். பேச்சால் செயலால் இவர் புகழ் தீ போலப் பரவும். பிறரைக் காப்பார். தலைவன் போல இருப்பார். சூரியன் அட்சய பாத்திரம் தந்து பசியாற்றியது போல, ச்யமந்தகமணி தந்து பொன் அளித்தது போல ஒருவர் தன்னிடமுள்ள அக்கினியை வென்று காரியத்தில் ஈடுபட்டால் புகழும் பொருளும் பெறுவது உறுதி. அரச பதவி, போகம் அக்கினியே தரும். இதனாலேயே அக்கினியைப் பேண வேண்டும் என்கிறது வேதம். கடல் போல நெருப்பைக் கடவுள் வைக்காமல் தூரத்தில் சூரியனாக வைத்துச் சூடாக மட்டும் தருகிறார்.

உள் மனத்துடன் தொடர்பு கொள்ளவும், ஆரோக்கியமாக உடலுடன் மனமிருக்கவும், கல்வி பெருகவும் போரில் வெல்லவும் அக்கினியை வெல்லுதல் உதவும். விருப்பப்பட்ட வடிவ

RangaRakes

tamilnavarasam.com

மெடுக்கும் ஆற்றலும் பெறலாம். பல வடிவங்களில் ஒரே சமயத்தில் காட்சியுமளிக்கலாம். ஆத்மதரிசனம், ஆத்ம குணங்கள் ஏற்படும். தம்மையே மேன்மைப்படுத்துவர்.

வாயு : வாயுவெனில் காற்று எனக் கூறினாலும் இதன் உயிர் போன்ற பிராணனே பொருள் படும். காற்று பிராணன் இல்லையேல் ஏதும் சக்தியுடன், இயக்கத்துடனிருக்க முடியாது. பிரபஞ்சத்தில் இது நிறைந்துள்ளது. உள்வெளி மூச்சாக காற்றாக நம்மைப் பிரபஞ்சத்துடன் இணைக்கிறது. வாயுவின் குணம் தொடுகை ஸ்பரிசம் என்பர். இது உடலில் தோலில் இருக்கிறது.

காற்று இல்லையேல் சுவாசிக்க முடியாது. பிராணன் எனும் சக்தி கிடைக்காது. சலனமும், தொடும் உணர்வும் உலகிலில்லாமற் போகும். பிரபஞ்சம் உயிர்ப்புடன் இருக்க இது முக்கியம். காற்றாலை மூலம் மின்சாரம் எடுப்பர். இது சப்தத்தைக் கடத்திப் போகக் கூடியது. ஆகவே காற்று இல்லையெனில் சப்தம் கேட்காது. தோல் தொடுகை உணரவும், கைகள் இயக்கத்திற்கும் உடலிலுள்ளன.

வாயுப் பிறப்பு வலி தருகிறது. வாயு இல்லையெனில் செயல்படாமல் உறுப்புகள் விழுந்துவிடுகின்றன. வாதம் என்பர் இதை. பக்கவாதம், முகவாதம் எனப் பல கேடு உண்டாகும். வாயு நன்றாக இருந்தால் அதுவே வலிமை.

இதை ஜெயித்துவிட்டால் உடல் பீமன், அனுமன் போல பலத்துடனிருக்கும். வேகமாக வேலை செய்யலாம். சோர்விருக்காது. உடலும் மனமும் கூட நன்கு வசப்படும். இதற்கே ஒழுங்குடன் மூச்சை இழுத்தும் விட்டும், அடக்கி வைத்தும் பிராணாயாமம் செய்வர். பிராணனை மூச்செனும் சுவாசத்தின் மூலம் கட்டுப்படுத்தி விட்டால் மனமும் கட்டுப்பட்டுவிடும். மனம் சக்திமிக்கதாகிவிடும். பிறகு பல சித்திகளுண்டாகிவிடும்.

எல்லாவற்றிலும் பிராணனிருப்பதால் இதை வென்று விட்டவர் எந்த ஜடப் பொருளையும் தொடாமலேயே ஆட்டி வைக்கலாம். காகிதத்தை கூப்பிட்டால் கூட ஓடிவரும். ஒரு நாற்காலியை அழைத்தாலும் நாய்க்குட்டி போலத் தொடர்ந்து வரும். பிராணவெற்றி உடையவர், அது கூடுவதாலும், இருக்க வேண்டிய அளவில் குறைவதாலும் நோய் வாய்ப்பட்டவரை



பிராணனைத் தம்மிலிருந்து கொடுத்தும், எடுத்தும் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். பிராண சிகிச்சை செய்யலாம். தொட்டும், பேசியும் பிறரைப் பிராணன் தந்து நோயை நீக்கியும் உற்சாக மூட்டியும் எழுச்சி பெறச் செய்யலாம்.

குருடரைப் பார்க்கச் செய்ய, முடவரை நடக்கச் செய்ய, உடலைச் செழிப்பாக்க, கெட்டவரை நல்லவராக்க அப்படிப் பட்டவராலாகும்.

பூமியை விட்டு மேலெழ (Lavitation) வாயு ஜெயம் உதவும். பிராணனை அபானனை மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் செலுத்தி இரண்டையும் சேர்த்து மஹா வாயுவாக்கி குண்டலினி சக்தியைக் கிளப்பி மேலேற்றி ஆறு சக்கரங்களிலும் ஏற்றிப் பஞ்ச பூத வெற்றி பெற்று மஹா குருவாக எட்டுப் பேராற்றலுடனும் விளங்கலாம்; முக்திக்கும் போகலாம்.

பண்பிலும் உயர்ந்து பிரபஞ்ச பல படித்தரங்களிலும் உள்ள பல பெரிய சட்டங்களை அறிந்து இயற்கையில் இறைவனைப் போல எதுவும் செய்து காட்டலாம்.

இறந்தவரைக் கூட ஒரு மணி நேரத்திற்குள் பிராண சக்தியைக் கொண்டு அவருடைய பிராணனைத் திரும்பி வரச்செய்து உயிரெழுப்பலாம்.

உடலைச் சூடுகுளிர் பாதிக்காத, இரும்பு போன்ற திடமாக ஆயுள் நீண்டதாகச் செய்து கொள்ளலாம். இதைக் 'காயசம்பத்' எனும் சித்தி என்பர். பிராண வெற்றியால் பஞ்சபூத உடலைப் புடம்போட்ட பொன்னுடலாகச் செய்து கொள்ளலாம். அதீதப் புலனாற்றல், மானசிக ஆற்றல்கள் எல்லாமே பிராண சித்தியால் கிட்டும். பிராண சக்தியால் அணுக்கள் மேலும் ஆளுமை உண்டாகும். இதனால் பூதங்களும் வசமாகும். எனவே வெற்று இடத்தில் பொருட்களைப் படைக்கலாம்.

தேகத்தை விட்டவராக (விதேஹர்) ஆவியுடலுடன் போய் வரலாம். இதுவும், இயற்கையில் ஒன்றியதும் (பிரக்ருதிலயர்) எல்லாவகை அற்புதங்களையும் செய்யக் கூடிய நிலைகளாகும்.

மனமும் பிராணனும் மிக நெருக்கமானவை. வாயு வேகம் மனோவேகம் என்று இதனாலேயே கூறப்படும். ஆகவே வாயுவை அடக்கி வெற்றி பெற்றால் மனமும் அடங்கிவிடும்.

RangaRakes
tamilnavarasam.com

பிறகு நினைத்தது நடக்கத் தடையில்லாததால் சித்தி விளையாடுவது எளியது. மனம் சும்மா இருப்பதில்லை, இங்கும் அங்கும் மந்திபோல அலைகிறது. ஒரு விஷயத்திலிருந்து பல விஷயங்களுக்கும் நிலையில் நிற்காமல் தாவி ஓடுகிறது. இது நின்றால்தான் அமைதி, அப்புறம்தான் சித்தி பற்றி முயற்சி. நினைப்பது உண்மையாவதே சித்தியாகும். அது கைப்பட வேண்டுமெனில், மனம் ஒன்றில் நின்றாக வேண்டும். இதற்கு வாயு வெற்றி உதவும்.

**ஆகாயம் :** இதைப் புத்தர்கள் 'இல்லாதது' என்பர். அதாவது ஆகாயம் என்ற ஒரு பூதம் கிடையாது என்பர். அவர்கள் மற்ற நான்கு பூதங்களையே ஏற்பர். திருவள்ளுவர் பௌத்தர் என்பவர் அவர் ஆகாயம் என்ற ஒரு பூதத்தை ஏற்றிருப்பதைக் காண வேண்டும்.

ஆகாயம் என்பது 'வெளி', 'விண்', 'வானம்', என்பர். நாம் காணும் அறியும் பிற பூதங்களும், கோள்களும் கணக்கற்ற விண் மீன்களும் உள்ள இடமே (space) ஆகாயம். இதன் குணம் சப்தம் ஒலி, இதன் அம்சமாக உடலில் காதுகள் உள்ளன. குரல்வளை உள்ளது. ஆகாயத்தை உடைத்தால் ஒலியுண்டாகும். ஒலியின் சூட்சுமமே ஆகாயம். ஆகாயத்தின் வெளிப்பாடே ஓசை. 'ஓம்' எனும் ஓரெழுத்து ஓசையிலிருந்து மற்ற பிற ஓசைகள் உண்டாவது போல, ஓங்கார வாசகனான திருமாலிடமிருந்து இந்த உலகங்கள் வந்துள்ளன என்று சுவேதாசுவதர உபநிடதம் (IV 1 மந்திரம்) உரைப்பது போல திருக்குறளும் (1-1) கூறுகிறது.

ஒவ்வொரு பொருளுக்கும், ஒவ்வொருவருக்கும் இடையிலும், மேலும், கீழும் இருக்கும் இடைவெளியே வானம் தான். நீருள் மீன்கள் போல வானுள் எல்லாமும் எல்லாரும் இருக்கிறோம். காற்றும் ஆகாயம் முழுதும் வீசுகிறது.

ஆகாயத்தை ஈதர் என்பர். இது அதில் இருப்பதால் ஆகாயத்தில் எவ்வளவோ சமாசாரங்களுண்டு. அதுவே சூநிய வஸ்து இல்லை. மேலும் நுட்பப் பொருளாக நாம் கருதும் இந்த வானம் ஸ்தூல பூதம் (Element). பூதம் என்றால் மூலப்பொருள் என்பது பொருளாகும்.

சொற்களாக ஒலியாக இருந்ததே பொருட்களாக, பிரபஞ்சமாக உருவாகியுள்ளது என வேதாந்தம் கூறுகிறது.



பொருள்களாகத் தோன்றிப் பிறகு யாராலும் பெயர் சூட்டப்படவில்லை. எனவே இது ஒலியுலகம். ஆரம்பகாலம் முதல் இங்கு எல்லாரும் பேசியது எல்லாம் ஆகாயத்தில் பதிவாகியுள்ளது. உரிய முறையில் ஆகாயம் வெற்றி கொள்ளப்பட்டால் யார் கூறியதை அறிய வேண்டுமானாலும் அறியலாம். அறிந்து யாராவது கூறினால் கேட்போர் நம்ப வேண்டுமே.

ஆகாயத்திலுள்ள அலைக்கற்றைகள் மூலம் தகவல் பரிமாற்றங்களும், தொலைக்காட்சியும் சாத்தியமாகியுள்ளன. நமக்கு இதுவே கண்களால் காண முடியாததாக உள்ளது. ஆகாயத்திலுள்ள பல சமாசாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்பாட்டிற்கு வரலாம். இந்த இடமான ஆகாயம் நம்முடலில் உயரம், பருமனை அளித்திருக்கிறது. ஆகாயம் நுட்பமாகயால் அதனால் எல்லாவற்றிலும் ஊடுருவமுடியும். இத்தவத்தினா லேயே நாம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நகர முடிகிறது. பொருட்களையும் நகர்த்த முடிகிறது. ஸ்தூலப் பொருளில் சூட்சுமப் பொருள் ஊருடுவக் கூடியது, உதாரணமாக ஒரு பலகையின் மேல் தண்ணீரை விட்டால் அது ஊறி ஊறி, உட்புகுந்து அடிப்புறம் வந்துவிடும். இப்படியே, காற்றும் சுவர், கதவு அனைத்திலும், ஊடுருவும். அதை விட நுட்பப் பொருளான ஆகாயம் எளிதாக ஊடுருவி விடும். இதே போல ஸ்தூல உடலிழந்த நுட்ப உடலான ஆவிகளும் ஊடுருவும்.

ஆகாயத்தை வென்றவருக்கும் அதன் குணங்கள் எல்லாம் வந்து விடும்; இதனால் பல அற்புதங்கள் புரியும் திறமையும் கைகூடிவிடும்.

ஓரிடத்திலிருந்து கொண்டே எவ்வளவு தொலைவில் வேறிடத்திலிருப்பவரையும் தொட்டிழுக்கலாம். பேசலாம். உடலை எவ்வளவு பெரிதாகவும் செய்து கொள்ளலாம். வானிலுள்ள கிரஹங்களுக்குப் போகலாம் பறக்கலாம். ஆவி உதவியின்றியே உலகமுழுக்கத் தோன்றிச் செய்தி வாசிக்கலாம். வானொலியின்றியே பாடிக் கேட்கச் செய்யலாம். திருவள்ளுவர், அலெக்ஸாண்டர் முதலிய முற்காலத்தில் வாழ்ந்தவர்களின் இறந்து போன தாத்தா அல்லது மனைவியரின் பேச்சை டி.வி.டியைப் போட்டுக் கேட்பது போல ஆகாயத்தின்

RangaRakes
tamilnavarasam.com

பதிவிலிருந்து கேட்கலாம். ஆகாயம் அதைத் தவிர்ந்த பிற பூதங்களைத் தன்னில் கொண்டிருப்பது போலப் பிற பூதங்களிலும் இருப்பதால் பிரச்சினை ஏற்படாமல், அக்கினியின், காற்றின், நீரின், பூமியின் அம்சங்களும் இம்மாதிரியான சித்திகள் புரியத் தேவையான அளவில் உதவி செய்வனவாகும்.

சித்திபண்ணுபவருக்கு இந்த பஞ்சீகரணமும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

**பஞ்சீகரணம் (Quintuplication)**

ஆகாயமே இருகண்களாலும் காணமுடியாமலிருக்கும் போது ஸ்தூலம் எனப்படுகிறதெனில் சூட்சும ஆகாயம் எப்படி இருக்கும்? எப்படியறிவது? கற்பனையாவது செய்து காணலாகுமா?

சூட்சுமமாக இருக்கும் குன்மாத்திரைகள் நிலையில் ஆகாயத்தில் அரைப்பங்கை எடுத்துக் கொண்டு, மீதி நாலு பூதங்களில் (காற்று, தீ, நீர், பூமி) அரைக்கால் பங்குவீதம் எடுத்து அரைப்பங்காக்கிச் சேர்த்தால் ஸ்தூல ஆகாயம் வரும். இதே போல மற்ற பூதங்களின் பாதியை எடுத்துக் கொண்டு மற்ற நான்கு பூதங்களின் அரைக்கால் பங்குவீதம் எடுத்துச் சேர்த்தால் மற்றநான்கு பூதங்களும் ஸ்தூலமாக வரும். இப்படித்தான் எல்லாப் பொருளும் இருக்கும் இடமாக நாம் காணும் ஆகாயமும், மேலேபடும் காற்றும், சுடும் தீயும், பருகும் நீரும், வாழும் பூமியும் வந்துள்ளன. இது பஞ்சீகரணம்.

இவ்வாறு பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்சபூதங்களைச் சேர்த்தே இந்த ஸ்தூலப் பிரபஞ்சம் உருவாக்கப்பட்டுள்ளது.

**இது எப்படி?**

அந்தக் கவலை நமக்கு வேண்டாம். ஏனெனில் அது படைக்கும் கடவுளுடையது. ஆனால் பிரபஞ்சத்தில் உள்ள பொருளைப் போல எதையாவது எங்குமிருக்கும் பஞ்சபூத அணுக்களைச் சேர்த்துக் காலம் இடம் கட்டுப்பாட்டை மீறி உண்டாக்கும் சித்தி விளையாட இந்தப் பஞ்சீகரண அறிவும் தேவை. பிரபஞ்சத்தில் ஒவ்வொரு பொருளும் எப்படி, என்ன பொருளணுக்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறதென்ற



அறிவற்றவரால் எப்பொருளையும் மாயமாக உடனடியாக உற்பத்தி செய்து விடமுடியாது.

எதைச் செய்யவும் மூலப்பொருளும், துணைக் கருவிகளும், செய்வோனும், அதைச் செய்யும் ஞானத்துடன் தேவை. இறைவனைப் பொறுத்தவரை, எல்லாம் அவரே. ஆனால் சித்திவிளையாட நினைக்கும் மனிதருக்குச் செய்வோனாக மட்டுமே தானிருக்க முடியும். துணைக்கருவி தன்மனமாக இருக்கலாம். மூலப்பொருள் உலகம் சித்தி செய்யும் பஞ்சபூதங்களை மாற்றியமைக்கும் ஞானம் மூலப் பொருளறிவு எல்லாம் தேவை. மனத்தைப் பற்றி உலகைப் பற்றி, நினைவுபற்றி செய்முறையறிவுடன் நிச்சயம் தேவை. இல்லாமல் சித்தி விளையாடலில்லை.

**சம்யமப் பயிற்சி**

ஒரு மரத்தின் மேல் மாங்காய் இருக்கிறது. கல்லை எடுத்து அதைப் பார்த்து 'அது விழவேண்டும்' என்றெண்ணி மாங்காய் மேலே எறிகிறார் ஒருவர். குறி சரியாகி அது அடிக்கப்பட்டு விழுகிறது. இதில் எண்ணமும் பார்வையும் தான் முக்கியம். அதுவே மனம் குவிந்ததற்கு ஏற்பச் சரியாக அமைய, நினைத்தது நிகழ்கிறது. இப்படிக் குவிந்த மனமே காலை நன்கு ஊன்றிப் போதிய பலத்தோடு கல்லை எறியக் காரணமாகிவிடுகிறது. இப்படித்தான் சித்திகளும் விளையாடப்படுகிறது.

இதனாலேயே வாழ்க்கையிலும், 'உங்களுக்கு வேண்டியதை எண்ணி உங்கள் கடமையாகச் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். என்ன நடக்குமோ என்று முடிவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்!' என்று கீதையில் கூறப்படுகிறது. அதனால் மனச்சக்தி சிதறிவிடும்.

**தஜ்ஜயாத் ப்ரஞ்ஞாலோக :** பதஞ்சலி யோக சூத்ரத்தில், விபூதிபாத 5-ஆம் சூத்ரம் இது. 'அந்த வெற்றியால், பிரபஞ்சத்தில் எல்லாவற்றைப் பற்றியும் அறிவு பெறும் யோகி அவற்றை அடக்கியாளவும் வல்லவனாகிறான் என்பது அதன் பொருள்.

எந்த வெற்றியால் என்றால் சம்யம வெற்றியால் என்பது பதில், சம்யமமம் என்பது தாரணை, தியானம், சமாதியின் கூட்டு,

RangaRakes
tamilnavarasam.com

அறிவுக்குப் பொருளாகும் சமாசாரங்கள் உலகில் அதிகம். ஸ்தூலமாகவும் சூட்சுமமாகவும் பல உள்ளன. ஸ்தூலப் பொருள்களின் மேல், பெரிய சிறிய நடுத்தரமானவற்றின் மேல் முதலில் சம்யமம் பயிற்சிக்க வேண்டும். பிறகு நுட்ப, மிக நுட்ப, மிகமிக நுட்பமானவற்றில் பழக வேண்டும். ஒரு பொருள் பற்றி முழு மனத்தோடு ஆழ்ந்து அது பற்றிய அறிவு ஏற்படும்வரை சிந்தித்தலே சம்யமம் ஆகும். இது தன்னை அடக்கி ஆளுவது போல அப்பொருளையும் கட்டுப்படுத்தி ஆட்சி செய்ய அறிவதாகும்.

ஏகலவ்யன் ஆசார்யா துரோணர் மேல் சம்யமம் செய்து அவரிடமிருந்த வித்தைகளை அப்படியே அடைந்தான். குளவியால் கொட்டப்படும் புழு அதே மாதிரி குளவியாகி விடுகிறது. சத்வ, ரஜஸ், தமோகுணங்களே இயற்கை எனப்படும். இதை வேறு பெயரிட்டு அழைத்தாலும் அந்த மூன்று குணங்களே இதுவாகும். இதே போல, தாரணை, தியானம். சமாதி என்ற மூன்றுமே சம்யமம் ஆகும். இதில் நான்காம் நிலை கிடையாது.

**மேல் நிலை**

சம்யமம் அடைந்த நிலையே உயர்ந்த நிலை யோகத்தில். ஏனெனில் இதனால் எந்த எல்லையையும், அதாவது, சித்திகள், ஆத்மதரிசனம், இறைவன் எந்த நோக்கத்தையும் எய்த முடியும். ஒரு வீட்டினுள் செல்ல சாவி போன்றது சம்யமம். எனவே இதை யோகி படிப்படியாகப் பழகுவான். ஸ்தூலம் முதல் படிப்படியாக நுட்பப் பொருள்களில் சம்யமம் பழகி உயர்ந்த பலநிலைகளை அடைகிறான். சம்யமத்தின் விளைவே இம்மேல் நிலைகள்.

யோகத்தில் கூறப்பட்ட இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரங்கள் வரை உள்ளதெல்லாம் வெளியோகம் எனப்படும். அதாவது உடலை வைத்து வெளிப்படையாகச் செய்யும் நுணுக்கங்களாகும்.

ஆனால் பிறறியாதபடி மனத்தால் செய்யும் அந்தரங்கமான யோகம் (உறுப்புகள்) தாரணை, தியானம், சமாதி மூன்றும் இவை மிக முக்கியமும் நெருங்கியதுமாகும். மிக நுட்பமான இவை யோக வெற்றிக்கு மிக அருகில் உள்ளவை.





இதனால் உறை உணர்வு இழக்காத, பிரபஞ்ச உணர்வைத் தாண்டிப் போகாத, பிரபஞ்சப் பொருட்களில் எதையாவது ஆதாரமாக வைத்தெழுந்த சமாதியடைய தாரணை, தியாந சமாதிகள் உதவியாவன. இந்நிலை **சம்ப்ரஞ்ஞாத** சமாதி எனப்படும். இது சித்திகளைச் செய்யத் தேவையானது.

முதலில் அடையும் சமாதி பழகும் சமயத்தில் மட்டுமிருப்பது. இதை அடிக்கடி பழகப்பழக எப்போதுமிருக்கும் சமாதிநிலை வித்துடன் கூடியதாக ஏற்படுகிறது. இது அதுவே.

இதெல்லாம் பிரக்ருதியின் பெரிய பெரிய சட்டங்கள். இவற்றை எட்டாமல் கைப்பற்றாமல் யோக சித்திகளில்லை.

அஷ்டமா சித்திகளைப் பஞ்சபூத வெற்றியால் அடைந்தும் சம்யமசித்தியால் சாதித்தும் சித்தத்தில் வாசனை சம்ஸ்காரம் விதையாக உள்ள சமாதி இது. சபீஜ சமாதி என்றும் சம்ப்ரஞ்ஞாத என்றும் கூறப்படும்.

நசிகேதன் எமதர்மராஜனுடன் பேசிக்கொண்டு இருந்தநிலை, எமராஜன் கூறியபடி தரத் தயாராக இருந்த சர்வவல்லமைகள் நீண்ட ஆயுள், செல்வநிலை, அளவற்ற சுகங்கள் கிட்டியநிலை.

ஆனால் மிக உயரியநிலை என்பது இதையடுத்து உண்டாகக் கூடிய **நிர்பீஜசமாதி – நிர்விகல்பசமாதி, அசம்ப்ரஞ்ஞாத சமாதியாகும்.** அதாவது வித்தில்லாத, வாசனையும் வறுக்கப்பட்ட இனி சித்தமே விருத்தியடையாத நிலை. ஆத்மா மட்டுமேவாக இருப்பது.

**பல்லுலகம்**

இயற்கை பலப்பல படித்தரங்களில் பலப்பல பெரிய விதிகளைக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்திலும் இப்படி வெவ்வேறு அண்டங்களுக்குப் போனால், விண்வெளியில் பலகோடி மைல்கள் மேலே மேலே போனால் இது புரியலாம்.

ஆனால் ஈரேழு பதினான்கு உலகங்களாக வேதாந்தம் காட்டுகிறது. இவை ஒவ்வொன்றாகப் பூவுலகிலிருந்து ஏறு முகமாகவும், இறங்கு முகமாகவும் உள்ளனவாம். ஒவ்வோருலகில் உள்ள உயிர்கள் பற்றியும், ஒன்றழியும் போது அங்கிருப்பது அடுத்த உலகில் ஏறுவதும் கூறப்பட்டுள்ளது. இப்படி எல்லா உலகும் அழிவதும், மீண்டும் படைக்கப்படுவதும், பிரபஞ்ச உற்பத்தி (Cosmology) யாகச் சொல்லப்பட்டுள்ளது.

அழியாததாக பரப்ரும்ம லோகம் கூறப்பட்டுள்ளது.

| கீழேழ் உலகங்கள் | மேலேழ் உலகங்கள் |
|---|---|
| 1. அதல | 1. பூலோகம் - நம்முடையது |
| 2. விதல | 2. ஸ்வர்லோகம் - சொர்க்கம் |
| 3. சுதல | 3. புவர்லோகம் - விண்ணுலகம் |
| 4. மஹாதல | 4. ஜனர்லோகம் - புண்ணியவான்கள் |
| 5. தலாதல | 5. மஹர் லோகம் - மஹாமனிதர் உலகம் |
| 6. ரஸாதல | 6. தபலோகம் - தவசிகள் லோகம் |
| 7. பாதாளம் | 7. சத்யலோகம் - நான்முகப் பிரும்மா உலகம் |

இந்த லோகங்களை விளக்குவது இந்நூலின் நோக்கமில்லை. ஆனால் வகைவகையாக உயிர்களும் வாழ்க்கையும் அமைப்பும் இங்கெல்லாமுண்டு. சிலர் இவை யோக சக்கரங்களும் பிரக்ஞைகளும் என்பர். இயற்கைக்கு உட்பட்ட இவை வேறு வேறு விதிகள் கொண்டவை.

எல்லா விதிகளும் வசப்பட்டிருப்பது முக்தருக்கு. நம் வழக்கத்தில் நாம் அடிக்கடி கூறுவது, 'பூ, புவர், ஸ்வர்' எனும் மூவுலகங்களே. இதைப் பூலோகம், அந்த ரிட்சம் (இடைப்பட்டது) சொர்க்கம் எனக் குறிப்பர். மேலுலகங்களை உடலில் மூலாதாரம் முதல் சஹஸ்ராரம் வரை குறிப்பது யோகம். 8-ஆவதுதான் வைகுண்டம்.

இப்படி இருக்கும் இயற்கை, பூமி, நீர், தீ, வாயு, ஆகாயம், அவ்யக்தம் (வெளிப்படாதது) என்று இருக்கிறது. பஞ்சபூதங்களுக்கு உரிய ஓசைகள் அவற்றின் பீஜாட்சரமாகும். அதாவது இந்த ஓசைகளே அவற்றை உண்டாக்கியவை. அவை:

| | | |
|---|---|---|
| நிலம் | - | லம் பீஜ மந்திரம் |
| நீர் | - | வம் பீஜ மந்திரம் |
| தீ | - | ரம் பீஜ மந்திரம் |
| வாயு | - | யம் பீஜ மந்திரம் |
| ஆகாயம் | - | ஹம் பீஜ மந்திரம் |

RangaRakes



## ஆதார உடல் தியானம்

இப்படி மந்திரம் கூறிப் பஞ்ச பூதங்களை அவற்றின் தன்மைகளுடன் தியானம் செய்து வெற்றி பெறலாம்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் உடலில் குறிக்கும் குதத்திற்கும் நடுவிலிருந்து தொப்புள் வரை உள்ள ஆதாரங்கள் **ஸ்தூலஉடல்.** பூமி, நீர், ஆகாய அம்சங்கள் என்று தியானிப்பதால் இந்தப் பகுதியில் உண்டாகும். நோய்களைப் போக்கிக் கொள்ளலாம். மிருக இச்சையை மாற்றிக் கொள்ளலாம். இதுவரை தமோ குணம் இருக்கும்.

அநாஹதம் முதல் ஆஞ்ஞை ஆதாரங்கள் வரை, காற்று, ஆகாயம், மனம் எனும் மூன்று தத்துவங்கள், மார்பிலிருந்து நெற்றிவரை **சூட்சும உடல்** என எண்ணி தியாநம் செய்து, மனக்கோளாறுகளை மேலுடல் தொடர்பான நோய்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இதுவரை ரஜோ குணம். இதற்கு மேல் சஹஸ்ராரம் தலை உச்சிவரை **காரண உடல்.** இங்கு தியானம் செய்து அறியாமை போக ஞானம் பெறலாம். யோக நித்திரை புரியலாம். சத்துவ குணத்தை வளர்க்கலாம்.

சூக்கும உடலை நினைத்து ஸ்தூல உடலைத் தளர்த்தி வெளியே போய் உலவி வரலாம். உடல் தாதுக்களை அதிகரித்து சக்திமிக்கவராக முடியும். கூடுவிட்டுக் கூடுபாயவும் முடியும்.

தமோகுணத் தாக்கத்தால் சில சித்திகள் கிட்டும்.

ரஜோ குணத் தாக்கத்தால் சில சித்திகள் கிடைக்கும்.

சத்துவ குணத் தாக்கப்படி சில சித்திகளமையும். இதுவரை சித்திகளமைய அடைய வேண்டியவையாகப் பார்த்ததெல்லாம் இயற்கையின் பெரிய பெரிய சட்டங்களாகும்.

### மன நிலைகள்

மூடத்தனம், சிதறும் நிலை, குழம்பும் நிலை, ஒருமுகப்பட்ட நிலை, இதன் பிறகு அழிக்கப்பட்ட மனநிலைகள் மனிதராகிய நமக்கு உண்டு. இந்த ஐந்து நிலைகளில் நம் மனம் முன்னேறுகிறது. இது சட்டம். இதற்கேற்ப நம்மிடம் குணமும் மாறும். பிறகு மனமில்லாத நிலையை அடைகிறோம். முடிவில் சித்த நிரோதம்; சுத்த சத்துவத்தில் ஞானமும் ஆநந்தமுமுடைய மோட்ச நிலையில் நாம் சேருகிறோம்.

tamilnavarasam.com

அப்போது இயற்கையின் பல உலகங்களை அடைந்து ஆங்காங்கே உள்ள ஒன்றை விட ஒன்று பெரிதாக்கும் சட்டங்களை அடைந்து அதற்கான நிலைகளை அனுபவித்துப் பலமாறுதல்களைச் சித்திகளாகக் கொண்டு முக்தி நலத்தைப் பெறுகிறோம். இதுவே பெரிய வெற்றியாகும். இங்கு தான் மனித வாழ்வின் பெரிய இறுதி நோக்கம் நிறைவுறுகிறது.

ஆகவே ஸ்தூலப்பிரபஞ்சத்தில் மேலே மேலே இருக்கும் உலகங்களைப் பற்றிய கவலையின்றி அடுத்தடுத்து அடையப் போகும் மனநிலைகளை அடைந்து இயற்கையின் பெரிய விதிகளை வென்று மனமற்ற பிறவியற்ற நிலை உள்ள முக்தி பெறவே முயலுவோமாக!

## 5. இயற்கையின் திருநடனம்

**இறை செயல்**

ஜீவர்களை மகிழ்விக்க, இறைவனால் ஆட்டிவைக்கப்படும் இயற்கையின் திருநடனமே நமது வாழ்க்கை. ஓர் அழகான பெண் சும்மா உட்கார்ந்திருந்தால் யாருக்கு என்ன பயன்? இறைவன் தான் லீலாரசம் அனுபவிப்பது எப்படி? ஜீவர்கள் தாம் இன்ப துன்பமடைவது எப்படி?

ஜீவர்கள் பலர்; இயற்கையோ ஒன்றே; ஆனால் பரந்தது பெரியது. ஜீவரோ அணுப்போன்றவர். ஆகவே ஒரே பிரக்ருதியே எல்லா ஜீவர்களுக்கும் போதுமானதாக இருக்கிறது. தன்னுணர்வும், தானே இயங்கும் அறிவுமற்ற பிரக்ருதியை இறைவனே இயங்க வைக்கிறான். அறிவும் உணர்வுமற்ற ஒரு பூவை மேலெறிந்தால் இன்பமடைகிறான் ஜீவன். ஒரு கல்லை விட்டெறிந்தால் துன்பமுறுகிறான் ஜீவன். கல்லாகவும் பூவாகவும் பிரக்ருதியே ஜீவர்களை மோதுகிறது. ஒரு ஜீவனுக்குக் கல்லாகவும், ஒரு ஜீவனுக்குப் பூவாகவும் விழுவது இயற்கையான பிரக்ருதி. ஒரே ஜீவனுக்கே ஒரு சமயம் பூவாகவும் மறுசமயம் கல்லாக விழுவதும் இயற்கையே. இது எல்லாம் இறைவன் செயல்.

இயற்கையின் செயல்கள் ஓரிலக்கணமுடையனவாக இருப்பதால் நடனம் எனப்பட்டது. இலக்கணம் விதிகளை உடையது. அதாவது பஞ்சபூதம், காலம் இடம் எல்லாம்



விதிகளாகும். ஒவ்வொரு பூதத்திற்கும் உள்ள குணங்கள், மூவிதமான கால ஓட்டம், தாரணை, தியானம், சமாதிகளைக் கொண்ட சம்யமம் பெரிய பெரிய சட்டங்கள். இவற்றைச் சரியாகச் செய்யப்படும் யோகத்தால் வசப்படுத்திக் கொண்டால் கண்டிப்பாக சித்திகள் விளையாடலாம். இதைச் சென்ற பகுதியில் விரிவாகக் கண்டோம். ஆனால் விஞ்ஞானம் அண்டங்களை அடுத்தடுத்துச் சென்று பிரபஞ்சம் முழுவதையும் கண்டு என்னென்ன விதிகளுக்குள்ளன, எது எப்படிப் போகப் போக மாறி பெரிய பெரிய விதிகளை உடையது என்று கூறிவிடவில்லை. புவியீர்ப்பு விசை குறிப்பிட்ட உயரம் வரை தானுள்ளது. அது போல ஒளியின் விதி, ஆர்க்கமிடீஸ் விதி ஈன்ஸ்டீன் விதி இவையெல்லாம் மாறி வேறு எப்படி உள்ளது என அறியவில்லை. ஆனாலும் யோகத்தில் பஞ்சபூத வெற்றி கால, இட, முக்குண வெற்றி, மனம் பிராணன் வெற்றிகளால் வசப்படும் விதிகள் இயற்கையின் நடனத்தை நமக்கேற்றாற்போல மாற்றும் அற்புதங்களே என்பது விளக்கப்பட்டுவிட்டன.

இந்த விதிகளைப் போட்டவர் இறைவனே. இவற்றை வெல்லுவது இறைவன் செயலே. சாதாரணச் சின்னச் சின்ன விதிகளால் இயற்கை ஜீவர்களை அடக்கி வைத்துள்ளது. சம்சார வாழ்வில், யோகம் மூலம் இந்தச் சின்ன விதிகளை மீறிச் செல்லுபவரைப் பெரிய விதிகள்படி சித்திகளை விளையாடும் ஆற்றல்களை அளித்து வசப்படுத்த இயற்கை முயலும். இதுவே இயற்கையின் திருநடனமாகும். ஆகவே இறைவனைப் பணிந்தே யோகம் செய்ய வேண்டும் என யோகச் சட்டம் வைத்துள்ளது.

கையாலியக்கப்பட்ட எந்திரங்களாலான காரியங்கள் மின்சாரத்தாலியக்கப்பட்ட இயந்திரங்களால் முடிந்தன. மின்னணு (electronic) இயந்திரங்களால் பிறகு செய்யப்பட்டன. கம்பியில் அனுப்பப்பட்ட மின்சாரம் கம்பியின்றியும், நீரிலும் கடத்தப்பட்டது. மின்சாரத்திற்கு மாற்றாக மின் அணு வந்தது. இப்போது 2ஜி, 3ஜி என்ற அலைகளில் பாய்ச்சப்படுகிறது செய்தி. இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட ஒரு சக்தி வந்து கொண்டிருக்கிறது. உலகில் எத்தனையோ நிகழ்வுகள் நடனம் போல வாழ்க்கையரங்கில் நடக்கின்றன. இனிமேல் மானசிகமாக நடத்தப்பட வேண்டியதே மிச்சம். இந்த வகை உயரிய சட்டமே சம்யமம்.

RangaRakes

tamilnavarasam.com

**சம்யமம் என்பது**

பிரத்யாஹாரம் எனும் புலன்களை அதன் பொருள்களில் இருந்து மீட்கும் சாதனையினால், ஸ்வாமி விவேகாநந்தரின் குருபாயி ஸ்வாமி அபேதாநந்தா கால் உடைந்த காரணத்தால் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அந்தக் காலுடன் இருந்த தொடர்பை மனம்மறக்க எப்போதும் போல வேலை செய்து கொண்டிருந்து பழையபடி காலைச் சரி செய்து கொண்டு விட்டாராம்.

பிரத்யாஹாரத் திறமையால் மீட்கப்பட்ட மனத்தை உடலில் ஒரு குறிப்பிட்ட ஆதாரத்தில் குவித்து அதைத் தவிரப் பிற பகுதிகளை மறந்து முழுமனமும் அதில் ஈடுபட்டுத் தாரணையை உண்டாக்கிக் கொள்ள முடியும். இப்படி ஒரே இடத்தில் மனம் குவிந்து கவனிப்பதால் அவ்விடத்து நோயைப் போக்கிக் கொள்ளலாம். ஏனெனில் இப்படிப்பட்ட தாரணையால் ஓரிடத்திலேயே பிராணன் செலுத்தப்பட முடியும். இதனால் பிராணன் குறைவுபடவந்த நோய் தீரும். பிராணனைக் குறைத்தும் வீக்கம், வலி முதலியவற்றைப் போக்கிக் கொள்ள முடியும்.

பிறகு வரும் **தியானத்தால்** உண்டாகும் ஆல்ஃபா அலை நிலையில் நினைத்தது நிறைவேறும். இதுவே விருத்திகளே இல்லாதது போன்ற நிலையில் தியானப் பொருளின் உண்மையை மட்டும் உணர்த்தினால் **சமாதி**யாகும். இதில், தியானத்தில் ஒரே விருத்தியே இருப்பதால் அதுவும் தெரியாமல் எதுவுமே இல்லை என்பது போலக் காட்டும். தியானப் பொருளில் ஒன்றிவிடும் நிலை சமாதி. இது நிம்மதி. இதில் எதை அறிய எண்ணினோமோ அதை அறிய முடியும்.

இந்த மூன்றும் இணைந்து ஒரே பொருளில் உண்டானால் அது சம்யமம் என்று முன்பே கண்டுள்ளோம்.

அதாவது தாரணை என்று மனம் குவிப்பதை மட்டும் முதலில் கைப்பற்ற வேண்டும். அது முடிந்த பின், அதையே நீட்டிக்கும் தியானத்திலிருந்து பழக வேண்டும். அது வசப்பட்டபின், சமாதியைப் பயிற்சிக்க வேண்டும். இதன் பின் 2 வினாடி மனத்தைக் குவித்துப் பழகி முடிந்தபின், அதே நிலையின் தொடர்ச்சியை அதன் 2 மடங்கு ஆன 144 விநாடிகள் அப்படியிருந்து அது முடியும் என்றநிலைக்கு வந்தபின் அதன் 12 மடங்கு 29 2/5 நிமிடம் அப்படியே முழுமனமும் இருக்க [illegible] பழக வேண்டும். இது சமாதி.



பிறகு இதை ஒரே பொருளில் காட்டினால் அது **சம்யமம்.** தொடர்ந்து 30 நிமிடம் முழுமனமுமிருந்து ஒன்றை நினைத்தால் அதுவே சம்யமம்.

**சம்யமத்தால் சாதிப்பவை**

சம்யமம் செய்வதில் வெற்றிபெற்று விட்டால் அதைப் பயன்படுத்தி எல்லாவற்றின் அறிவையும் முழுமையாகப் பெற முடியும். அதனால் அனைத்தையும் அடக்கியாளும் வல்லமையும் வரும். ஸ்தூலமானவை நுட்பமானவை என்று உலகில் ஏராளமானவை உள்ளன. படிப்படியாகப் பருப் பொருளிலிருந்து நுட்பப் பொருளில் பெரியதிலிருந்து சின்னது வரை என்று சம்யமம் செய்து அறிவையடையலாம்.

ஸ்தூல, சூக்கும பூதங்களிலும், புலன்களிலும் மூன்று மாறுதல்கள் (பரிமாணம்) உண்டு. தர்மம், லக்ஷணம், அவஸ்தை எனப்படுபவையே அவை.

பஞ்சபூதங்களும் இப்படி காலம், வடிவம், நிலைகளில் மாறுகின்றன. உதாரணமாக நீர், பனிக்கட்டி, நீராவி என்று வடிவில் மாறுவதற்குக் காலம் உண்டு. இது தருமமாகும். இப்படியே ஐம்புலன்களும் இவைக்குரிய மணம், சுவை, வடிவம், தொடுகை, சப்தங்களை அறிகிறவையாக இருப்பதால், அவற்றால் கால, வடிவ, நிலை மாற்றங்களை அடைகின்றன.

இந்த மூவகை மாறுதல்களையும் சம்யமம் செய்வதால் கடந்த, வரப்போகும் காலத்துப் பொருட்களை அறியலாம். இருக்கும் பொருட்களைப் பற்றியும் அறியலாம். ஏனெனில் வடிவம், காலம், நிலை மூன்று சம்பந்தமும் இல்லாத பொருளே இல்லை. இவையும் பிரக்ருதியே.

வடிவில் சம்யமம் செய்தால் முக்காலப் பொருள்களின் உருவம் தெரிந்துவிடும். காலத்தைச் சம்யமம் செய்தால் பொருட்களின் ஆயுள், தோன்றி மறைந்த நடுவில் அடைந்த மாறுதல்கள் தெரிந்துவிடும். நிலை மேல் சம்யமம் செய்தால் எந்த நிலைகளில் இருந்தன என்று தெரியும். அப்பொருள்

RangaRakes

tamilnavarasam.com

உயிரும் உணர்வும் உள்ள சேதனமானால், அவற்றின் சுகதுக்கங்களும் தெரியலாகும்.

இயற்கை ஐம்பூதக்கலப்பால் மொத்தம், பகுதி என வடிவுடன் உலகமாக வெளிப்பட்டதே. முக்குணமும் அதற்கு உள்ளதால் எல்லாப் பொருளும் ஏதாவதொரு நிலையிலேயே இருக்கும். காலமும் பொருள்களைப் பற்றியே நிற்கும்.

இந்த மூன்றின் சம்யமம் செய்யும் மனம் எங்கும் எப்போதும் உள்ள எந்த நிலையிலும், வடிவிலும், காலத்திலும் உள்ள எல்லாப் பொருளையும் அறியும். மேலும் யோகி தன்னுடைய வரப்போகும் காலத்தையும், கடந்ததையும் கூட நிகழ் காலத்துடனே அறிந்து கொள்ள இயலும்.

சம்யமத்திற்கான பொருளின் உட்பொருளை அல்லது உணர்வை அறிந்து கொண்டு அதில் தன் மனத்தை யோகி குவித்து வைக்க வேண்டும். நெடுங்காலம் பயிற்சித்தால் இந்த சம்யமநிலை ஒரு நொடியில் வந்துவிடும்.

இதையே பிறர் மனத்தில் ஊடுருவிப் பார்க்கப் பயன்படுத்தி அவர் மனத்தை நாமறிய முடியும்.

இப்படி உள்நோக்காக உபயோகிப்பவருக்கு தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட சரியான அறிவு உள்ளிருந்தே தோன்றும். இதை intution என்பர்.

**அனைத்துயிர் மொழியறிவு**

'ஒலி' என்பது ஒன்று என எண்ணியிருக்கிறோம். அதற்குப் பொருள், அதிலுண்டாகும் ஞானம் சேர்த்து மூன்றாக இருக்கிறது. இவற்றைத் தனித்தனியாக சம்யமம் செய்து எல்லா உயிர்களின் குரல் வழி வரும் மொழியையும் அறிய முடியும். உதாரணமாகப் 'பசு' என்பது 'கறவைமாடு' என்று பொருள் தரும். 'பால்தரும், சாதுவான மிருகம்' என்ற அறிவையும் தருவதாகும். இவற்றைத் தனித் தனியாக சம்யமம் செய்யச் சொல்லப்படுகிறது. வேற்று மொழிக்காரர், 'பசு' எனில் பொருள், அறிவை அறியமாட்டார். குழந்தைகளும் பசுவைப் பார்த்திராதவரும் அப்படியே அறியார்.

சொல்லின் அதிர்வு, புலனுணர்வு, மனத்தின் எதிரியக்கம் சேர்ந்தே அறிவு ஏற்படுகிறது. சொல், பொருள், அறிவு



மூன்றையும் பிரித்துணரப் பயின்ற பிறகே ஒலியின் மேல் சம்யமம் செய்ய வேண்டும்.

**முற்பிறவி ஞானம்**

முன் வினைத் தொகுதியே (ஏகபாவிகா) இப்பிறவியைத் தந்துள்ளது. எனவே இதைத் தந்த முன்வினைத் தொகுதியை சம்யமம் செய்தால் முற்பிறவி ஞானம் வரும்.

கர்மங்களைச் செய்து வரும் மனிதரிடம் கர்மத்தொகுதி ஏற்பட்டுவிடுகிறது. இது கர்மப் பதிவுகளின் தொகுதி. இதிலிருந்து ஒரு கொத்து இப்பிறவியைத் தந்திருக்கிறது. அது 'ஏகபாவிகா' எனப்படும். இதனைச் சம்யமம் செய்வதால் அதைச் செய்த போன பிறவிகளின் ஞானம் உண்டாகின்றது.

புத்தர் தம் ஐந்நூறு முற்பிறவிகளை நினைவு கூர்ந்தார். இதே போல இப்போதைய கர்மாவை சம்யமம் செய்தால் வரப்போகும் பிறவிகளையும் முன் கூட்டியறியலாம். கர்மங்களை நல்லதாக மாற்றிப் புண்ணியம் செய்தும் பிராயச்சித்தம் செய்து கொண்டும் வரும்பிறவிகளை நல்லதாக மாற்றிக் கொள்ளலாம். யோகம், சரணாகதிகளைப் பண்ணிப் பிறவியே இல்லாமலும் செய்து கொள்ளலாம்.

**மற்றவர் மனம் அறிய**

யாருடைய மனத்தை அறிய வேண்டுமோ அவருடைய உடலமைப்பில் சம்யமம் செய்தால் அறியலாம். சூக்கும உடலே மனம். இதன் வெளிப்பாடே ஸ்தூல உடல். இந்த உடலைத் தயாரித்த விபரக் குறிப்பே மனத்திலுள்ளது. அதுவே, விந்து நிலையிலேயே எது எலும்பு, நரம்பு, மாமிசம், தோல், மயிர் ஆக எப்படி உருவாக வேண்டும் என்பதை எல்லாம் தீர்மானித்தது. இதைத்தான் ஜெனிடிக் என்ஜினியரிங் என்று சொல்வர்.

திபெத்திய லாமாக்கள் நம் உடலைச் சுற்றியுள்ள நுட்ப ஒளி வட்டம் கண்டு மனத்தையும், எதிர் காலத்தையும், வரப்போகும் நோய்களைப் பற்றியும் கூறுவர்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்வாமி விவேகாநந்தர் சீடராக நரேந்திரனாக இருக்கும் போதே அவர் உடலைக் கண்டு அவர் மிகப் பெரிய நிலையை அடைவார் என்று கூறினாராம்.

RangaRakes tamilnavarasam.com

இப்படி சம்யமம் செய்து பொதுவான அடிப்படை மனத்தை அறிந்து, அந்த மனத்தை சம்யமம் செய்தே அதிலுண்டாகும் ஆசை, திட்டங்கள், நோக்கங்களை அறிய வேண்டும். இருவகை சம்யமங்கள் இதற்குச் செய்யப்பட வேண்டும்.

**பிறர் கண்ணுக்கு மறைதல்**

யோகி தன் உடலின் தோற்றத்தின் மேல் சம்யமம் செய்து, அதைப் பிறர் கண்கள் கிரஹித்து அறியக் கூடாது என்றெண்ணி, தன் உடலிலிருந்து செல்லும் ஒளி பிறர் கண்ணிலிருந்து கிளம்பும் ஒளியில் படாதவாறு தடுத்துக் கொண்டு விடுவர். இது அந்தர்த்தான வித்தை.

பொருள் முன்னாலிருக்கும் போதும், கண்கள் திறந்திருக்கும் போதும்தான் பொருளைப் பார்க்க முடியும். இது பொருளிலிருந்து புறப்படும் ஒளியும், கண்களிலிருந்து போகும் ஒளியும் சந்தித்ததாலேயே காட்சி என்பதை விளக்கும். இந்த சந்திப்பை தடுத்துவிட்டாலேயே பொருளைக் காண முடியாது. இப்படிச் செய்ய சம்யமத்தால் முடிந்த யோகியைப் பிறர் கூடவே இருந்தாலும் பார்க்க முடியாது.

இதே போல தன் ஒலியில் சம்யமம் செய்து பிறர் தம் பேச்சைக் கேட்க முடியாமலும்,

தம் மணம் மேல் சம்யமம் செய்து வாசனையைப் பிறர் உணர முடியாமலும்,

தம் தொடுகை மேல் சம்யமம் செய்து, தாம் தொட்டாலும் அறிய முடியாமலும், தம்மைத் தொட முடியாமலும் எல்லாம் செய்து கொள்ள முடியும்.

**புகழும் மதிப்பும் ஏற்பட**

நட்பு, கருணை ஆகிய நல் குணங்களில் சம்யமம் செய்து உலகம் முழுதும் நட்புனிருக்க, கருணை தன் மேல்காட்டச் செய்து கொள்ளலாம். மேலும் தம்மாலும் உலகளாவிய நட்புகாட்டவும், எல்லாரிடத்தும் கருணை உடையவராக இருக்கவும் முடியும். நட்பால் பகையையும் கருணையை சம்யமம் செய்வதால் கொடூரத்தையும் விட முடியும். இதே போல், பிறரிடமும் குணமாற்றத்தை நிகழ்த்த முடியும்.



இதனால் எல்லாம் உலகளாவிய புகழும் நன்மதிப்பும் தம் மேலுண்டாகச் செய்து கொள்ள முடியும்.

**பலம் ஏற்பட**

எதையும் தூக்கிச் செல்லும் பலமுள்ளது வாயு. 'கரிமா' எனப்பட்ட சித்திபோல மிகப் பலமுண்டாக பலம் மிக்க வாயுபோன்ற எதில் சம்யமம் செய்தாலும், அந்தப் பலம் நமக்கு உண்டாகிவிடும். கடலைத் தாண்ட வேண்டிய பலம் வடிவத்தில் சம்யமம் செய்த அனுமான் அப்படியே பெரிய வடிவையும், பலத்தையும் அடைந்தார். யானை, கருடன், வாயு, அனுமான், வாயு வை சம்யமம் செய்தால் அவர்களின் பலம் வந்துவிடும்.

இதே போல 'இலஹிமா' என்று எடை குறைந்து இலேசாக எடையற்ற பொருள்களை சம்யமம் செய்யலாம். பஞ்சை காற்றை சம்யமம் செய்யலாம். ஆகாயத்தைக் கூட சம்யமம் செய்து எடை குறைந்தநிலையடையலாம். அந்தரத்தில் நிற்க, நீர் மேல் நடக்க, ஆகாயப் பயணம் செய்ய இதுவும், குண்டாக இருக்கும் பெண் இளைத்துக் கல்யாணம் நடக்கவும் இந்த சம்யமம் உதவலாம்.

**மறைவற்ற அறிவிற்கு**

தீப ஒளியில் சம்யமம் செய்ய நுட்பமான மறைந்துள்ள தொலைவிலுள்ள காலத்தால் அறிய முடியாமலிருக்கும் பொருளறிவை அடையலாம்.

இதயத்தில் ஒளியில் சம்யமம் செய்து மலைகளால் மறைக்கப்பட்ட அப்பாலுள்ள தேசங்கள், மஹாமேரு போன்ற, துருவங்கள் பற்றிய அறிவை உள்ளபடி யறியலாம். பூமிக்குள் புதைந்திருக்கும் புதையல், பொன், வைரச் சுரங்கங்கள், பெட்ரோல், பிற கனிமங்களையும் கண்டறியலாம். அணுவிற்கும் சிறிய பரமாணுவின், ஆத்ம, பரமாத்மா ஞானத்தையுமறியலாம்.

இதயத்தில் கட்டை விரலளவில் தீபம் போன்று பிளந்து சம்யமம் செய்ய வேண்டும்.

**உலக அறிவிற்கு**

சூரியனைச் சார்ந்துதான் சூரியவட்டத்தில் (Solar system) உள்ள கோளங்களுள்ளன. ஆகவே, சூரியனில் சம்யமம் செய்தால் எல்லாக் கோள்களின் அறிவும் கிட்டும். மேலும் எண்ணற்று விண்வெளியில் இறைந்து கிடக்கும் நட்சத்திரக்

RangaRakes

tamilnavarasam.com

கூட்டங்களில் ஒன்றே சூரியனும். ஆகவே பிற சோலார் அமைப்புக் கோளங்களையும் பற்றி அறிவு பெற சூரியனில் சம்யமம் கூறப்படுகிறது.

ரிஷி யாக்ஞவல்கியர் சூரிய மண்டலம் சென்று வேத அறிவைப் பெற்றதாகச் சொல்கிறார். ஸ்ரீ ஆஞ்சநேயரும் சூரியனிடமே அனைத்தையும் கற்றவர் எனப்படுகிறது. தினசரி காயத்ரீ மந்திரத்தால் சூரியனைப் பரமாத்மாவுடன் உபாசித்த பிராமணரும் அறிவைப் பெறுகின்றனர்.

வெப்பமிக்க நாட்டு மக்கள் அறிவில் சிறந்து விளங்குவதாலும், சூரியனுக்கும் அறிவிற்கும் உள்ள தொடர்பை அறியலாம்.

**நட்சத்திர அறிவு பெற**

நட்சத்திரங்களின் அறிவைப் பெற சந்திரனின் மேல் சம்யமம் சொல்லப்பட்டுள்ளது. இரவும் நிலவால் ஒளிபெறும் போதே நட்சத்திரங்கள் வானில் நன்கு தெரிகின்றன. இதனால் நிலவை சம்யம் செய்யக் கூறப்பட்டது.

**நட்சத்திர சலனம்**

நட்சத்திரங்கள் ஓரிடத்திலேயே நிற்பதில்லை. ஆகவே சலனமற்று நிற்கும் துருவ (நட்சத்திரமே)ன் மேல் சம்யமம் செய்து எத்திசையில் எந்த நட்சத்திரம் நகருகிறது என அறியலாம். நட்சத்திரப் போக்கால் கடலில், வானில் போவோர் திசையறிவர். இதற்குத் துருவனும் சப்தரிஷி மண்டலமும் உதவுகின்றன. இதனால் காலமும் அறியப்பட்டு ஜோதிட சாத்திரமும் உண்டானது.

**உடலமைப்பை அறிய**

பழங்காலத்திலிருந்தே, உடலமைப்பை முழுதும் அறிந்த நம் முன்னோர் மருத்துவத்தில் மிகவும் சிறந்த சாத்திரங்களை ஆக்கி வைத்துள்ளனர். எட்டுவகை சிகிச்சை முறை நம்மிடம் உண்டு. மனோதத்துவ சாத்திரமாக யோகமும் உள்ளது.

உடல் உறுப்புகள் எல்லாம் நம் தொப்புள் பகுதியிலேயே தொடர்பு கொண்டிருக்கின்றன. 'சோலார் ப்ளக்ஸஸ்' (Solar pluxes) உள்ளது. உடலின் 72,000 நாடிகளும் இங்கே முடிகின்றன. இதனால் இந்த ஆதாரத்தை மணிபூரஹம் என யோகம் கூறும்.



தாயின் கருப்பையுள்ளிருந்த போது இந்த [illegible] (தொப்புள் கொடி) மூலமே தாயுடன் தொடர்பிருந்தது இவ்வளவு முக்கியமான இங்கே சூரியனுடன் தொடர்புண்டு என்பதால் இந்த இடத்தில் செய்யும் சம்யமத்தால் நாபிக்கு உள்வெளி உடலமைப்பு நன்கு தெரியவருகிறது. 'காயவ்யூஹ' ஞானம் வரும் என்பதால் பிற உடல்களின் அமைப்பும் தெரியலாம்.

**மனம் நிற்க**

நம் நெஞ்சின் பகுதியில் கூர்ம நாடீ என்று ஒன்றுள்ளது. இதில் சம்யமம் செய்தால் மனம் அலையாமல் நிற்கும். தாரணை, தியானம், சமாதி பெற்று சம்யமம் அறிய இது உதவும். மந்தாரமலை கடல்கடையப்பட்ட போது கடலில் மூழ்காமல் தாங்க, திருமாலே கூர்மமாக (ஆமையாக) அவதரித்து இருந்தார். எனவே அசையாமல் கடல் போல, அலைபாயும் மனம் அடங்க கூர்ம நாடீ சம்யமம் கூறப்படும். இந்த நாடீயின் அமைப்பு ஆமைபோல இருக்குமாம்.

**பசி தாகம் வெல்ல**

உள்நாவின் அடியில் ஒரு பள்ளம் உண்டு. இதைக் கண்ட கூபம் என்பர். இதை சம்யமம் செய்வதால் நம்முடைய பசி, தாகம் அடங்கும் எனப்படுகிறது. தொண்டைக் குழி எனும் இடமே கண்ட கூபம். ஜீவபாவனையின் இடம் தொண்டை. இந்த பாவ இயல்பான பசிதாகம் வெல்லப்படுகிறது. பசிதாகம் படுத்தும் பாட்டையறிந்தவர் இவற்றை அடக்கும் வழியை வரவேற்பர். இருபத்து நான்கு மணி நேர கேண்டீன் போலச் சிலர் தின்று கொண்டே இருப்பர். அது அவர்கள் வாங்கி வந்த வரம். நல்ல மிஷினாக இருப்பர். ஆனால் இப்படி இருந்தால் யோகம் வராது. அதனால் சம்யமம் செய்து பசி, தாகத்தை அடக்க வழியிது.

**மனம் பற்றியறிய**

இதயம்தான் சிசு பிறக்க கருப்பையில் உடலாக உண்டான முதல் உறுப்பு. ஏனெனில் மூளை முதலிய பிற முக்கிய உறுப்புக்களுக்கு இரத்தம் அனுப்பப்பட வேண்டுமே. மனம் என்றவுடன் நெஞ்சு என்பர். மார்பையே பிடித்துக் கொள்ளுவோம்.

RangaRakes
tamilnavarasam.com

எனவே மனம் பற்றியறிய பூர்வ வாசனையுடன் சித்தம் பற்றிய அறிவு உண்டாக இதயம் மேல் சம்யமம் கூறப்படுகிறது. சம்யமம் செய்வதும் மனம்தானே!

**அதீதப் புலனாற்றலுக்கு**

புருஷன் தான் ஜீவராகிய நாம். நமக்காக நம்மால் ஏவப்பட்டு வேலை செய்வது நம் புத்தி. இந்த இரண்டையும் இப்படிப் பிரித்து நன்கு உணரவேண்டும். இதில் சம்யமம் செய்யவேண்டும். இது ஜீவராகிய நம்மைப் பற்றிய ஞானம் தருவது. புத்தி என இங்கே 'மஹத்' எனும் பிரக்ருதியே கூறப்பட்டது. இது அறியாமை, அவித்தை எனப்படும். இத்துடன் இணைந்தியங்கும் ஜீவன் சம்சாரமடைந்து சக்தி குறைந்தவனாகிறான். அஹங்காரத்திலிருந்து 'நான் பிரக்ருதி' என்ற உணர்விலிருந்து விடுபட்ட போது ஜீவனாகிய புருஷன் ஞானம் ஒளிருகிறது. இதில் உண்டாகும் ஜீவனை சம்யமம் செய்து நம்மைப் பற்றிய ஞானமடைகின்றோம்.

இந்த சம்யமத்தினால் பிரதிபா ஞானம் ஏற்பட, ஐம்புலன்களிலும் அதிக ஆற்றலுண்டாக, பார்ப்பதில், கேட்பதில், தொடுவதில், மணப்பதில், சுவைப்பதில் அதீத சக்தியுண்டாகும்.

அதாவது இந்தப் புலன்களைப் பயன்படுத்துவதில் காலமோ, இடமோ எத்தடையும் உண்டாக்காது.

பூனை, ஆந்தை குறைந்த ஒளியில் பார்க்கக் கூடியவை. நம்மால் முடியாது. அதிக ஒளியிலும் நம்மால் காண முடியாது. இப்படியின்றி மிகக் குறைந்த மிக அதிக ஒளியிலும் காண முடிந்தவராவோம். பிற புலனுணர்வுகளிலும் இப்படியே ஆகும்.

உண்மை என்னவெனில் புலன்கள் போகும் உடல் பொறிகளின் உதவியே இல்லாமல், புருஷன் நேரடியாக எல்லாம் அறிய வல்லவனாவான்.

**சித்தர் காட்சி**

தலையுச்சியில் ஏழாம் ஆதாரமான 'சஹஸ்ராரம்' என்ற ஆயிரமிதழ்த் தாமரை உள்ளது. இந்த இடத்தில் சம்யமம் செய்தால் சித்தர்கள் தரிசனம் ஏற்படும். யோகம் செய்பவரைச் சித்தர் எப்போதும் வாழ்த்துவர்.



அவர்களைத் தரிசிக்க வேண்டும். மாணாக்கர் [illegible] ஆசியும், யோகசித்தி பெற வழிகளையும் உபதேசம் பெறுவர்.

தலையிலிருந்து கிளம்பும் ஒளியில் இப்படி யோகசித்தரைக் காணலாம். ஏனிப்படித்தான் செய்து தரிசிக்க வேண்டுமா என்றால், சித்தர் பிறர் கண்களில் படாமல் திரிவர். மேலும் இறந்தும், முக்தியடைந்தவரையும் கூடக் காணும் வழி இது.

**கூடுவிட்டுக் கூடு பாய்தல்**

சித்தம், உடலிலடைக்கப்படக் காரணம் பந்தம் எனப்படும். இதைத் தளர்த்தி யோகி தன் உடல் நாடிகளில் சம்யமம் செய்து வேறோர் உடலில் நுழைகிறான்.

இறந்தவருடலிலும் உயிருடனிப்பவரின் உடலிலும் இப்படி நுழையலாம். இது பரகாய ப்ரவேசம் எனப்படும். விக்கிரமாதித்தன் கதையில் இது வரும். ஆதி சங்கராச்சாரியார் செய்து உள்ளார்.

தன் உடலைவிட்டு பிராணன், மனம், புலன்களுடன் முழு ஆவியுடலை வெளியே கொண்டு வந்து செய்யவேண்டியதை முடித்துவிட்டு மீண்டும் ஸ்தூல உடலில் நுழைந்திட வேண்டும். இதற்காக ஸ்தூல உடலுடன் ஆவி உடலுக்கு ஓரிணைப்பு சில்வர்கார்டு என்றிருக்கும். இது அறுந்துவிட்டால் ஸ்தூல உடலுள் மீண்டும் வர முடியாது.

இதைக் கற்ற யோகி தூரதூர இடங்களுக்கும் போய் வர முடியும். இது போல உடலை விட்டு வெளியே வருபவர் எந்த உயிரின் ஸ்தூல உடலிலும் குறிப்பிட்ட நாடி மூலம் (Pineal Guard) மூலம் நுழையலாம். தான் நுழையப் போகும் உடலையும் சம்யமம் செய்யவேண்டும்.

சித்தம் பிரபஞ்சம் முழுவதும் பரவியிருப்பதால் அதையறிந்த யோகிக்கு எங்கும் போவதும் திரும்புவதும் சாத்தியமாகிறது.

ரிஷி யாக்ஞவல்கியர் இப்படித் தம் நுட்ப உடலில் சூரிய மண்டலம் சென்று வித்தை (சுக்லவேதம்) கற்றுத் திரும்பி வந்தார் என்பர். இந்த சூட்சும உடல் 17 தத்துவமுள்ளது. ஸ்தூல உடல் 7 தத்துவம்.

பிராணனைத் திரட்டித் தலை உச்சிக்கு நாடிகளால் கொண்டுவந்து சம்யமப்படி வெளியே போய் நினைத்த உடலின் உச்சி வழியே இறங்கிட சம்யமம் முக்கியம்.

RangaRakes
tamilnavarasam.com

### வாயு வெற்றி நன்மை

ஒரு பிராணன் உள்ளே உடலில் பிராணன், அபானன், சமானன், வியானன், உதானன் என்று ஐந்தாக உள்ளது. இருக்கும் இடம், செய்யும் வேலைக்கு ஏற்பப் பெயர்கள் அமைகின்றன.

**பிராணவாயு :** வெற்றியால் ஆயுளும் ஆற்றலும் அதிகமாகும். புலன்கள் கூர்மையாகும். முகமும் ஒளியோடிருக்கும். அபான வாயு வெற்றியால் உடலில் பலம் பெருகும். மலமூத்ராதிகள் நன்கு வெளியேறும். உடல் எடையை அதிகமாக்க முடியும். கீழ் முகமாகச் செல்லும் இதை மேலேற்றி மேல் முகமாகப் போகும் பிராணனைக் கீழே செலுத்தி இரண்டையும் கலக்கச் செய்து குண்டலினி சக்தியைக் கிளப்பலாம். இது யோகியை மிக வல்லவனாக்கும்.

**உதானவாயு :** வெற்றியால், நீரில் மூழ்காமலும் காற்றில் பறக்கவும், ஆகாயத்தில் பயணம் செய்ய வல்லவராகவும் ஆகலாம். ஏனெனில், இவ்வாயு எப்போதும் மேல் நோக்கிச் செல்வதேயாகும். சுவாசிக்கும் நுரையீரல்களை, சரீரத்தின் மேல்பாக உறுப்புக்களைப் பார்த்துக் கொள்வது. எப்போதும் மேல் நோக்கிச் செல்லும் இது உடலைப் புவியீர்ப்பிற்கு எதிராக இலேசாக்கிக் கொள்ள முடியும். சேறு, ஆழமான நீர், முட்கள் இவற்றில் உடலை அழுந்தாமல் ஆபத்தின்றிக் காப்பாற்றும். மூச்சுப்பையைப் பார்த்துக் கொள்ளும் இந்த உதான ஜெயம், மின்சக்தியாக இருப்பதால் ஒருவர் மரணத்தைத் தம் விருப்பப்படி அமைத்துக் கொள்ள உதவும்.

**சமான வாயு :** வெற்றியால் உடலிலிருந்து விரும்பும் போது ஒளியைப் பாய்ச்ச முடியும். இது உடலைச் சுற்றிய ஒளிவட்டம் அமைக்கும். வெளிநாட்டில் கூட ஒரு சிறுமியின் தலையைச் சுற்றி உண்டானதாம். அது ஊதாநிறமாக இருந்ததாம். சமான வாயுவே இதன் காரணம்.

**வியான வாயு :** ஜெயம். உடலில் பிராணன் சமமாக இருக்கச் செய்யும். ஜீரணமான சக்தியை உடலெங்கும் சமமாகக் கொண்டு சேர்க்கும். எங்கெங்கே பிராண சக்தி எவ்வளவு இருக்க வேண்டுமோ அதற்குக் குறையாமலும் மிகாமலும் இருந்திடச் செய்யும்.



### தூரசிரவணம்

கேட்டல் என்பது சப்தவிஷயம். இது ஆகாய பூதத்தைச் சேர்ந்தது. எனவே கேட்க உடலிலமைந்துள்ள செவிப் புலனுக்கும் ஆகாயத்திற்கும் உள்ள தொடர்பை சம்யமம் செய்வதால் திவ்ய சுரோத்திரம் வாய்க்கும். மனமே ஒலியை அறிவதானாலும் செவிப்புலன் வழியாகத்தான் அறிகிறது. ஒலியின் காரணபூதம் ஆகாயமே.

ஒலியைக் காற்று கடத்துவதாகத் தானுள்ளது. இதனாலேயே காற்று இல்லையேல் சப்தம் கேட்பதில்லை. மின் சக்தியால் ஆகாயம் மேகங்கள் மோதிக் கொள்ளும் போது உடைபடுவதே சப்தமிடும் இடியாகும். சுற்றுப்புறத்தில் ஏற்படும் சப்தத்தைக் கேட்க ஆகாய அம்சமாகவே இன்னொன்றுண்டு. இதுவே செவி. இந்தத் தொடர்பை சம்யமம் செய்வதால், எங்கும் உள்ள ஆகாயத்தால் தூர நடப்பதையும் கேட்க முடிகிறது. நேரில் கேட்பது போல மிகத் தொலைவிலுண்டாகும் ஓசையும் கேட்கும். மானசிகமாகவும் கேட்கும்.

### ஆகாயகமனம்

ஆகாயத்திற்கும் உடலுக்கும் தொடர்புள்ளது. இதை சம்யமம் செய்து இலேசாகி வானில் எழும்பிச் செல்ல முடியும். இலேசான காகிதம், துணி, பஞ்சு போன்றவற்றில் சம்யமம் செய்தும் இப்படி வானில் பயணிக்கலாம். ஆகாயத்தில் உடலுள்ளது. உடலுள்ளும் ஆகாயமுண்டு. ஆகாயத்தில் ஊடுருவிச் செல்லக் கூடியவரான நாம் இத்தொடர்பை சம்யமம் செய்தால் இதைச் சாதிக்கலாம்.

### ஞானத் தடை நீங்கல்

சுற்றுப்புறத்தையும் உடலையும், தன்னையும் கற்பனையில்லா எண்ணத்தையும் சம்யமம் செய்தால் தானும் உடலும் வேறு எனத் தெரியும். உடலாக உள்ள பஞ்சபூதமே சுற்றுப்புறப் பிரபஞ்சத்தையும் உண்டாக்கியுள்ளது. ஆகவே இந்த இயற்கையான ஜடப்பொருளும் உடலில் பிணைந்துள்ள ஜீவனும் வேறு எனப்புரியும். உலகமான இயற்கையே உடலும். இது மிகப் பெரியது. ஜீவன் அணுப்போலச் சிறிது; இந்த உடல் நான் இல்லை என்று விரியும் ஞானம். எதனால் இப்படி ஜீவன் உடலில் அடைந்தது? உடல், ஜீவன் இந்த இரண்டையும்

RangaRakes
tamilnavarasam.com

அடக்கியாளும் பரம்பொருள் வேறு. இப்படி மூன்று உண்மைகள் விளங்கும். இப்படி ஒவ்வொருவருக்கும் உள்ள கர்மாவே பிறப்பு இறப்பின் காரணம் எனப் புரியும்.

'ஜடப் பொருளான உடலே நான்' என்று எண்ணுவதே ஞானத்தை மறைக்கும் தடை. இது நீங்கினால் ஞானம் வருகிறது. நான் உடலில்லை என உணர்ந்த பிறகு, உடலுக்கு வெளியேயும், பிற உடல்கள் மூலமும் இயங்கும் பிராகாமிய சித்தி உண்டாகிறது.

இப்படி எல்லா உடல்களையும், பொருள்களையும் பயன்படுத்த முடியும்.

**பஞ்சபூத வெற்றி**

ஸ்தூலம், ஸ்வரூபம், சூட்சுமம், அந்வயம் (உபதேசம்) குணம் ஆகியவற்றில் சம்யமம் செய்வதால் பஞ்ச பூதங்களின் வெற்றியுண்டாகிறது.

இதனால் பஞ்சபூதங்கள், அவற்றாலுண்டான பொருள்கள், இந்தப் பிரபஞ்சம், உடல், மனம் எல்லாவற்றின் அறிவும் ஏற்பட்டுவிடும். படிப்படியாக ஸ்தூலம் நுட்பமானவை என சம்யமப் பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதனால் எண் பேராற்றல்களும் சித்திகளாக விளையாடுவதை நம்மை வசப்படுத்த இயற்கை ஆடும் திருநடனமாகக் காணலாம்.

அழகான வடிவம், வீர்யம், இளமை, உறுதி மிக்க உடல் எல்லாவற்றையும் காயசம்பத்தாக இயற்கை வழங்குகிறாள். இதனால் மரணம் சம்பவிக்காது.

ஸ்ரீ ஆஞ்சநேயர், தேவரிஷிநாதர் போன்ற மொத்தம் ஏழுபேர் இன்னும் இப்படியே இருப்பதாகக் கூறப்படுவர். ஸ்ரீ ஆண்டாள், சீதாதேவி உடலுடன் மறைந்துவிட்டவர்கள்.

பிற சிரஞ்சீவிகள் விபீஷணர், பிரஹலாதன், சஞ்சயன், அஸ்வத்தாமா, மார்க்கண்டேயர் ஆவர்.

எல்லாரும் ஆநந்தமும் அறிவும் பெறட்டும்!

□

RangaRakes tamilnavarasam.com